d: M. 1803. Vol. III—No. 2.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 NOV 1920
MADR

லக்ஷ்மி

சொந்தக்காரர்கள் :
கே. எஸ். முத்தையா & கோ., சென்னை.

குஞ்சம் கட்டின

பட்டு லேஞ்சிகள்

நைஸான பட்டு, உடல் திக்கானது. பல வருடங்கள் உழைக்கும். பல வித மேகவர்ணக் கலர்கள், வெள்ளை, நீலம், சந்தனக் கலர் முதலிய பல கலர்கள்.

5 மு × 40 1-க்கு ரூ. 10, 12, 14, ..

ஷை ஜரிகை கரைகள் போட்டது ரூ. 14 முதல் 18 வரை.

இமிட்டேஷன் ஸில்க் புடவைகள்

இந்தப் புடவைகளைப் பார்த்தால் அசல் பெங்களூர் பட்டுப் புடவைகளைப் போல் இருக்கும். கலருக்கு உத்திரவாதம். கலர்:—அரக்கு, மஞ்சள், கருப்பு, நீலம் முதலிய கலர்கள்.

18 மு × 2½ அகலம் புடவை 1-க்கு ரூ. 12, முதல் 20.

எங்களிடம் சேலம், மதுரை, கோரநாடு, கராச்சி, காசி முதலிய ஊர்களி லிருந்து புதுமாதிரியான பல ரகங்கள் ஏராளமாய் வந்திருக்கின்றன. நீங்கள் வேறிடங்களுக்குப் போகுமுன் ஒரு முறை எங்களிடம் வந்து பாருங்கள்.

வலைப் பனியன்

போத்தானில்லாதது நைஸானது

பனியன் 1-க்கு ரூ. 1, 1-4, 1-8.

கே. எஸ். முத்தையா & கோ.,

சில்க் ஹவுஸ்,

188, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,

சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF
19 NOV 1925
MADRAS

ஓம்

லக்ஷ்மி

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

சித்திரப் படங்களுடன் கூடியது.

பத்திராதிபர் : கே. எஸ். முத்தையா.

மலர் ௩. | குரோதனஸ்ரீ புரட்டாசிமீ 1925 செப்டெம்பர் | இதழ் ௨.

அட்டவணை.

		பக்கம்.
1.	லக்ஷ்மி துதி	55
2.	நாட்டு வணக்கம்	56
3.	அற நெறியும் தவ மாண்பும்	57
4.	அன்பே சிவம்	60
5.	நாட்டின் நலன் விழைதல்	63
6.	தீப் பாய்ந்த திருமகள்	65
7.	கொடுங் காற்று	68
8.	வைதீகங்களிலுள்ள ஆபாஸ முறைகள் ...	74
9.	பிலிப்பைன் தீவுகள்	80
10.	இயற்கையின் உயர்வு	84
11.	அறிவின் பயன்	86
12.	புல்	94
13.	புகையிலை	96
14.	தூக்கம் அவசியமா ?	101
15.	மாமிச போஜனம் மனிதருக் காகாது ...	102
16.	ப்ராமணன்	104

லக்ஷ்மி

சந்தா விவரம்.

உள் நாட்டுக்கு வருடம் 1க்கு இந்தியா, பர்மா, சிலோன்	ரூ. 2 0
வெளி நாட்டுக்கு வருடம் 1க்கு சிங்கப்பூர், பினாங்கு, மோரீஸ் முதலிய வெளி நாடுகளுக்கு	ரூ. 2 8

தனிப்பிரதி அணா 4.

நமது "லக்ஷ்மி" ஒவ்வொரு ஆங்கில மாதம் முடிவிலும் வெளியாகும் என்ற விஷயத்தை நேயர்கள் கவனிப்பார்களாக! பத்திரிகை கிடைக்காதவர்கள் மறுமாதம் 10உக்குள் நமக்குத் தெரிவிக்கவேண்டும். அதற்கு மேல் கவனிக்கப் படமாட்டா.

மானேஜர்.

உங்கள் புத்தகசாலை பூர்த்தி யாகாது?

லக்ஷ்மி இதழ் 12-ம் காலிகோ பைண்டு செய்யப்பட்டு, கில்ட் டெழுத்துடன் கூடிய 'லக்ஷ்மி' மலர் ஒன்றுக்கு ஆர்டர் செய்யுங்கள். 800 பக்கங்கள் 30 படங்கள் உள்ளது. புஸ்தகம் வைத்துக் கொள்வதற்கு அழகான பெட்டியுடன் விலை ரூ. 3. தபாற் செலவு வேறு.

சொற்ப காபிகளே கைவச முள்ளது.

முந்துங்கள்.

மானேஜர் "லக்ஷ்மி" ஆபீஸ், தபால் பெட்டி 99, சென்னை.

ஓம்

லக்ஷ்மி துதி

கமலாதனத்தின் சேய் நெடுமானின்
    கணவ னரன்
சமமான சோதரன் மற்றோ ரெல்
    லாந் தொழத்தக்க தொண்ட
எமதீன வன்கலி தீர்த்தாள்
    வதிற்றடை யா துளதே
வமலே நன்று மவை குன்
    றுததா மெய்யருட் செல்வியே.

நாட்டு வணக்கம்

செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சி னிலே—ஒரு
சக்திபிறக்குது மூச்சினிலே-எங்கள் (செந்தமிழ்)

நீலத் திரைக்கட லோரத்திலே—நின்று
நித்தந் தவஞ் செய் குமரி யெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ் நாடு (செந்தமிழ்)

கல்வி சிறந்த தமிழ் நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ் நாடு—நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின் மணம்
பாரெங்கும் வீசுந் தமிழ் நாடு (செந்தமிழ்)

வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதி கார மென் றோர்மணி
யாரம் படைத்த தமிழ் நாடு (செந்தமிழ்)

பாரதி.

அறநெறியும் தவமாண்பும்.

(பண்டிதை ஸ்ரீமதி ந. பத்மாசனி அம்மாள் எழுதியது.)

உலகின் கண்ணே தோற்றுகின்ற பல் வகைப் பிறவிகளுள் மானிடப் பிறவியே மிகச் சிறந்தது.

"எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்
யாதினு மரிதரிது காண்"

எனத் தாயுமான சுவாமிகளும்

"அரிதரிது மானிட ராத லரிது"

என ஔவைப் பிராட்டியாரும் திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றனர். கிடைத்ததற் கரிய இந்த மானிட சென்மம் எடுத்தவர்களுக்கு இன்றி யமையாதனவாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்கள் இருக்கின்றன. இந்த நான்கு புருஷார்த்தங்களுள் அறமே ஏனைய மூன்றினுஞ் சிறந்தது. (அறம் தருமம் என்பன ஒரு பொருட் சொற்கள்)

"தருமமே உலகம் போற்றச் சகல காரணம தாகும்,
தருமமே தனை வேட்டோர்க்குச் சௌக்கிய மனைத்து நல்கும்,
தருமமே யழியா தென்றுந் தாபர மாகி நிற்கும்,
தருமமே முக்தி சேருஞ் சதான மென்றுட் கொள்வான்."

எனப் பெரியோரும் பணித்திருக்கின்றனர். ஆதலால் நாம் தருமநெறி கடைப்பிடித் தொழுகுதலே முக்கிய கடமையாகும்.

தருமநெறியை ஒழுக்கம், வழக்கு, தண்டம் என மூன்றாய்ப் பிரிக்கலாம். இவற்றுள் முதற் கூறப்பட்ட ஒழுக்கமே மிகச் சிறந்தது. வழக்குத் தண்டம் என்னும் இரண்டையும் உலக இயற்கையால் நன் குணரலாம். ஒழுக்கம் என்பது சாஸ்திரங்களாலும் பெரியோர் போதனையினாலுமே அறியக் கிடந்த தொன்றாம்.

ஒழுக்க நெறியாவது விதித்தன செய்தலும் விலக்கியன ஒழித்தலுமாம். இவ்வொழுக்க நெறியில் வாழ்

210353

பவனே கடவுளுடைய அருளைப் பெறுவான். அவனே யோகி, அவனே இம்மை மறுமை யின்பங்களுக் குரியவன். இதனை யன்றோ,

"பொறிவாயி லைந்த வித்தான் பொய்தீரொழுக்க
நெறிநின்றார் நீடு வாழ்வார்"

எனத் திருவள்ளுவ நாயனாருங் கூறி யுள்ளார்.

ஈகை, அன்பு, கொல்லாமை, உண்மை யுரைத்தல், பெரியோரைப் பேணல் முதலான யாவும் ஒழுக்கச் செயல்களே. இறைவனுக்குத் தகுந்த மெய்யடியாரான நாயன்மாரெல்லாம் ஒழுக்க நெறி நின்றே மேலான பதவிகளைப்பெற்றனர். நாம் நமது இல்லங்களி லிருந்தே உய் வடையத்தக்க நல்ல வழி யிருக்க அங்கு மிங்கும் அலைந்து வருந்தவேண்டிய தெற்றிற்கு? இல்லத்திலிருந்து கொலை களவு முதலான பாதகங்களை யெல்லாஞ் செய்து விட்டுக் காசி யாத்திரையும் சிதம்பர யாத்திரையும் செய்தாற் பயன் உண்டாகுமா?

நம் தேசத்திலே சிலர் பாவம் நீங்க வேண்டுமென்றோ அன்றி வே றெப் பயன் கருதியோ அறியேம்—கந்தசஷ்டி, சிவராத்திரி முதலான பற்பல விரதங்களையு மனுஷ்டிக்கின்றனர். விரதம் நிறை வேறிய அடுத்த தினமே விரதம் அனுஷ்டித்த மையால் உடம்பு வாடிப் போயது என்று, ஆடு கோழி முதலான ஜீவப்பிராணிகளை வதைத்து அதன் ஊனைப் புசிக்கின்றனர். இன்னோர் குளிக்கப் போய்ச் சேறு பூசியாங்குப் புண்ணியந் தேடப் போய்ப் புண்ணியத்திலும் அதிகமான பாவத்தைச் சம்பாதித்தனரே யன்றி வேறெந்த நற்பயனைப் பெற்றனர்?

இன்னும் நம் தேசத்தவர்களி லநேகர் தேவாலயங்களில் தாசிகள் நடனம், வாணவேடிக்கை முதலான பற்பல வீணை வேடிக்கைகளுடனே திருவிழா நடத்துகின்றார்கள். தீர்த்த யாத்திரை ஸ்தல யாத்திரை செய்கின்றார்கள். இவை போன்ற பிற கருமங்களையுஞ் செய்கின்றார்கள். ஆனால் வீட்டில் பசியினால் மிக வருந்தி ஒரு யாசகன் வந்தால் அவனை வாசலுள்ளும் புகவிடாமல் வெளியே துரத்தி விடுகின்றார்கள். ஸ்நானஞ் செய்து விபூதிக் குறி தேகமெங்கும் பிரகாசிக்கச் சிவாலயங்களுக்கு மிக்க பரிசுத்தத்துடன் செல்லுகின்றார்கள். ஆனால், வழியில் ஒரு வயோதிகன், நோயாளி, அன்றி ஒரு மிருகம் அபாயமான நிலையிலிருத்தலைக் கண்டால், அடி அம்மா, நான் சிவாலயத்

துக்குப் போய் சுவாமி தரிசனஞ் செய்ய வேண்டும், இந்த இடத்துக்குப் போனாலும் சுவாமி தரிசனம் தடையாகப் போய் விடும் என்று சொல்லிக் கொண்டே தூர விலகிப் போகின்றார்கள். அந்தோ ? இவைகளெல்லாம் ஒழுக்க நெறியாகுமா? கடவுளோ விருப்பு வெறுப்பு அற்றவர். எல்லாம் நிறையப் பெற்றவர். எல்லாம் தாமே யாகி யுள்ளவர்; அன்பே உருவாக வுள்ளவர், ஆன்மாக்கள் தோறும் வியாபித் திருப்பவர். இத்தன்மையார் இவ்வுருவர் இவ்வண்ணத்தார் என்று நாட்டுதற் கரியவர். நாம் அவருக்கு செய்யும் தொண்டுகளை நம்முடைய அன்புக்காக ஏற்றுக்கொள்வாரேயன்றி அவருக்கே அவைகளின் மேல் விருப்பமில்லை. வெறுப்பு மில்லை. ஆதலால் அக்கடவுள் உறைவிடமாகக் கொண்டிருக்கும் கோயில்களான உயிர்களெல்லாம் பசியாலும் பிறவற்றாலும் வருந்தக் கடவுளுக்கு அமுதை நிவேதித்தும் அலங்காரத் திருவிழாவை நடத்தியும் வாணவேடிக்கை தாசிகள் நடனம் முதலானவற்றைச் செய்தும் பதி தருமம் புரிந்தால் கடவுளுக்கு விருப்ப மாயிருக்குமா? ஒரு உயிர் வழியிற் கிடந்து உதவி யின்றி வருந்த அதைக்கண்டு கொண்டு திருக்கோயிலுட் சென்று அட்டாங்க பஞ்சாங்க நமஸ்காரங்களும் பிறவுஞ் செய்யக் கடவுளுக்குப் பிரியமாயிருக்குமா? பசு தருமமே பதி தருமம் என்பது கடவுள் வாக்கு; போலி வணக்கத்துக்குக் கடவுள் இரங்க மாட்டார். அன்பினாற் செய்யும் செயல் எதுவோ அதற்கே கடவுள் இரங்குவார். ஒரு உயிர் வருந்துவதைக் கண்டு அதற்காக நாமும் வருந்தி நம்மாற் செய்யத் தகுந்த உதவியை அந்த உயிருக்குச் செய்தால் அந்த உதவி கடவுளையே சேரும். இல்லத்திலே பிதா மாதா முதலானோர் பசியால் வருந்த மகன் திருச்செந்தூர்த் திருமடத்திலும் சிதம்பர க்ஷேத்திரத்திலும் அன்னதானம் கொடுத்தால் அது அறச் செயலாகுமா ?

ஈங்குக் கூறியவற்றால் விரத மனுஷ்டிக்கவுங் கூடாது, திருகோயிலுக்குப் போகவும் கூடாது, தீர்த்தயாத்திரை செய்யவும் கூடாது, திருவிழா நடத்தவுங் கூடாது ; இன்ன பிறவற்றைச் செய்யவுங் கூடாது என யான் கூறவில்லை. இவைகளெல்லாம் அறச் செயல்களே. ஆனல் இவைகளைச் செய்யும் போது அற நெறி கடை பிடித்துச் செய்தாலே இவைகள் அறச் செயலாகும்.

3L
7002 N28L H.
N25 3.2

அன்பே சிவம்

ஒரு நகரத்தை அடைவதற்குப் பல வழிக ளுண்டு; அவ்வண்ணமே ஆண்டவனை அடைவதற்கும் பல நெறிக ளிருக்கின்றன. இத் திரு நெறிகளே உலகத்தின் கண் நின்று நிலவும் பல வகைச் சமயங்களாகும் என்று பரமஹம்ஸ ராமகிருஷ்ணர் கூறியுள்ளார். இக்கருத்தினையே, கம்பரும் தமது இதிகாசத்தின் முகப்பில் ஆணிப் பொன் போன்ற தம் அருமைத் திருவாக்கால் வாசகர் உள்ளத்தில் பசுமரத் தாணிபோல் நன்கு பதியும் வண்ணம் அழகு பெற அமைத் திருக்கின்றார்.

“ கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையில் மறைகளாலும் இயம்பரும் பொருள் ஈதென்னத்
தொல்லையின் ஒன்றே யாகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சி
பல்பெரும் சமயம் சொல்லும் பொருளும்போல் பரந்த தன்றே.”

ஓர் ஆறு மலை யிடைப் பிறக்கின்றது; கடலிடைக் கலக்கின்றது; ஆறு ஒன்றே; எனினும் எத்தனை துறைகள் வாயிலாகப் பரந்து பெருகுகின்றது! அவ்வண்ணமே பரம் பொருளும் ஒன்றே யாகிப் பல சமயத் துறைகள் தோறும் பரந்து பெருகிக் கிடக்கின்றது.

பல வேறு சமயங்களிலும், பல வேறு பொருள்களிலும் பரம் பொருள் விளங்குகின்றது. பல வேறு உலகங்களிலும் உயிர்களிலும் மலைகளிலும் அணுக்களிலும் பரம்பொருள் உலாவுகின்றது. எவ்வாறு உலாவுகின்றது? எங்ஙனம் விளங்குகின்றது? பல வகை மணிகளினூடே செல்லும் பொற்சரடு போல இறை யுயிர் ஒன்றே பல்லுயிர்களினூடே பாய்ந்து, அவற்றை யெல்லாம் கோத்து நிற்கின்றது என்று கீதாசாஸ்திரம் முழங்குகின்றது. இவ் வரிய ரகசிய உண்மையினையே கம்பரும் குறித்துச் செல்கின்றார்.

“ தாதுகு சோலை தோறும் சண்பகக் காவு தோறும்
போதவிழ் பொய்கை தோறும் புது மணத் தடங்கள் தோறும்
மாதவி வேலிப் பூக வனந்தோறும் வயல்கள் தோறும்
ஓதிய உடம்பு தோறும் உயிரென உலாய தன்றே.”

பசுஞ் சோலைகள், சண்பகக் காவுகள், தாமரைத் தடாகங்கள், புது மணத் தடங்கள், பூங்கா வனங்கள், வயல்கள்—இவற்றினூடே உயிர்த்து உலவி, இவைகளுக் கெல்லாம் செழுமையும் ஜீவன்களையும் தந்து செல்லும் ஜீவ நதி போல, இறை யுயிரும் உலக முழுவதையும் உடம்பாகக் கொண்டு நிலவுகின்றது. இதனை லன்றோ “ எவ் வுயிரும் பராபரன் சந்நிதியதாகும்—இலங்கும் உயிர் உடலனைத்தும் ஈசன் கோயில்” எனப் பெரியாரும் பணித்தார். விறகில் தீ போல், மணியில் ஒளி போல், பாலில் நெய் போல் இறைவன் பார்க்கு மிட மெங்கணும் நீக்க மற நிறைந்து விளங்குகின்றான் என்று செந்தமிழ்ப் பெரியோர்

பன் முறையும் வற்புறுத்தியுள்ளார். இதுவே மக்களனைவரும் சகோதரர் என்னும் கொள்கையைத் தாங்கி நிற்கும் ஆழ்ந்த அடிப்படை யுண்மையாகும். அரச னுளத்திலும் இறை யுயிர் இலங்குகின்றது. ஆண்டியுளத்தில் உறைவதும் இறை யுயிரே. வெள்ளையர், கறுப்பர், செம்மேனியர், மஞ்சள் நிற மக்கள்—உள்ளங்களி லெல்லாம் உயிர்த் திருப்பது ஓர் உயிரே. அது அன்பு வடிவான இறை யுயிரே. இங்ஙனம் இறை யுயிராகிய அன்புச் சரடால் இணைக்கப் பெறும் உயிர்க ளெல்லாம் சகோதரத் தன்மை பெறுகின்றன.

"சராசரப் பொருள்கள் தோறும், வந்தவன் தீம்பால் நெய்போல் உயிர்க்குயிராகி வாழும்—பந்தம துணர்ந்து நேரே பார்க்குங்கால் பகை யார்? நண்பார்?" என்று வில்லிப்புத்தூரர் கூறுகிறார். பாலில் நெய்போல் அன்புருவாகிய இறைவன் உயிர்க்குயிராகி, உயிர்களை யெல்லாம், சகோதர பந்தம் என்னும் தெய்வீக பந்தத்தால் இணைத்து நிற்கின்றான். எவ்வுயிரிலும் இறை யுயிர் இலங்குகின்றது—என்னும் உண்மை கண்டு எவ்வுயிர்க்கும் அன்பாயிரு என்று பக்தர் கூறுகின்றனர்.

> "அனைத்துயிர் ஒன்றென் றெண்ணி அரும்பசி எவர்க்கு மாற்றி
> மனத்துளே பேதா பேதம் வஞ்சனை களவும் பொய்யும்
> சினத்தையும் தவிர்ப்பீ ராகில் செய்தவம் இனிவே றுண்டோ?"

என்று சித்தரும் கூறுகின்றனர். இறைவன் இணைத்து வைத்ததை யாரே பிரிக்க வல்லார்? சகோதர மர்மம் ஓர் இயற்கை யுண்மையே. அதுவே இறை யுண்மையு மாகும். இறைவன் விருப்பு வெறுப்பின்றி எல்லா மனித ருள்ளத்தினும் கோயில் கொண்டருள்வது மெய்யெனின், (இத்தகைய பந்தத்தால் இணைக்கப் பெறும்) மனிதர் அனைவரும் சகோதரரே என்பதும் சத்திய மன்றோ? இத்தகைய சகோதரத் தன்மையினை அடிப்படையாகக் கொள்ளாத சமயமும் பெருஞ் சமயமாக உலகின் கண் வழங்குவ தில்லை.

இங்ஙனம் உலகங்களை யெல்லாம்—உயிர்களை யெல்லாம் ஒன்றுபடச் செய்து நிற்கும் இறை யுயிர் இன்ப மயமானது, ஒளி மயமானது, சக்தி மயமானது-சுருங்கக் கூறின், அன்பு மயமானது. ஒளி மயமான, சக்தி மயமான இன்ப அன்பினையே சைவ நன் மக்கள் 'சிவம்' எனும் செம் பொருளாக வழிபடுகின்றனர். "அன்பே சிவம்" என்பது திருமந்திரத் திருவாக்கு. ஆகவே சிவநெறி அன்பு நெறியே யாகும். பக்தி அல்லது மெய்யன்பு ஒன்றினாலேயே வீடு பெறுதல் கூடும் என்று சைவ சமயம் வற்புறுத்துகின்றது. ஞானம் என்பது அன்பு நெறியிற் செல்வோர்க்கு ஒளி செய்து காட்டும் திருவிளக்கே யாகும். அன்பு நெறி ஒன்றினையே தமிழ் மறைகள் முத்தி நெறியாகக் காட்டுகின்றன. அன்பில்லாத வழிபாடு உயிரில்லாத உடம்பே. அன்பெனும் வலையில் அன்றோ சிவம் சிக்குண்டு நிற்கின்றது! சிவகோசரியார் சாதியால் ஆசாரத்தால் வைதிகக் கல்வியால் உயர்ந்த சிவவேதியர். அவர் சிவபெருமானுக்குப் பூவும் நீரும் இட்டார். இறை

வன் இரங்கினுரில்லே. கண்ணப்பன் ‘பழிதொழிலும் இழிகுலமும் படைத்த’ வேடன். குகனைப் போல இவனும் ‘கற்காணும் திண்மையான், கரை காணுக் காதலன்.’ கருங்கற் பாறையான வச்சிர தேகத்திலே குடி கொண்ட நெஞ்சமோ கங்கு கரை யில்லாத அன்பு வெள்ளமாய் விளங்கியது. வாழ் நாள் முழுமையும் விதிப்படி வழுவாது வழிபாடு செய்த வேதியருக் கிரங்காத சிவபெருமான், ஆறு நாள் தம்பால் அன்பு பாராட்டி அகங்கரைந் துருகிய வேடனுக்கிரங்கி ‘சிவமாந் தன்மைப் பெருவாழ்வை’ அருளினுரன்ருே? இவ்வேடனது மாசிலா மெய்யன்பு தம்மிடத்து மில்லே யென்று மணிவாசகப் பெருமான் அருளிச் செய்கின்ருர். ஆகையால் அன்பு நெறியிலே சாதி குலம் பிறப்பு என்னும் வீண் பெருமைகளுக்கு இட மில்லே. நீரிலாத பாலே வனத்திலே வற்றி யுலர்ந்த ஒரு மரம் தளிர்த்தாலும் தளிர்க்கலாம்; அன்பிலா உயிர் வாழ்க்கை பாலே வனத்தினும் வறண்டயர்ந்த தாகும் என்று தமிழர் பொது மறை கூறுகின்றது. அன்பிற்கு மூப்பில்லே, மரணமில்லே, விகார மில்லே. ஏனெனில் அன்பே சிவம், சிவமே அன்பு என்ப தன்ருே எந்நாளும் அறிஞர் கண்ட காட்சி?

பி. ஸ்ரீ.—குமரன்.

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலேயே!
அன்பெனுங் குடில் புகும் அரசே!
அன்பெனும் வலேக்குட் படு பரம் பொருளே!
அன்பெனுங் கரத் தமர் அமுதே!
அன்பெனுங் கடத்துள் அடங்கிடும் கடலே!
அன்பெனும் உயிரொளிர் அறிவே!
அன்பெனும் அணுவுள் அமைந்தபே ரொளியே!
அன்புரு வாம் பர சிவமே!

—இராமலிங்கர்.

---

32 பற்களுடன் பிறந்த குழந்தை.

இலங்கையைச் சேர்ந்த காட்டுக்குநூர்தா வென்னு மிடத்திலுள்ள காலமுல்லா என்னும் குக்கிராமத்தில் சில தினங்களுக்கு முன்பு ஒரு ஸ்திரீக்கு விசித்திரமான அவயவங்களுடன் ஆண் குழந்தையொன்று பிரசவமாயிற்று. அக்குழந்தைக்குத் தாடையும் 32 பற்களும் சரியாக அமையப் பெற்றிருந்தன. நெற்றியில் வட்டமான கண்களிரண்டிருந்தன. அக்குழந்தையின் காதுகளில் கொத்துக் கொத்தாக மயிர்முளேத்திருந்ததுடன் அக்காதுகள் கழுத்தின் புறமாக வளேந்திருந்தன. இக்குழந்தை பிரசவமாகி இரண்டு மணி நேரம் வரையில் உயிருடனிருந்த பின் மரித்து விட்டது. இவ்வாச்சரியமான பிறவியைக் காணத் திரளான ஜனங்கள் கூடிவிட்டனர்—ஸிலோன் டெயிலி நியூஸ்

நாட்டின் நலன் விழைதல்

த, ராம கிருஷ்ணன். (வேதமாணுக்கன்)

ஆ ஹ்ப்ரஹ்மந் ஹ்ப்ராஹ்மணெ ஹ்ப்ரஹ்ம வர்சஸி ஜாயதாமா ராஷ்ட்ரெ ராஜன்ய: சூர இஷவ்யோ அதி வ்யாஹ்தி மஹாரத்தொ ஜாயதாம் தோக்ஹ்த்ரீ ஹ்தேநுர் வோடா நட்வா நாசு: ஸப்தி: புரந்திர் யோஷா ஜிஷ்ணூ ரத்தேஷ்டா: ஸபெயொ யுவாஸ்ய யஜமாநஸ்ய வீரொ ஜாயதாம் நிகாமெ நிகாமெ ந: பர்ஜந்யொ வர்ஷது பலவத்யொ ந ஓஷதய: பச்சயந்தாம் யோக க்ஷேமொ ந: கல்பதாம்.

எசுர் வேதம் xxii 22.

யாவற்றுனும் நிறை வுடைய இறை முதற் பொருளே ! எங்கள் நாட்டில் வேதக் கலைகளில், மறை நூற் புலமையில் அறிவு மிகுந்த மறைகளையும் இறைவனையும் நன்குணர்ந்து அநுபூதி வாய்ந்த அற வோர் யாண்டும் பெருகுக. அம்பெய்தலில் தேர்ந்தவரும், வலிமை மிக்க பகைவரை யழிக்கு முரன் வாய்ந்தவரும், வீரர் சூழ்ந்த பெருந் தேரின் றலைவர்களும், அச்ச மறியாதவர்களுமாகிய அரச குமாரர்கள் தோன்றிடுக. விரும்பியவற்றைப் பெறத் தக்க சொற்சித்தி அல்லது பால் நிறைந்த பசுக்களும், பாரந்தாங்கும் வலிமை பொருந்திய எருது களும், விரைந்து செல்லும் குதிரைகளும், பல் வழக்கு முணர்ந்து அறிவு நிறைந்த பெண்மக்களும், தேரில் நிலை பெற்று வெற்றி தரும் வீரர்களும், உலக வழக்கறிந்து நாகரிகம் நிரம்பி அறிவு முதிர்ந்து அவையின் அணிகலன்களாக மிளிரத்தக்க இளைஞர்களும் மலிந்திடுக. புலவர்களைப் போற்றுகின்ற, சுகாதார வசதிகளுடன் நாட் டைச் சீர் படுத்தி ஆளுகின்ற, யாவர்க்கும் இன்பம் பயக்கின்ற இவ் வரசனது நாட்டில் நுண்மை மிக்க அறிஞர்களும், வீரம் மலிந்த மறவர்களும் வளர்ந்திடுக. எங்கள் முயற்சிகள் பயன்பட, வேண்டும் பருவங்களில் மழை பொழிந்திடுக. உண்ணத்தக்க தாவராதிகளும், மருந்துப் பொருட்களும் பக்குவ மடைந்து செழித்திடுக. எங்கள் தகுதிக் கேற்ப யாங்கள் விரும்பும் பேறனைத்தும் பெற்றிடற் கருள் சுரந்திடுக !

குறிப்பு :—உலகின் தலைவனாகிய இறைவனால் படைக்கப் பட்ட உயிர்கள் நிலை பெற்று வாழ்வதற்கு இன்றியமையாது வேண்டப்படு வது மழை. அம் மழை கால மறிந்து பொழிவதால் உணவுப் பொருட் கள் மருந்துப் பொருட்கள் யாவும் விளைகின்றன. விளை பொருட்கள் செழிப்படைந்திடப் பசுக்களும், எருதுகளும், குதிரைக ளாதியனவும் நல்லுணவு பெற்று மக்களோ டுட னுறைந்து, உதவிகள் புரிந்து பயன் படுகின்றன. உழவரும், உழவரை நோக்கி நிற்கும் பிறரும் களிப் படைகின்றனர். விளை பொருட்கள் மலிதலால் பிற தொழில்களும் வளர்ச்சியுற்று வாணிகம் ஓங்குகின்றது. பண்ட மாற்றலால் வேற்று நாட்டுப் பொருட்களைப் பெறுகின்றனர். தம் பொருட்களை அவர்க்

குதவிப் பொருள் திரட்டி யாவரும் ஒத்த வின்பம் நுகர்கின்றனர். உழவுந் தொழிலும் வணிகமும் வளர்ச்சி பெற்றிடக் காவலர் காவல் கருதப் படுகின்றது. அக்காவலர் அஞ்சாத வீரமும், படைக்கலப் பயிற்சியும், போர்த் திறனும், நிறைந்த அறிவும் நீதியும் பெற்றிருத்தல் வேண்டும். அவர்க் குதவியாக அநுபவம் வாய்ந்த அமைச்சரும், வீரம் மிக்க மறவரும், உலக வழக்கறிவும் நாகரிகமும் நிறைந்து குடிகள் மனமுணர்ந்த இளைஞராகிய கழகத் துணைவரும் அமர்ந்திடல் வேண்டும். அரசன் பல்கலைக் கழகங்களு மமைத்துப் புலவர்களைப் போற்றி மக்கள் அறிவை வளர்த்தலும், சுகாதார வசதிகள் வகுத்து நாட்டை ஒழுங்கு படுத்தி மக்கள் உடல் நலன் காத்தலும் இன்றியமையாதன. இவர்க் குறு துணையாக அந்நாட்டு மகளிர் யாவரும் அறிவு, ஒழுக்கம், உலக வழக்குணர்விலும் மிகுந்து சிறந்திடற் குறுவன ஆற்றிடுதல் வேண்டும். அறநெறி முதற்றே யரசின் கொற்றமாதலால் தனக் கென வாழாது பிறர்க் குரியராகி யாவுந் துறந்து அனைத் துயிரும் தன்னகத்துக் காணும் தண்மைசால் அறவோர் துணைநின்று வழிகாட்டி நாட்டைச் சீர்பெற நடாத்திடுக வென்று இறைவனை இறைஞ்சுங்கால் யாவருள்ளமும் தாய் நாட்டின் நலன் கருதி விழைந்திடுக வென்பதாகும்.

இவ்வரும் பெருங் கருத்துக்களை வைத்துத் தமிழ் நாட்டு முது கிழவியார் தண் தீந்தமிழால் "வரப்புயர" வென்று வாழ்த்தினமை சிந்தித்திடுக.

நாடு நலன் பெற உழவரும், வணிகரும், மறவரும், அறிவரும், மகளிரும் ஒத்த அறிவும் ஒழுக்கமும், உடல் நலமும் பெறவேண்டுவதும்; ஆவும் மாடும் பரிகளாதியனவும் காக்க வேண்டுவதும்; பருவங் கண்டு மழை பொழிந்திட இறைவனை வாழ்த்த வேண்டுவதும் இன்றியமையாதன.

மூன்று வயதில் கர்ப்பம்.

பர்மாவில் சக்காக்கியைச் சேர்ந்த அப்பியவ் லேத்தவுங் என்ற கிராமத்தில் மாஞ்சே என்னும் பெயருள்ள பர்மியருடைய மாத்தேய் என்னும் பெண் பிறந்த பதினெட்டாம் மாதத்தில் ருது வானாளாம். பின் மூன்ருவது வயதில் கருப்பமா யிருக்கிருளாம். உன் கணவன் எங்கே யென்று அவள் தாய் கேட்டதற்கு வானத்தைக் காட்டி அங்கிருந்து வருவான் என்று சொல்லுகிருளாம். மாதம் நிறைந்தால் பிரசவிக்க முடியாமல் வருந்துவாயே யென்று தாய் வருந்திய பொழுது நான் காது வழியாகப் பிள்ளை பெறுவேன் என்று சொல்லுகிருளாம். அக்குழந்தை மற்றவர்களைப் போல பௌத்த பிச்சுக்களைத் தொழாமல், அவள் சுவைபீகோம் கோபுரத்தை வணங்குகிருளாம்.

தீப் பாய்ந்த திருமகள்

சென்ற 1919-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் கடைசி வாரத்தில் சென்னைத் திருவல்லிக்கேணியில் லக்ஷ்மி என்ற ஒரு பிராமண மாது தனது கணவன் நோய் தீரும் பொருட்டுத் தன் உடம்பில் மண்ணெண்ணெய் ஊற்றிக்கொண்டு தற்கொலை செய்துகொண்டாள். அவள் இறப்பதற்கு முன் தனது கணவருக்கு எழுதிய அற்புதக் கடிதம் (30-9-19) தேசபக்தனில் வெளியாயிற்று. அதனை ஒரு நண்பர் நமக்கு அனுப்பியிருக்கிறார். அக்கடிதத்தை அதில் உள்ளபடியே சில பிழைகளுடன் அச்சிட்டிருக்கிறோம்.

கடிதம்.

சென்ற சனிக்கிழமை காலை 7-மணிக்குச் சென்னைத் திருவல்லிக்கேணி சுங்குவார் அக்ரகாரத்தில் இருபது வயதுள்ள ஒரு பெண்ணரசி தற்கொலை செய்து கொண்டனர். அவ்வம்மையார் தற்கொலை செய்து கொள்வதற்கு முன்னர்ப் பெட்டியில் எழுதி வைத்த கடிதம் வருமாறு :—

என் ப்ரத்யக்ஷ தெய்வமாகியும் என் பாபத்தினால் வியாதி அனுபவித்துக் கொண்டு பொறுமையே அவதாரமானது போல் காணப்படும் என் ப்ராணநாதருக்கு அநேக சாஷ்டாங்க நமஸ்காரம். நான் இப்பொழுது தங்களுக்கு எழுதும் கடிதம் தங்களுக்கு ஒரு விதத்தில் ஆச்சர்யத்தைக் கொடுக்கக் கூடியதாகவே இருக்கும். தாங்கள் ஒரு வருஷமாய் அனுபவிக்கும் கஷ்டங்களைப் பார்த்து என்னால் சகிக்க முடியவில்லை. இது வரையில் கொஞ்ச கால கஷ்டத்தோடு நீங்கி மறுபடி சௌக்கியப் படலாமென்ற தைர்யம் இருந்தது. இப்பொழுது சிறுகச் சிறுக அந்த தைர்யத்தையும் இழக்கவேண்டி யிருக்கிறது. இனிமேல் என் சரீரத்தை வைத்திருப்பதனால் யாருக்கும் எந்த விதத்திலும் பிரயோஜன மில்லாமல் போவதோடுகூட என்னைச் சேர்ந்த பந்துக்களுக்குப் பாரத்தையும் கஷ்டத்தையும் கொடுக்கக் கூடியதாய் இருக்கும்; அவ்வளவு சிரமப்பட்டாவது இந்தச் சரீரத்தைக் காப்பாற்ற யாரும் பிரியப்பட மாட்டார்கள். இன்னம் கொஞ்ச நாள் பொறுத்துப் பார்க்கலா மென்றால் என் மனதில் புதிதான எண்ணமொன்று உதித் திருக்கிறது. அது யாதெனில் என்னுடைய பாபத்தினாலேயே தங்களுக்கு இந்த மாதிரியான கஷ்டம் வந்திருப்பதாக எல்லோரும் சொல்லுவதோடு கூட என்னுடையதும் நிச்சயமானதும் கடைசியானதுமான தீர்மானம். ஆகையால் நான் இறந்தால் எனக்குண்டான பாபமும் கர்மமும் தங்களைச் சேராவென்று நம்புகிறேன். இனிமேல் வைத்திருந்தால் சிரமத்தைக் கொடுக்கக் கூடியதும் பாபமே உருவெடுத்ததுமான என்னுடைய இந்தச் சரீரத்தை மாய்ப்பதினால் தங்களுக்கு இந்த அபாரமான வியாதி நீங்குவதா யிருந்தால் இந்தச் சரீரத்துக்கு அதைவிட வேறு கீர்த்தியும் புகழும் வேண்டியதில்லை. தங்களுக்குச் செய்ய வேண்டிய கடைசி மருந்து இதுதான். நான்

இறப்பதனல் எவ்விதத்திலும் யாருக்கும் கஷ்டம் கிடையாதென்பது தங்களுக்கே தெரிந்த விஷயம். எங்கம்மாவை நினைத்துத்தான் நான் இது வரையில் பொறுத்திருந்தேன். இனிமேல் பிரயோஜன மில்லாத என்னை எங்கம்மாவும் விரும்ப மாட்டாள். அவள் பணமும் எல்லாம் செலவழிந்து விட்டது. பூராவும் செலவழித்தாலும் அதினல் கிஞ்சித்தாகிலும் பலன் உண்டாகுமென்று தோற்றவில்லை. அவளிடத்திலிருப்பது மிக்க சொல்பம். நான் ஒருத்தி பெண் பிறந்ததற்காக அவள் சோற்று வாயில் மண்ணைப் போட வேண்டியது அவசியமில்லை. அவளுடைய கஷ்டங்களை யெல்லாம் பாராமல் போய்விட வேண்டுமென்பது என்னுடைய ஆசை. அவளுடைய பணம் இன்னும் 700 ரூபாய் தான் இருக்கிறது. அதோடு கூட என் நகைகளையும் விற்று ரூபாய் ஆயிரம் செய்துகொண்டு அவளுக்கு எங்கு இஷ்டமோ அங்கு இருந்து கொள்ளட்டும். நான் இந்த இருபது வருஷத்துக்குள்ளாக எல்லா விதமான கஷ்டமும் பட்டவளானதால் ஒரு வேளைச் சோராகிலும் புடுங்க வில்லாமல் சாப்பிட்டுக்கொண்டு அவள் காலத்தைக் கழிக்க வேண்டு மென்ற ஆத்திரம் அதிகமாய் இருக்கிறது. என்னைப் பெண்ணாய்ப் பெற்று வேண்டிய கஷ்டங்களை யெல்லாம் அனுபவித்தாள். சிலருக்கு வாழ்நாள் பூராவும் கஷ்டமாயும் சிலருக்கு சௌகரியமாயும் சிலருக்கு இரண்டும் கலந்து எல்லாம் ஜன்மாந்திர கர்ம மென்று நினைத்துத் துக்கப் படாம லிருக்க வேண்டும். தங்களுக்கு எழுதப் புகின் நாலு நோட்டு புஸ்தகம் பூராவும் எழுதினலும் அதுவும் என் மனதுக்குப் போதுமானதாய் இராது. ஆனல் போலீசாருக்கும் மற்ரேருக்கும் நான் பின்னல் ஹிம்சிக்கப் பட்டாவது வியாதியினலாவது மடிந்தே னென்றிராமல், மனே வியாதி யென்னும் சிரமத்தினலேயே இறந்தாளென்று நிச்சயமாய்த் தெரியும் படிக்கு இந்தச் சிறிய கடிதம் எழுதலானேன். நான் மடிந்தால் தங்களுக்கு ஒருகால் வாசியாகலாம். அப்படித் தெய்வச் செயலாய் வாசியாகும் பட்சத்தில், தாங்கள் வியாதி யில்லாதவளும் திட சரீரியும் விவேகியுமான ஒரு பெண்ணை விவாகஞ் செய்துகொண்டு மிகவும் தர்மமாய் வாழ் நாளைக் கழிப்பீரென்று நம்புகிறேன். தாங்கள் ஸ்வஸ்த மானதும் எனக்குச் செய்யவேண்டிய உத்திரகிரியைகளை எல்லாம் மிகவும் சிரத்தையாய்ச் செய்ய வேண்டுமாய்க் கோருகிறேன். ஏனெனில் அகால மரணமாய் இருப்பதால் நம் பெரியோர்கள் சொல்லுவது போல் பிசாசு ஜென்மம் வந்தாலும் வரலாம். அதை நீக்கத் தாங்கள் சிரத்தையாய்க் கர்மம் செய்தால் போதுமானது. தவிர நான் வேங்கடாஜலபதியை ஹ்ருதயத்தில் த்யானித்துக் கொண்டே கடைசி வரையில் இருந்தால் எவ்விதத்திலும் பிசாசு ஜென்மம் வரச் காரணமே கிடையாது. கடவுள் என் ஹிருதயத்தில் தைர்யத்தைக் கொடுக்கிருர்.

“ நார்த்தொடுத் தீர்க்கி லென் ?
நன்ருய்ந் தடக்கி லென் ?
பார்த்துழிப் பெய்யி லென் ?
பல்லோர் பழிக்கி லென் ?

தீப்பாய்ந்த திருமகள்

தோற்பையுள் நின்று
தொழிலறச் செய்தூட்டும்
கூத்தன் புறப்பட்டக் கால்.

என்னும் மூதுரைப்படி எனக்குப் பின் என்னை யார் என்ன சொன்னாலும் அதனால் ஒரு விதமான கெடுதலும் கிடையாது. இதனால் தாங்களும் எங்கம்மாவும் என்னை மனப் பூர்த்தியாய் ஆசீர்வாதம் செய்வீர்களென்று நம்புகிறேன்."

இப்படிக்கு, தாங்கள் நன்மையையே எப்போதும் கோரும்

தங்கள் அன்புள்ள,

லக்ஷ்மி.

பிரமாண்டமான அச்சியந்திரம்!

தென் ஆபிரிக்கா ஜோஹனஸ் பர்க்கினின்றும் வெளியாகும் ராண்டு டெயிலி மெயில் சண்டே டயம்ஸ் என்னும் இவ்விரண்டு பத்திரிகைகளையும் அச்சிட்டு வரும் அச்சியந்திரம் பழமையானதால் அக்கம்பெனியார் புது மாதிரியில் ஒன்று வரவழைத்துக் கோர்த்துத் தயார் செய்திருக்கின்றனர்.

இவ்வியந்திரத்தில் பக்கம் ஒன்றுக்கு இரண்டிரண்டு காகிதச் சுருள்களாக எட்டுக் காகிதச் சுருள்கள் ஏக காலத்தில் கோர்த்து வேலை செய்யப் படுகின்றதாம். சுருள் ஒவ்வொன்றும் ஐந்து மைல் நீளமுடையது, இது காகிதத்தைப் பத்திரிகையாக அடித்து வெட்டி அடுக்கி மடித்து எண்ணிக் கொடுக்கின்றதாம்.

64 பக்கம் கொண்ட பத்திரிகையை மணி ஒன்றுக்கு 36,000 பிரதிகள் அடித்து மடித்துக் கொடுக்கின்றதாம். அதற்கும் குறைந்த பக்கங்களுடையதாயின் மணி ஒன்றுக்கு 73,000 பிரதிகள் அடித்துக் கொடுக்குமாம். இவ்வியந்திரத்தின் உருளைகள் (சிலிண்டர்) நிமிஷத்துக்கு 300 சுற்று சுற்றுகின்றனவாம்.

இதன் நீளம் 56 அடி உயரம் 16 அடி அகலம் 9 அடி 6 அங்குலம் இதன் கனம் முழு நிறை 155 டன். தென்னாப்பிரிகா நியூஸ் பேப்பர் சரித்திரத்தில் இதுவே முதன்மையானதாம். தென்னாப்பிரிகாவில் இதற்குச் சமமான தொன்று மில்லையாம். உலகத்தில் இதற்குமேல் பெரியது மில்லையாம்.

ஒரு பத்திரிகையைப் பத்து பேர் வாங்கிப் படித்து விட்டு வீரம் பேசும் நம் தமிழ் நண்பர்கள் இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

கொடுங் காற்று.

(தொடர்ச்சி.)

அதன் மேல் பராபரன் இவ்விதம் சொன்னான் :—" பன்னிரண்டு ஆண்டுகட்கு முன்னே நான் மிலான் தேசத்தின் அரசனாக விருந் தேன். அப்பொழுது நீ சிறு குழந்தையாக விருந்தாய். எனக்கு அந் தோனி என்னும் பெயருள்ள தம்பி ஒருவ னுண்டு. அவன் மீது எனக்கு முழு நம்பிக்கை யிருந்த படியால், அரசாங்க அதிகாரங்களை யெல்லாம் அவனிடம் ஒப்படைத்து நான் பழைய நூல்களைப் படிப் பதிலும், சாஸ்திர ஆராய்ச்சி செய்வதிலும் மனஞ் செலுத்தி வந்தேன். ஆனால், அப்பாதகன் அந்தோனி, எல்லா அதிகாரங்களும் தன் கையில் இருப்பதை யறிந்து என் அரசை அபகரித்துக் கொள்ளச் சூழ்ச்சி செய்தான். என்னையும் எனது ஒரே குழந்தையாகிய உன்னை யும் கொன்று விட்டுத் தானே அரசனாக அமர ஆசை கொண்டான். கடைசியில், எனது பகைவனாகிய நேப்பிள் தேசத்து அரசனுடைய உதவியைப் பெற்றுத் தான் எண்ணியபடியே எனது நாட்டைத் தன் வசப் படுத்திக் கொண்டான்—."

" அவர்கள் எண்ணியபடி நம்மைக் கொன்றுவிட அவர்கள் யத்த னிக்க வில்லையா?" என்று மிராந்தை இடை மறித்துத் தந்தையை வினவினாள்.

" ஆம் குழந்தாய்! நம் மிருவரையும் அப்பொழுதே கொன்றுவிட யோசித்தார்கள். ஆனால், ஜனங்கள் நம்மை அன்புடன் நேசித்து வந்தபடியால் அவர்களின் முன்பாக நம்மைக் கொல்ல அச்சப்பட்டார் கள். ஆகவே அவர்கள், ஒருவருக்குந் தெரியாமல் நம்மை ஒரு கப்பலில் ஏற்றிக் கொண்டு கடலில் வெகு தூரங் கொண்டுபோய், நம் மிருவரை யும் இன்னொரு சிறு படவில் இறக்கி விட்டு அவர்கள் திரும்பிப் போய் விட்டார்கள். நமது சிறு படவில் பாய்மரமும் சுக்கானு மில்லை யாகை யால் நாமிருவரும் கடலில் மூழ்கி இறந்து விடுவோம் என்று அவர்கள் நினைத்தார்கள். ஆனால்,—நமது நல்ல காலம்—, என்னிடம் எப்பொழு தும் உண்மையும் உள்ளன்பு முடைய காஞ்சலன் என்னும் மந்திரி உணவு, தண்ணீர், உடுப்புகள், நான் ஆவலுடன் படித்து வந்த சில சுவடிகள் ஆகிய இவற்றை யெல்லாம் அச்சிறு படவின் ஒரு மூலையில் அவர்கள் அறியாதபடி மறைத்து வைத்திருந்தான்."

" அப்பா! அச்சமயத்தில் அச்சிறு படவில் நான் உம்முடன் இருந்தது உமக்கு மிகுந்த தொல்லையா யிருந்திருக்கு மல்லவா? அப் பொழுது குழந்தையா யிருந்தபடியால் பல விதத்திலும் உமக்குத் துன்பத்தை யுண்டு பண்ணினே னென்று நினைக்கிறேன்" என்றாள் மிராந்தை.

" ஓ! இல்லை, அம்மா! நீ எனக்குச் சந்தோஷத்தையே யுண் டாக்கினாய். களங்க மற்ற உனது அழகான முகத்தைப் பார்க்கும்

போதெல்லாம் நான் என் துயரத்தை மறந்திருந்தேன். நீ என் துக்கத்தைப் போக்கும் சஞ்சீவியா யிருந்தாய். அது இருக்கட்டும். பின்னர், நமது சிறு படகு காற்றிஞல் தள்ளப்பட்டுக் கடலில் மிதந்து நெடுந் தூரஞ் சென்று கடைசியாய், கடவு ளருளால் இத் தீவின் கரையடைந்தது. நற்காலமாய்ப் படவில் ஆகாரம் இருந்தபடியால் நாம் உயிரோடு கரை யிறங்கிஞேம். அது முதல் உனக்குக் கல்வி கற்பிப்பதே எனக்கு முக்கிய வேலையா யிருந்தது. குழந்தாய்! மிராந்தா. நாம் இத் தீவில் வந்து பன்னிரண்டாண்டுகள் கழிந்தன. இப்போது நான் கிழப் பருவத்தையும் குழந்தையா யிருந்த நீ மங்கைப் பருவத்தையு மடைந்து, கடவுளருளால் இன்னும் உயிரோடு உலகத்தில் வசித்து வருகிறேம். ஆஞல், அப்பாதகன் அந்தோனி, உனது சிற்றப்பன்—, நாம் இருவரும் பன்னிரண்டாண்டு கட்கு முன்னமே கடலில் அமிழ்ந்து இறந்து விட்டதாக நினைத்துக் கவலை யற்றிருக்கிருன்." என்று கிழவன் தன் பழங்கதையைச் சொல்லி முடித்தான்.

தந்தை சொல்லிய தனது சரித்திரத்தைக் கருத்துடன் கேட்ட மிராந்தை சிறிது போழ்து யோசனை யிலிருந்தாள். பிறகு, திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டு தன் தந்தையை நோக்கி,

"நல்லது, அப்பா! இப்பொழுது இக்கொடிய புயல் காற்றையுண்டாக்கி அந்தக் கப்பலிலுள்ள பிரயாணிகளுக்குத் துன்பத்தை யுண்டாக்கும் காரண மென்ன? புழு பூச்சிகளிடத்திலும் மன மிரங்கும் வழக்க முள்ள தாங்கள் இக் கடல் பிரயாணிகளைப் பயமுறுத்தித் துன்புறுத்துவது எனக்கு அதிக அதிசயமாகத் தோன்றுகிறது! இப்புயல் காற்றை உண்டாக்கியதன் கருத்தையும் எனக்குச் சொல்லக் கூடாதா?" என்று ஆவலோடு விஞவிஞள் மிராந்தை.

"ஓ! அதையும் சொல்லுகிறேன்; கேள்—எனது பகைவர்களாகிய நேப்பிள் நாட்டரசனும் என் தம்பி அந்தோனியும் அக்கப்பலில் இப்பொழுது பிரயாணம் செய்கிருர்கள். அவர்களை இக்கரையில் கொண்டு வந்து சேர்ப்பதற்காகவே இப் புயல் காற்றை யுண்டாக்கினேன்." என்றுன் தந்தை பராபரன்.

இச் சமயத்தில் எரியன் பேய் அவன் முன்வந்து நின்றது. மிராந்தையின் கண்ணுக்கு அப்பேய் புலப்படவில்லை யாகையால் அவள் அதனை யறிந்து கொள்ளவில்லை. தந்தை பராபரன் எரியனை நோக்கிச் சில கேள்விகள் கேட்க வாயெடுத்தான். இதற்குள், தன்னருகில் மிராந்தை யிருப்பது தன் நினைவிற்கு வரவும், அவளைத் தன் மந்திரக் கோலால் மெல்லத் தொட்டான். தொட்ட உடனே, அவள் அவ்விடத்திலேயே மணலின் மேல் படுத்து உறங்கி விட்டாள். தன் மகள் தன்னுடன் இருக்கும்போது பேயுடன் பேசிஞல், தன் தந்தை வெறுங் காற்றுடன் பேசுகிறதாகவோ அல்லது தனக்குத் தானே பிதற்றுகிற தாகவோ தன் மகள் தவருக நினைத்துக் கொள்வாள் என்று எண்ணியே பராபரன் அவளைத் தூங்க வைத்தான். தன் மகள் உறங்கிவிடவும் கிழவன் எரியனைப் பார்த்து,

"நல்லது, எரியனே! உன் வேலையைச் சரியாய்ச் செய்து முடித்து விட்டாய் அல்லவா?" என்று வினவினன்.

விடை யளித்த எரியன் பேய் கடலில் நடந்த செய்திகளை யெல்லாம் விபரமாகச் சொல்லிற்று. கொடிய புயல் காற்று எவ்வாறு வீசிய தென்பதையும் மரக்கலத்திலிருந்த பிரயாணிகளும் மாலுமிகளும் எவ்வாறு பயந்து துன்புற்ருர்க ளென்பதையும், நேப்பிள் மன்னன் மகன் **பரதநாதன்** கடலில் வீழ்ந்து தத்தளித்ததையும் அவன் கடலில் மூழ்கி இறந்து விட்டானென்று நம்பி அம்மன்னன் துயருற்றுப் புலம்பியதையும் கடைசியாய்க் கப்பல் கவிழ்ந்து விட அதிலிருந்த எல்லோரும் கடலில் மிதந்து உயிர் பிழைக்க ஊசலாடியதையும் எரியன்பேய் ஒன்று விடாமல் உரைத்தது. கடைசியாக அப்பேய் இவ்விதம் சொல்லிற்று:—மன்னன் மகன் பரதநாதன் இக்கரையின் ஓரிடத்தில் கரை சேர்ந்து தீங்கற்றிருக்கிருன். ஆனல், தன் தந்தை முதலானேர் கடலில் மாய்ந்து விட்டார்களே என்று தவருக நினைத்து மிக்க வருத்தத்துடன் வாட்ட முற்றிருக்கிருன். வேறு எவ்விதத்திலும் அவருக்கு இம்மியும் இன்னல் உண்டாக்கவில்லை. அவரது விலையுயர்ந்த உடுப்புகள் யாவும் கடல் நீரில் நனைந்து விட்டன வாயினும் அவரிடத்திலேயே இருக்கின்றன.

"ஓ! அப்படியா! நல்லது, அவனை என்னிடம் அழைத்து வா. மிராந்தை அவ்விள வரசனைப் பார்க்க வேண்டும். எனது தம்பி அந்தோனியும் நேப்பிள் அரசரும் எங்கே என்ன செய்து கொண்டிருக்கிருர்கள்?" என்று பராபரன் வினவினன்.

"ஐயனே! அவர்கள் பரதநாதன் இறந்து விட்டான் என்று நினைத்தபோதிலும் ஒரு வேளை கரை சேர்ந் திருக்கவுங் கூடும் என்னும் நம்பிக்கையுடன் அவரைத் தேடித் திரிகிருர்கள். மற்றக் கப்பற் பிரயாணிகள் எல்லோரும் இம்மியும் இடையூறின்றி வெவ்வே றிடத்தில் தனித் தனியே கரை சேர்ந் திருக்கிருர்கள். என்ருலும், அவர்களில் ஒவ்வொருவனும் தான் மாத்திரம் தப்பிப் பிழைத் திருப்பதாகவும் மற்றையோர் அனைவரும் கடலில் மாய்ந்து விட்டார்களென்றும் நினைத்து இறந்தவர்களுக்காக வருத்தப் பட்டுக் கொண்டிருக்கிருன். ஒருவருக்குந் தெரியாதபடி மரக்கலத்தைத் துறைமுகத்தில் வைத்திருக்கிறேன்" என்று எரியன் விடை யிறுத்தது.

கிழவன் பராபரன் பேயின் திறமையை மெச்சி மகிழ்ந்து, "எரியனே! உனக்கிடப்பட்ட வேலையைத் திறமையாகச் செய்து முடித்து விட்டனை. ஆயினும், இன்னுங் கொஞ்சம் வேலை யிருக்கிறது." என்ருன்.

"இன்னும் வேலை யிருக்கிறதா? ஐயனே! எனக்குச் சுதந்தரமளித்து என்னைப் போக விடுவதாகத் தாங்கள் வாக்களித்ததைத் தங்களுக்குக் கவனப்படுத்துகிறேன். உமக்கு நல்ல ஊழியம் செய்திருக்கிறேன். தங்களிடம் பொய் பேசினதில்லை; தவறுகள் செய்

தது மில்லை; முணு முணுக்காமல் முழுவிருப்பத்தோடு உமக்கு ஊழியம் செய்து வருகிறேன்" என்று எரியன்பேய் வணக்கமாக விண்ணப்பஞ் செய்து கொண்டது.

"என்ன? எத்தகைய பெருந் துயரத்தினின்று உங்களை விடுவித்தேன் என்பதை நீ மறந்து விட்டாய் போலும்! சேகரை உங்களுக்குச் செய்த துன்பத்தை மறந்து விட்டீர்களா? ஆ, நல்லது! அவள் எங்கே பிறந்தவள் என்பது உனக்குத் தெரியுமா?"

"ஐயா! அவள் அல்ஜீரியா நாட்டிற் பிறந்தவள்"

"ஆம். அவள் அல்ஜீரியா தேசத்தில் பிறந்தவள் தான். அவள் எதற்கும் அஞ்சாத வன் னெஞ்சுள்ள கொடிய மாயக்காரி. ஆகையால் அவ் வூரார் அவளிடம் மிகுந்த வெறுப்பும் அச்சமும் கொண்டு அவளை அவ் வூரிலிருந்து நாடு கடத்தி விட்டார்கள். ஆகவே, கப்பலோட்டிகள் இத் தனித் தீவில் அவளைக் கொண்டு வந்து விட்டுவிட்டார்கள். பிறகு, அப்பாதகி பேய்களாகிய உங்களை ஏவி ஒரு பெரும் பாதகமான காரியத்தைச் செய்து முடிக்கச் சொன்னாள். அத்தீச் செய்கையைச் செய்ய நீங்கள் உடன் படாதபடியால் அவள் உங்களை மந்திரத்தினால் மரத்தில் பிணித்துச் சிறை வைத்து விட, நீங்கள் எத்தனை நாள் துன்பப்பட்டு வருந்தினீர்கள்! எவ்வளவு பெரும் கூக்குரலிட்டு அழுதீர்கள்! அச்சமயம் நான் வந்து உங்களை அப்பெருந் துன்பத்திலிருந்து விடுதலை செய்ததை இப்பொழுது மறந்து விட்டீர்கள்."

இவ்வாறு பராபரன் பேசியதைக் கேட்ட எரியன்பேய் மிகுந்த வெட்க மடைந்து "ஐயனே! மன்னிக்க வேண்டும். உங்கள் கட்டளைப்படி நடக்க ஆயத்த மாயிருக்கிறேன்" என்றது.

"நல்லது, என் கட்டளைப்படி நடந்து கொள். நான் சொல்லியபடி உனக்கும் மற்றப் பேய்களுக்கும் விடுதலை யளிப்பேன்" என்று சொல்லிப் பராபரன் எரியனிடம் சில காரியங்களைச் சொன்னான். அவன் சொல்லிய கட்டளைகளைச் செய்து முடிக்கும் பொருட்டு அப் பேய் அவனிடம் விடைபெற்றுக் கொண்டு முதன் முதல் பரத நாதனை அழைத்துக் கொண்டு வரும் பொருட்டு அவனிடஞ் சென்றது. அங்கு பரதநாதன் ஒரு புன்னை மரத்தடியில் உட்கார்ந்து தன் தந்தையும் மற்றவர்களும் இறந்து விட்டார்களே என்று மிகத் துயருற்று வருத்தப் பட்டுக் கொண்டிருந்தான். எரியன் அவனருகிற் சென்று "ஐயா, இளவரசே! நான் அழைக்கும் இடத்திற்கு நீர் என்னுடன் வர வேண்டும். உமது அழகான திருமேனியை மிராந்தையம்மாள் பார்க்க வேண்டுமாம். எழுந்திரும் ஐயா, என்னோடு வாரும்" என்று சொல்லிற்று. இதைக் கேட்டதும் பரதநாதன் தலை தூக்கி நாற் புறமும் சுற்றிப் பார்த்தான். ஒருவரையுங் காண வில்லை. தன் அருகில் நின்று தன்னை விளித்துப் பேசியவர் எங்குங் காணப்படாத படியால் அவ் விதம் பேசியது ஆகாய வாணியோ என ஐயுற்று வியப்படைந்தான்,

மக்கள் கண்ணுக்குப் புலப்படாத பேய் அவ்விதம் பேசிற் றென்பதை அவன் உணர வில்லை. எரியன்பேய் கீழ்க் கண்ட பாடலைப் பாடிக் கொண்டே அவனுக்கு வழி காட்டிச் சென்றது. இதைக் கண்டு மிக்க வியப்பும் திரும்பூதும் அடைந்த பரதநாதன் தன்னை யறியாமலே எழுந்து பாட்டுச் சென்ற வழியே பின் தொடர்ந்து சென்முன். எரி ன்ய் இவ்வாறு பாடிச் சென்றது :—

தாத தத்தன தானன தானன
தான தத்தன தானன தானன
தான தத்தன தானன தனன தனதான.

ஓது வித்தவர் கூலி கொடாதவர்,
மாதவர்க்கதி பாதக மானவர்,
ஊசலிற்கன லாயெரி காளையர், மறையோர்கள்

ஊர்த னக்கிட ரேசெயு மேழைகள்,
ஆர்தனக்குமு தாகின தாரிகள்,
ஓடி யுத்தம ரூதிய நாடினர், இரவோருக்

கேது மித்தனை தானமி டாதவர்,
பூதலத்தினி லோரம தானவர்,
ஈசர் விஷ்ணுவைச் சேவைசெய் வோர்தமை. யிகழ்வோர்கள்

ஏக சித்தி யானமி லாதவர்,
மோகமுற்றிடு போகித மூறினர்,
ஈனரித்தனை பேர்களு மேழ்நர குழல்வாரே ;

தாத தத்தத தாதத தாதத
தூது துத்துது தூதுது தூதுது
சாச சச்சச சாசச சாசச சசசாச

தாட டட்டட டாடட டாடட
டுடு டுட்டுடு டுடுடு டுடுடு
தாடி டிட்டிடி டீடிடி டீடிடி டிடிடீடி

தீதி தித்திதி தீதிதி தீதிதி
தோதி குத்திகு தோதிகு தோதிகு
சேகு செக்குகு சேகுகு சேகுகு செகுசேகு

சேயெனப் பல ராடிட மாகலை
ஆயுமுத்தமர் கூறிடும் வாசக !
சேகு சித்திர மாக நின்முடிய பெருமாளே.

பரதநாதன் இப் பாடலைப் பின் தொடர்ந்து சென்முன். எரியன் பாடிய இப் பாட்டு, பராபரன் தன் மகளுடன் ஒரு மர நிழலில் உட்

கார்ந்திருந்த இடத்தண்டை வந்து நின்றது. பரதநாதன் வருவதைக் கண்ட பராபரன் அவனைத் தன் மகளுக்குச் சுட்டிக் காட்டி "அதோ பார், குழந்தாய்! அதென்ன சொல், பார்ப்போம்." என்றான்.

தன் தந்தையை யன்றி வேறு மனிதரை இதுவரையிலும் அவள் பார்த்ததே யில்லை. உலகத்திலுள்ள எல்லா மனிதரும் தன் தந்தையைப் போலச் சுருங்கிய முகமும் நரைத்த தாடியு முடையவர்ளாக இருப்பார்களென்றே அவள் நினைத்திருந்தாள். ஆகவே, இளமையும் வனப்பும் ஒருங்கே யமையப் பெற்ற பரதநாதன் தன் முன்பாக வருவதைக் கண்ட போது மிராந்தை மிக்க வியப்பும் களிப்பு மடைந்தாள். தன் தந்தையை நோக்கி

"அப்பா! உண்மையாகவே அது ஒரு தெய்வமா யிருக்கும். ஆ! எவ்வளவு அழகா யிருக்கிறது பாருங்கள்! ஒரு வேளை ஆகாயத்தில் சஞ்சரிக்கும் விஞ்சையனாக விருக்குமா?" என்று வியப்புடன் வினவினாள்.

"இல்லை குழந்தாய்! இது நம்மைப் போல உண்டு உறங்கி பூமியில் வசிக்கிற ஒரு மனிதன். இந்த ஆண் மகன் கப்பல் பிரயாணிகளில் ஒருவன். வருத்தத்தினால் இப்போது அவன் சிறிது மாறுதடைந் திருக்கிறான். இப்போது அவன் தன் தந்தையையும் தோழரையும் தேடித் திரிகிறான்." என்றான் தாதை பராபரன்.

பரதநாதன் அவர்க ளருகில் வந்ததும், மிராந்தையைக் கண்டு அவள் ஒரு தெய்வக் கன்னிகையா யிருக்கக்கூடும் என்று நினைத்துத் தான் ஒரு தெய்வலோகத்தில் வந்திருப்பதாக நினைத்தான். பின்னர், அவள் அருகில் இருக்கும் தாதை பராபரனுடன் மிராந்தை வியப்புடன் பேசியதைக் கண்டு அவர்கள் மனிதர்களே என்று தேர்ந்தான். அழகிய இளைஞர் இருவரும் ஒருவரை யொருவர் ஆவலோடு நோக்கினார்கள். இருவர் கண்களும் சந்தித்தன. குமரன் உள்ளமும் மங்கையின் மனமும் ஒன்றை யொன்று நாடின. "கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச் சொற்க, ளென்ன பயனு மில" என்னும் திருவள்ளுவர் வாக்குப்படி, அவர்கள் பார்த்த பார்வை அவ்விருவரும் காதல் வயப்பட்டனர் என்பதைத் தெள்ளென விளக்கிற்று. மிராந்தையைக் கண்ட பரதநாதன், "அணங்கு கொல்? ஆய்மயில் கொல்லோ? கனங்குழை, மாதர் கொல்? மாலு மென் நெஞ்சு" என்று சொல்லித் தனக்குள் ஆச்சரியப் பட்டான்.

(தொடரும்.)

மயிலை. சீனி. வேங்கடசாமி.

வைதீகங்களிலுள்ள ஆபாஸ முறைகள்.

பர்மா நாட்டில் வசிக்கும் காட்டினங்களில் பல ஆண்டுகளாக மானிட வர்க்க விற்பனைகளும் நர பலிகளும் ஏற்பட்டுக் கிடந்ததை இவ்வமய கவர்னர் கவனிக்க முற் பட்டுத் தாமாகவே இவ்வெல்லைகளில் சென்று அந்நாட்டினங்களுக்குப் போதனைகளைக் கூறி அவ்வாபாஸ முறைகளை அடக்க வேண்டு மென்று கருதினவராக மிலிட்டரி போலீஸாரினுல் சூழப் பட்டு அஸ்வாருடராகி 134 மைல்கள் அடர்ந்த வனங்களினிடையே சென்று, நயினங்குவான் என்ற கிராமத்திற் கருகிலுள்ள காசின்கள், சின்கள், நாகாகள் என்ற காட்டினங்களைக் கண்டு கவனிக்கலாயினர். இந் நாடு மேல் பர்மாவிற்கும் கீழ் வங்காளத்திற்கும் இடையிலும், ஆஸாமுக்கும் சைனுவிற்கும் மத்தியிலும் பிரிட்டிவ்ஷ் ஆட்சி முறை நல்லனுபவங் களில்லாமலேயும், ஆங்கு இந் நன் முறைகளைப் புகட்ட, இது வரை பிரிட்டிஷ் அரசியல் முற் படாமலு மிருந்தன. இந் நயினங்குவான் என்ற இடத்தில், இக் காட்டினங்களைச் சேர்க்கவேண்டு மென ஒரு பெரு விழா ஏற்படுத்தப் பட்டது. இவ்விழாவில் குடுமி, குடுமியாகிய மக்களினுடன் கவர்னரவர்கள் நேராகவே கலக்கவும் பேசவும் அவர்களின் அபிப்பிராயங்களை அறியவும், அவர்களுக்கு இம் மனுஷ விற்பனையென்ற அடிமை வியாபாரத்தையும் நர பலியென்ற கொலையையும் பிரிட்டிஷ் அரசியல் மன்றங்களின் நீதிக்கு முற்றிலும் மாறுபட்டவை யாகையினுல் அவைக ளடக்கப்பட இனி முற் படலாகு மெனவற்புறுத்தவும் சமயம் வாய்க்கலானர். இவ் விழாவை ஏற்படுத்திய சமயத்தில் பர்மா கவர்னரவர்களின் வரவேற்புக்கென, ஒவ்வொருவரும் முயற்சிகள் செய்யததின் பிரயோஜனமாக, அநேக யானைகளும், ஏனைய பாணவேடிக்கைக் கண் காட்சிகளும் ஒருங்கு சேர்க்கப் பட்டிருக்கவே இக் காட்டின் காட்டினங்கள் குதுகலிக்கத் திரண்டு வந்திருந்தனர். இவ்வினத்திற்கு இனிமேல் எக்காரணம் பற்றியாவது, நரபலி காட்டுத் தேவதைகளுக்குக் காட்டினங்களினுல் அளிக்கப்படக் கூடாதெனவும், இவ்வெல்லைகளில் மானிட விற்பனைகள் சந்தைகளிலோ, வேறு எவ்விதத்திலோ நடை பெறலாகாதெனவும், இவைகளைக் கவனித்தும், இவ் வறுபகாங் பள்ளத்தாக்குகளில் இவைகளைக் கண்டிக்கவும் பிரிட்டிஷ் ஆபீஸர் ஒருவர் பர்மா கவர்ண்மெண்டினுல் நியமிக்கப் படுவரெனவும், நன்மொழிகளில் கூறியும் இக்காட்டு இன வகுப்பினர்களாகிய நாகைகள், தாங்கள் இவ் வைதீகங்களில் பல பல்லாண்டுகளாக முற் பட்டுள்ளதினுல், இந் நல்வாழ்விற்குக் காட்டுத் தேவதைகள் பெருங்காரண கருவிகளெனவும், தாம் அத்தேவதைகளுக்கு இவ்விதமான விழா, பலிகளை அளிக்காவிட்டால் தாம் வறுமையிலும் பஞ்சத்திலும் சூழப் பட்டு வருந்தலாகு மெனவும், எனவே தம் விழாவிற்கும் யக்யகிய பலி தானங்களுக்கும், மானிடர்களை விலைக்கு வாங்கி உபயோகிப்பது, மிக்க அத்தியாவசியமெனவும் கவர்ண்மெண்டார் இவ்விதத் தம் வரன் முறைகளால் ஈடுபடுவரேல் தாம் தம் பண்டைய வழக்க ஒழுக்கங்களில் ஈடு பட்டி

ருக்கக் கூடாதவர்களாகி விடுவர்களெனவும், கவர்னர் அவர்களினவற்புறுத்துதல்களுக்கு விடை யளிக்கலானார்கள். ஆனாலும் இவர்களின் அறியாமையிலும் நல் வாழ்வுகளைப் பகுத்தறியக் கூட சக்தி வாய்த்திலா திருப்பதைப் பற்றி அதிசயித்தவராகவும் பர்மா கவர்னர் அவர்கள் பின்னரும் இவ்வாபாஸ முறைகள் நிறுத்தப்படவேண்டிய லங்கியங்களை எடுத்துரைத்து, சென்ற கவர்ண்மெண்டு அதிகாரிகள் இவைகளில் கவலை செலுத்தா திருந்து விட்டதைப் போல் இனி பர்மா கவர்மெண்டு இருக்கலாகாதென மிகக் கண்டிப்பாய் இக்காட்டினங்களுக்குச் சொல்லி விட்டு, இதற்கு வேண்டிய சாதகங்களை நன்கு செய்ய வேண்டு மென்ற கருத்துக்கொண்டவராகி கவர்னர் அவர்கள் இவ்வெல்லையிலிருந்து திரும்பினார்.

இவ்வாபாஸ விஷயத்தில், நேபாளம் கவர்ண்மெண்டாரும், மிக்க கவலை கொண்டவர்களாகி, இவ்வருடம் முற் பட்டுள்ளார்கள். இந்தியாவின் சிற்றரசுகளைப் போல நேபாளம் ஓர் சிற்றரசியல் நாடாக இருப்பினும் இச்சிற்ற ரசியல், ஒரு சுதந்திர அரசியலாகவே நெடு நாளாக உள்ளது. எனவே இவ்வரசியலிருந்து மானிட விற்பனைக்கென, ஏற்படும் மக்களின் நிலைகளை, பிரிட்டிஷ் கவர்ண்மெண்டு தம் எல்லைப்புரங்களில் பெருகி நர பலி ஆபாஸங்களில் சிமுலும் போது கவனித்துக் கண்டிக்கக் கூடாதவர்களாகியே, இது வரை இருக்கவும் ஏற்படலாகியிருந்தது. இந் நேபாள அரசியலில் (1) சுமார் 15,719 மானிட விற்பனை வியாபாரிகளும் (2) 51,419 இவ்விற்பனைக்கெனச் சிக்குற்றுக் கிடக்கும் மக்களுமுள்ளார்கள். இவ்வம்ஸம் இவைகளின் முன் பிரிவு(1) மூன்று வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன : இதன் முதல் பிரிவு பல பின்னினங்களைத் தம் பிதுரார்ஜிதமாகக் கொண்டு தம் இல்லங்களின் வேலைகளுக்கு அடிமைகளாகவும், சில சமயங்களில் குழந்தைகளாகவும் வளர்த்துக் கொள்வதில் முற்பட்டிருப்பதினால், இவர்கள் குரூரமான நடவடிக்கைகளல்லாத அன்பின் முறைகளில், வாழ்வுகளைக் கொண்டுள்ளார்கள். இவர்களின் இரண்டாவது இனம் இவர்களைத் தம் வயல்களின் அறுவிடை முதலியவைகளிலும், ஏனைய ஊழியப் பாங்குகளிலும் உபயோகப் படுத்திக்கொண்டு உணவு உடை அளித்து வருகின்றனர். இவர்களின் மூன்றும் இனம், இவ்வியாபாரத்தில் முதலாளிகளாகுவதற்கென இங்கு மங்கும் கண்டவர்களைப் பலவந்தமாகவோ இரகசியமாகவோ, சேகரித்து வைத்துக் கொண்டு வாழ்பவர்கள். இந்நேபாளத்தின் மகா ஜோதிராஜன், இவ்வமயம் இம் மூவகை ஆபாஸ முறைகளையும் எடுத்துவிட வேண்டு மெனவே, முற்பட்டுள்ளார். இதற்கெனச் சுமார் 14 லட்ச ரூபாய்கள் ஒரு பண்டாக நியமித்து இம் மூவகை யினத்திலிருந்தும் அடிமைப் பட்டுள்ள மக்களை விடுவிக்கச் செலவிட எண்ணங் கொண்டுள்ளார். இன்னும் இவைகளுக்கு ஒரு அரசியல் அறிக்கையும் வெளியாக்கிட யோசித்துள்ளார். இவ்வறிக்கை இம் மூவினங்களுக்கும் ஏழு வருடக்காலத் தவணைகளைக் கொடுக்கும் ; இதற்குள் தம்மிடம் இருக்கும் அடிமை

களைப் பிதுராஜ்ய சொத்தாக இருப்பினும் சரி, அல்லது தனது சுயார்ஜித மாகினும் சரி, இவர்களை நேபாள அரசியலுக்கு விற்று விடல் வேண்டு மெனவும், அதாவது தாம் வாங்கிய விலைகளையாவது அல்லது தாம் செலவிட்டுள்ள பொருள்களை யாவது, அரசியலிருந்து பெற்று, அடிமைகளை எல்லாம் விடுதலையாக்கி விடல் வேண்டும். இன்னும் இவர்களை விடுவிப்பதற்கெனச் சில வரம்புகளையும், விலை மதிப்புகளையும், கவர்ண்மெண்டார் நேபாளத்தில் ஏற்படுத்தி வருகின்றனர். இவ்விடயத்தின் முதலாவது அறிக்கை காட் மாண்டிலிருந்து ஜனவரிமீ த்தின் இறுதியி லேற் பட்டுள்ளது. சுமார் இரண்டாயிரம் வியாபாரிகள் இவ்வறிக்கையை அங்கீகரிப்பதாகவும் முன் வந்துள்ளார்கள். எனவே இனி வெளிப்படும் அறிக்கை முன் வெளியிட்டுள்ள அறிக்கையை அங்கீகரிக்காதவர்கள் தண்டனைகளுக் குள்ளாக்கப் படும்படியான நிபந்தனையும், நியாய முறைகளையும் கொண்டிருக்கலாகு மென எதிர் பார்க்கப்படுகின்றது. பர்மாவின் மலைப் பிராந்தியங்கள் கிட்டத்தட்ட நேபாளத்தினுடனும், ஆஸாமினுடனும் இணைப்புகளைக் கொண்டிருப்பதினால், இவ்வேற்றுமதிகள், நேபாள மிருந்து பர்மாவிற்கு நேராகவோ அல்லது ஆஸாம் வாயிலாகவோ, ஏற்படுகின்றன. நேபாளத்தினர் இவ்விதம் முற்பட்டுள்ளதும், பர்மா கவர்ண்மெண்டார் ஆலோசித்திருப்பதும், 1925-ம் ஆண்டின் நற்குறிகளாகவே யுள்ளன.

பர்மா நாட்டின் நர பலி ஆபாஸக் குணாதிசயங்களைப் போலவே இந்தியாவிலும் பல ஆபாஸங்கள் வைதீகப் பற்றுகளில் ஏற்பட்டிருந்தன. உதாரணமாக, சதி என்ற முறையைக் கவனித்தால், கணவன் இறந்த உடன், மனைவிகள் உடன்கட்டையேறும் வழக்கம், பல சகாப்தங்களாகவே, இந்தியாவில் வற்புறுத்தப் பட்டு வந்ததென நம்பப்படுகின்றது. பலர் இவ்வழக்கத்தை மனைவிகளின் சுபாவீக கற்பு முடிவென்பர்: பலர் இவை, உறவின் முறைகளின் அதிக்கிரமங்கள் என்பர். இவை யெவையாயினும் சரி, இந்தியாவில் ஒரு சமயம், இவ்வாபாஸ நட வடிக்கையில், வெறுப்புக் கொண்டு சத்தியை ஒழிக்க வேண்டுமென முற் பட்டனர். 1805-ம் ஆண்டில் லார்ட் வெல்லஸ்லி, இதனை அடக்க வற்புறுத்தப் பட்டனர். இந்தியாவின் வைதீகர் பெரும் போராட்டம் செய்தனர். எனினும் கவர்னர் ஜெனரலவர்கள், பிராந்தீய ஜட்ஜுகளை, இவைகள் கொண்டுள்ள விபரங்களை வெளியிட ஆக்ஞாபித்தனர். அதாவது கவர்னர் ஜெனரலவர்கள் இப்பழக்கத்தின் வைதீகப் பற்றையும், ஆதாரங்களையும் அறிய முற்பட்டனர். முன் கூறிய இருவகைகளிலேயே சதி என்ற புழக்க வழக்கம் ஏற்பட்டுள்ளதெனத் தெரியவே, அரசியல், அறிக்கையில் நிறுத்த வேண்டுமென முற்பட்டனர். 1813-ம் ஆண்டுவரை வாஸ்தவமாக ஒன்றும் செய்யக் கூடவில்லை. இவரும் பிராந்தியங்களின் மாஜிஸ்டிரேட்டுகளின் உத்திரவில்லாமல் இச்சதி ஏற்படலாகாதெனவும் 16-வயதுக்குட் பட்ட மனைவிகளுக்கும் கருப்பிணிகளுக்கும் மாஜிஸ்டிரேட்டுகள் உத்திர வளிக்கக் கூடாதெனவும்,போலீஸின் முன்னிலையில்

இச்சதிகள் ஏற்பட வேண்டுமெனவும், இதில் உறவினர் அதிக்கிரமங்களாவது, உடன் கட்டையேறும் மனைவிகள் லாகிரி முதலியவைகளை உபயோகித்தாவது இருக்கக் கூடாதெனவும் ஒரு அறிக்கை வெளியிடப் பட்டன. இவ்வறிக்கையும் மிக்கனவாகப் பயன் படவில்லை. 1823-ம் ஆண்டில், லார்ட் ஆம்ஹர்ஸ்ட் உடன் கட்டை ஏறும் வழக்கம் குற்ற நடவடிக்கை யெனத் தீர்மானித்தனர். எனினும் 1813-ம் ஆண்டின் அறிக்கையை ரத்து செய்யாமலே, அத்துடன் சதியைக் கையாளும் குடும்பத்தினர்கள், அரசியல் உத்தியோக முறைகளுக்கு, உகந்தவர்களாகார்களென்ற ஒரு நிபந்தனையும் உடன் கட்டை ஏறினவளின் சொத்துகளும் அம் மனைவியாரின் கணவனின் சொத்துகளும், கவர்ண்மெண்டின் ஆதிக்கத்தில் கைப்பற்றப் படவேண்டுமென வும் ஒரு நிபந்தனையும் சேர்த்து விட்டனர். இவையும் பெரும் பலன்களை அளிக்கவில்லை. 1829-ம் ஆண்டின் டிஸம்பர்மீ 4-ம்உ லார்ட் வில்லியம் பெண்டிக உடன்கட்டை ஏறும் பழக்கத்தைத் தண்டிக்கச் சட்டம் ஏற்படுத்தினார். இவ்வாபாஸ சதி என்ற சகாப்த முறையும், சுமார் நூறு வருடமாக இந்தியாவை விட்டொழிந்தன வென்பதை, இந்து தேச சரித்திரம் வாசித்த இந்தியர்கள் யாவரு மறிவர்.

இச் சதி என்ற ஆபாஸத்தைப் போலவே கொளுவி விழா வென்ற (Hook-Swinging) ஒரு ஆபாஸ முறை, வைதீகப் பற்றில் பல மூடர்களினாலும் பாமரர்களினாலும் கையாடப் பட்டு வந்தன. சில்லரை தேவதைகளாகிய, தாமச விக்ரஹ உருப்பினங்களுக்கு சக்கர பூஜை என்னும் ஐதீகத்தில் விழாக்கள் இவைக்கென (Hook-Swinging) இந்தியாவில் ஏற்பட்டிருந்தன. வாஸ்தவத்தில் இவைகளை இன்னும் தென் இந்தியாவிலும் காணலாம். 1856-57-ம் ஆண்டுகளில் வங்காள மிஷினரி கான்பிரன்ஸார் இதன் (கொளுவி திருநாட்களின்) கொடுமைகளை வங்காள கவர்ண்மெண்டாருக்கு எடுத்துரைத்தனர். இவ்விழாவில் இந்தியர்கள் முள்களையும், கூர்மையான கத்திகளையும் உடம்பில் சொருகிக் கொண்டும் அல்லது சிறு இரும்பு அம்புகளினால் கைகள் புஜங்கள், மார்பு, தோள், நாக்கு முதலிய அவயவங்களைச் சிதைத்துக் கொண்டும், தம் இஷ்ட தெய்வங்களின் கோயில் செல்வதும், அங்கு ஏற்பட்ட பூஜைகளின் பின்னர், இவர்களின் முதுகில் ஒரு கொளுவை (கொக்கி) மாட்டிச் சரக்கென்ற மரத்தில், சுமார் 15-20 அடி உயரத்தில் ஏற்றித் தொங்கவிட்டுப் பெரும் கொட்டு முழக்கத்தில் சுழற்றுவதும், ஒரு வைதீக ஆபாஸமாகியிருந்தன. ஸர் பிரட்ரிக் ஹாலிடே என்ற லெப்டினட் கவர்னர் (வங்காளம்) இதைக் கவனிக்க முற்பட்டதில் இவைகள் எவ்வித வற்புறுத்துதல்க ளில்லாமல், சுயமாகவே மத மார்க்கத்தினர் நடாத்துகின்றார்களென்ற முடிவுக்கு வந்ததின் நிமித்தமாக அரசியல் இவ்வழக்க ஒழுக்கங்களைக் குரூரமான நட வடிக்கை யெனக் கண்டித்து நிறுத்துவதற்கு முற் படுவதைக் காட்டிலும், மதபோதகர்களும், பள்ளி உபாத்தியாயர்களும், இவ்வாபாஸ நட வடிக்கையைப் பரமத ஒழுக்கங்க ளெனப் போதித்து, நன்முறை

களில், தம் விழாக்களை ஏற்படுத்திக் கொள்வதே உசிதமென, வங்காள மிஷனரி கான்பிரன்ஸினர்களுக்குப் பதிலளித்து விட்டனர். எனினும் 1859-62ம் ஆண்டுகளில் இக்கான்பிரன்ஸினர்கள் ஸர் ஜான் பீட்டர் கிராண்டிற்கு விண்ணப் பித்தனர். இவ் விண்ணப்பம் காலஞ் சென்ற ஸ்ரீமதி விக்டோரியா மகாராணியாரவர்களின் காரியதரிசிக்கு அனுப்பப் பட்டது. இவ்வதிகாரி இம் முறைகளின் வழக்கங்கள் அவசியம் ஒழிக்கப்பட வேண்டுமெனவும், ஆனால் இந்திய சமுகத்தினரின் அபிப்பிராயங்களைச் செவ்வென அறிந்து இவ் வாபாஸ முறைகள் கவர்ண்மெண்டினால் கண்டிக்கப்பட வேண்டுமெனவும் பதி லளித்தனர். எனவே வங்காள கவர்ண்மெண்டார் டிவிஷன் கமிஷனர்களிட மிருந்து இவை பற்றிய விபரங்களை விசாரித்தனர். இவ்வழக்கம் வங்காளத்திலும் ஒரிஸாவிலும் மிக்கவைகளாக உள்ளனவெனத் தெரிந்தனர். இக்கமிஷனர்களின் ரிப்போர்ட்டுகளை ஆராய்ந்து, மாஜிஸ்டிரேட்டுகள் தம் பிராந்தியங்களில் இவ்வாபாஸ வழக்க ஒழுக்க விழாக்கள் ஏற்படாது, கண்டித்துத் தடுக்க முன்பட ஆக்யாபிக்கப் பட்டனர். வங்காளத்திலும் ஒரிஸாவிலும் இவ்வறிக்கையிலும் மிக்க பயன் படவில்லை. பின்னர் 1864-65-ல் இவ்வாபாஸம் புனர்விசாரணைக் குள்ளாகின. இவ்விஷயம் வங்காள கவர்னராகிய ஸர் ஸிஸில் பீடன், இவ்வாபாஸ முறைகளின் விழாக்களில் ஈடுபடும் நபர்களைக் கைது செய்யவும், தண்டிக்கவும் ஒரு சட்டம் ஏற்படுத்தினர். ஆகவே வங்காளத்தில் இவ்வனாகரீக முறை அறவே ஒழிந்தது.

ஆயினும் சென்னை மாகாணத்தில் இவை கண்டிக்கப் படாததின் காரணத்தைக் கவனிக்குங்கால், இம் முறைக்கு ஏற்பட்ட விண்ணப்பங்கள் பிருந்திய சமுகத்தினால் பிருந்திய கவர்ண்மெண்டிற்கு ஏற்பட்டதையே ஆதாரமாகக் கொள்ளவேண்டியதாகின்றன. 1813ம் வருடம் முதல் 1829ம் வருடம் வரை ஏற்பட்ட 'சதி' என்ற ஆபாஸ முறையின் நிறுத்துதலுக்கு முன்பட்ட கிளர்ச்சி, அகில இந்தியாவிற்கென ஏற்பட்டன: 1856-ம் ஆண்டின் முதல் 1865-ம் ஆண்டின் வரை ஏற்பட்ட கொளிவி விழா (Hook-Swinging) வின் கிளர்ச்சி ஓர் பிராந்தியத்திற்கெனக் கிளர்ச்சியாகின்றதின் காரணத்தினாலேயே, ஒரு சார்பில் அடக்கப் பட்டன. இவைகளைப் பற்றியும் சற்று விபரமாய் இங்கு கவனிப்பாம். இவ்வாபாஸத்தில் வைணவம் சைவம் இரண்டும் சம நிலையிலேயே பாமரர்களாக இருக்கின்றனர். வைணவர்களின் அநாகரீகமாகத் திருப்பதிப் பிரார்த்தனை யெனப் பலரைத் தவடைகளைக் குத்திக் கம்பிகள் இட்டும் நாவைக் குத்திக்கம்பிகள் இட்டும், உண்டியல்கள் தாங்கி தம் அநாகரீகத்தை நாகசுர மேள தாள, சங்கு சேகண்டி முழக்கத்துடன், பூச்சக்கிரக் குடைகளைப் போட்டுக் கொண்டு, திரிவதும் ஒரு வைதீகப் புழக்கமாக இருக்கின்றன. இவை போலவே சைவர்களும், உத்திரம் பூசம் கார்த்திகை நட்சத்திர ஸமயங்களில் தம் உடம்பு மிக்க ஆபாஸமாக பிரார்த்தனை என்ற ஐதீகத்தில் வெள்ளி வேல்களினாலோ செம்பு வேல்களினாலோ

குத்திக் கொண்டு, நொண்டிச்சிந்து சாவடிச்சிந்துகளை நாக சுரத்திலூதியோ அல்லது சில பண்டாரங்களைக் கொண்டு பாடியோ ஸ்தலங்களுக்கு ஏகுவதும் இன்னும் வங்காள கொளுவியக்கத்தைப் போலவே உள்ளன. இவை தவிர திருச்சி தஞ்சை முதலிய நகரங்களுக்கு அடுத்த மாரியம்மன் கோயில்களின் உற்சவ சமயத்தில் சில பிரார்த்தனைக்காரர்கள் உடம்பில் கூர்மையான சிறு திரி சூலங்களைக் குத்திக் கொண்டு, ஒரு சிறிய இரதத்தை இத் திரி சூலத்தில் பூட்டி இழுத்துச் செல்லும் குரூர அநாகரீகமும் ஜதீகம் பிரார்த்தனை என்ற முறையில் விழாக்களாகிக் கண் காட்சியினர்கள் பெருகியும் வருகின்றனர். இவையன்னியில்அங்கப் பிரதட்சிணம் என்ற அநாகரீகம் வைணவர்களாலும், சைவர்களினாலும் கையாடப் பட்டு வருவதை குக்கிராமங்களின் கோயில்களான இராமநாதபுரம் ஜில்லா நயினார்கோவில் முதலியவைகளின் உற்சவ நாட்களிலும் திருப்பதி முதலிய பெரும் கோயில்களின் உற்சவத்திலும் காணலாம். இவ்விதமான இன்னும் பல வித அசிங்கிய புழக்க வழக்கங்கள், வைதீகம் என்ற திமிர் பிடித்து, மக்களை மூடர்களாக்கிக் குரூரமான நடவடிக்கைகளிலும், ஆபாஸமான வரம்புகளிலும், ஈடு படச் செய்துள்ளன. வங்காள கவர்ண்மெண்டார் முன் கூறிய விபரப்படி 1856-57-லும் 1859-62-லும் 1864-65லும் தலையிட்டுக் கொளு இயக்கத்தை (Hook-swinging) அறவே ஒழித்தபடி, சென்னைக் கவர்ண்மெண்டார் கவனித்து, தம் ஜில்லாக்களின் மாஜிஸ்டிரேட்டுகளுக்கு உத்தரவு அளிக்காதிருப்பதும், பர்மாவின் கவர்ண்மெண்டார் நர பலி, மானிட விற்பனை முதலிய அநாகரீக முறைகளை இவ்வமயம் வரை கவனிக்காது விட்டிருந்ததைப் போலவாவது, அல்லது வங்காள கவர்ண் மெண்டிற்குக் கொளு விழாவைக் கண்டிக்க விண்ணப்பித்துக் கொண்ட வங்காள கிறிஸ்துவ பாதிரிமார்களின் கான்பிரன்ஸ் தூண்டுகோலாக இருந்ததுபோல, எச்சமூகமும், தென் இந்தியாவில் முற் படவில்லையே என்ற கொள்கை வகித்தாவது, இருக்கின்றனர்களெனக் கருதலாகின்றன. ஆயினும், பர்மாவின் பாமரர்களின் வைதீகப் பல்லாண்டின் ஆசாரங்களை இவ்வமயம் ஸர் ஹார்க்கோர்ட் பட்லர் ஒழிக்க முற் பட்டிருப்பதைப் போலவே, நம் லார்ட் கோஸ்ஷனுவது அல்லது தேவஸ்தான பரிபாலனச் சட்டமாவது முற் பட்டு வங்காளம் இப்பாமர வழக்கங்களிலிருந்து சீர் பட்டிருப்பதைப் போலவே, தென் இந்தியாவும் சீர்பட வேண்டிய ஆவசியகத்தை வெளியிடக் கடமைப் பட்டவர்களாகிறோம்.

எண்ணிய எண்ணியாங் கெய்துப
எண்ணியார் திண்ணிய ராகப் பெறின்.

பிலிப்பைன் தீவுகள்

(அமெரிக்காவில் வசிக்கும் டாக்டர் சுதீந்திர போஸ் எழுதியது.)

1904-ம் வருஷம் முதன் முதலாக நான் அமெரிக்கா ஐக்கிய நாடுகளுக்கு வந்தபோது செண்ட் லூயிஸ் என்ற நகரத்தில் நடை பெற்ற ஒரு பொருட் காட்சிக்குச் சென்றிருந்தேன். அங்கே பிலிப்பைனர்களின் கிராமம் ஒன்று மாதிரிக்காக நிர்மாணிக்கப் பட்டிருந்தது. பாதி உடை தரித்துக் கொண்டிருந்த பிலிப்பைனர்கள் அங்கு காணப் பட்டார்கள். பிலிப்பைன் தீவு முழுவதிலும் இத்தகைய ஜனங்களே வசிக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. இதைக் கண்டு பிலிப்பைனர் அவமான மடைந்தார்கள். பிறகு பத்தாண்டுகள் கழிந்து பிலிப்பைனர்களுக்கு சுய ஆட்சி உரிமை சிறிதளவு நல்கப் பட்டது. உடனே பிலிப்பைனர்கள், பொருட் காட்சிக்காதத் தங்கள் ஜாதியினர்களை எவரும் நிர்வாணமாகப் படமெடுக்கக் கூடாது என்று சட்டம் செய்து விட்டார்கள். மற்றும், கிறிஸ்தவரல்லாத சமூகத்தைச் சேர்ந்த எவரும் பொருட் காட்சிக்காக எந்த இடத்திற்கும் பிலிப்பைன் தீவிலும் அழைத்துச் செல்லப்படக் கூடாது என்று ஒரு சட்டமும் செய்தனர். மேற்படி சட்டத்தை மீறி நடப்பவர்களுக்கு பதினைந்தாயிரம் ரூபாய் அபராதமாவது அல்லது ஐந்து வருஷம் சிறைவாசமாவது தண்டனையாவது விதிக்கப் பட்டது. அப்படி யிருந்தும் பிலிப்பைனர்களைப் பற்றி இன்னும் தவறான அபிப்பிராயமே இருந்து கொண்டு வருகிறது.

"பிலிப்பைன் தீபகற்பத்தில் மொத்தம் 3141 சிறு தீவுகள் அடங்கி யிருக்கின்றன. இவைகளில் 2775 தீவுகள் ஒரு சதுர மயிலுக்குக் குறைந்த விஸ்தீரண முடையவைகளே யாகும். இந்தத் தீபகற்பம் முழுவதும் இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காத்லந்து ஆகிய மூன்று சேர்ந்த அளவு விஸ்தீரண முடையதா யிருக்கும். இப்பொழுது இந்தத் தீவுகளின் ஜனத்தொகை ஒரு கோடியே பத்து லட்சமாகும். இவர்கள் மலேயா சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறலாம். பிலிப்பைன் தீவிலுள்ள காட்டு மிராண்டி ஜாதியார் என்று சொல்லப் படுவார் சுமார் ஏழு லட்சம் பேரே. ஜனங்களிற் பெரும் பாலோர் கத்தோலிக்க கிறிஸ்தவர்களாவார்கள். பிலிப்பைனர்களிடத்தில் ஜாதி வேற்றுமை கிடையாது. ஏறக்குறைய எல்லோரும் ஒரே விதமான பழக்க வழக்க முடையவர்களாகவும் ஒரே விதமான வாழ்க்கையை யுடையவர்களாகவும் இருக்கின்றனர். பிலிப்பைனர்களை ஒரு சமூகத்தவர் என்று உறுதியாய்ச் சொல்லலாம்.

1565-ம் வருஷத்தில் பிலிப்பைனர் தீவுகளை ஸ்பெயின் ஆக்கிரமித்துக் கொண்டது. இந்தத் தீவுகளில் உணவுப் பொருள்களும் பொன்னும் அதிகமாக அகப்படும் என்று சொல்லப் பட்டது. அப்பொழுது இளவரசராக இருந்த இரண்டாவது பிலிப்பைனர் என்பவருடைய பெயராலேயே இந்தத் தீவுகள் அழைக்கப்பட்டன.

ஸ்பானிஷ் ஆட்சியானது நன்மை செய்யக் கூடிய சுயேச்சாதிகாரமாகவே இருந்தது. ஆனால் நன்மை குறைவாகவும் சுயேச்சாதி

காரம் அதிகமாகவும் இருந்தன. ஸ்பானிஷ் ஆட்சியின் கீழ் பிலிப்பைனர்கள் சந்தோஷமாகவும் திருப்தியாகவும் இருக்க வில்லை. அந்த ஆட்சி காலத்தில் ஒரு சிலர் உயர்பதவிக்கு வந்தார்களாயினும் ஜனங்களிற் பெரும் பாலோர் அறியாமையிலேயே ஆழ்ந்து கிடந்தார்கள். முந்நூற்று ஐம்பது வருஷம் ஸ்பெயின் இந்தத் தீவுகளை நிருவகித்து வந்தது.

1898-ம் வருஷம் ஸ்பெயினுக்கும் அமெரிக்காவுக்கும் ஏற்பட்ட யுத்தத்தின் பயனாக பிலிப்பைன் தீவுகளின் நிருவாகத்தை அமெரிக்கா ஏற்றுக் கொண்டது. இந்தியாவில் பிரிட்டிஷார் அநுசரிக்கும் முறைகளையும் பிலிப்பைன் தீவுகளில் அமெரிக்கா அநுசரிக்கும் முறைகளையும் ஒப்ப நோக்கினால் பல விஷயங்கள் புலனாகும். 1858-ம் வருஷத்துச் சட்டபடி இந்தியா கிழக்கிந்தியக் கம்பெனி நிருவாகத்தினின்று பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு மாற்றப் பட்டது. அச்சட்டத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியின் கடன்கள் முதலிய யாவையும் இந்தியாவின் வரிப் பணத்தி லிருந்தே செலுத்த வேண்டும் என்று காணப்பட்டிருந்தது. இப்பொழுதும், மறைந்து போன ஒரு கம்பெனிக்கு இந்தியா பங்கு கொடுத்துக் கொண்டிருக்கிறது. அமெரிக்கா ஐக்கிய நாட்டு அரசாங்கத்தார் பிலிப்பைன் தீவுகளை ஏற்றுக்கொண்ட போது தம்முடைய பணத்திலிருந்து ஆறு கோடி ரூபாய் நஷ்ட ஈடாக ஸ்பெயினுக்குக் கொடுத்தனர். ஒரு காசு கூட பிலிப்பைன் பணத்திலிருந்து எடுக்கவில்லை. அமெரிக்காவின் நிருவாகத்திற் குட்பட்ட முதல் இரண்டு வருஷ காலமும் இராணுவ ஆட்சியே நடைபெற்றது. பிறகு சிவில் அரசாங்கம் ஏற்பட்டது. அதில் பிலிப்பைன் தீவினர்களுக்குச் சிறிதளவு சுதந்திரமே கொடுக்கப் பட்டது. பிறகு 1916ம் வருஷத்தில் ஜோன்ஸ் சட்டம் என்று ஒரு சட்டம் நிர்மாணிக்கப் பட்டது. இதன்படி பிலிப்பைன் தீவுகளைப் பொறுத்த நிருவாகத்தின் பெரும் பாகம் பிலிப்பைனர்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டது. பிலிப்பைன் தீவுகளிலிருந்து தங்களுடைய ஆதிக்கத்தை விரைவில் நீக்கிக் கொள்ள வேண்டு மென்பதும் பிலிப்பைனர்களுடைய சுதந்தரத்தை அங்கீகரித்துக் கொள்ளவேண்டு மென்பதும் மேற்படி ஜோன்ஸ் சட்டத்தில் காணப்பட்டது.

நிருவாகம் முழுவதும் ஒரு கவர்னர் ஜெனரலின் கீழ் இருக்கிறது. அமெரிக்கன் செனெட்டின் அங்கீகாரத்தைப் பெற்றுப் பிரசிடெண்டினால் இவர் நியமிக்கப்படுகிறார். இந்த கவர்னர் ஜெனரலின் கீழ் ஒரு வைஸ் கவர்னர் இருக்கிறார். இவரும் மேற்படி விதமாகவே நியமிக்கப்படுகிறார். இவர் கல்வி இலாகாத் தலைவராகவும் இருக்கிறார். இது தவிர கவர்னர் ஜெனரலால் நிர்ணயிக்கப் படும் வேறு வேலைகளையும் இவர் கவனிப்பார். கவனர் ஜெனரலுக்கு உதவியாக ஆறு அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். இவர்களடங்கியதே மந்திரி சபையாகும். உள் நாட்டு இலாகா, கல்வி இலாகா, பொக்கிஷ இலாகா, நீதி இலாகா, விவசாய இலாகா, வியாபாரப் போக்கு வரவு இலாகா ஆகிய இந்த ஆறு இலாக்காக்களையும் மேற்படி ஆறு அங்கத்தினர்கள் நிருவகிக்

கிறார்கள். ஒவ்வோர் இலாக்காவுக்கும் ஒவ்வொரு காரியதரிசி உண்டு. கல்வி இலாகா காரியதரிசி தவிர மற்றக் காரியதரிசிகள் ஐவரும் பிலிப்பைனர்களே யாவார்கள்.

நிருவாக இலாகாக்களின் காரியதரிசிகளுக்குச் சட்டசபையில் ஸ்தானம் இல்லை. ஆனால் காரிய தரிசிகளை வரவழைத்து அவர்களைக் கேள்விகள் கேட்கச் சட்ட சபைக்கு உரிமையுண்டு. அப்படியே காரிய தரிசிகளும் தங்களுடைய அபிப்பிராயத்தைச் சட்ட சபையில் தெரிவிக்க உரிமை உண்டு. இது தவிர, கவர்னர் ஜெனரலுக்கு ஆலோசனை சொல்ல இராஜ்ய சபை என்ற ஒரு சபை உண்டு. இதில் கவர்னர் ஜெனரலும் ஆறு இலாகாக்களின் காரிய தரிசிகளும், இரண்டு சட்ட சபைகளின் அக்கிராசனாதிபதிகளும், அங்கத்தினர்களா யிருப்பார்கள். செனெட் சபை என்றும் ஜனப் பிரதிநிதிகள் சபை என்றும் இரண்டு சபைகள் உண்டு. செனட் சபையில் இருபத்து நான்கு அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். செனட்டர்களும் ஜனப்பிரதி நிதி சபை அங்கத்தினர்களும் ஜனங்களாலேயே தெரிந் தெடுக்கப் படுகிறார்கள். ஆனால் பின்னடைந்த மாகாணங்கள் என்று அழைக்கப் படும் நான்கு மாகாணங்களின் பிரதி நிதிகளாக ஒன்பது ஜனப்பிரதிநிதிசபை அங்கத்தினர்களும் இரண்டு செனட்டர்களும் கவர்னர் ஜெனரலால் நியமிக்கப் படுகிறார்கள். ஜனப் பிரதி நிதிகள் மூன்று வருஷகாலமும் செனட்டர்கள் ஆறு வருஷ காலமும் தங்களுடைய ஸ்தானங்களை வகிக்கிறார்கள். சுயாட்சி பெற்ற குடியேற்ற நாடுகள் அநுபவிக்கும் உரிமைகளைப் போல தங்களுக்கும் வேண்டு மென்று பிலிப்பைனர்கள் விரும்பினாலும் ஜோன்ஸ் சட்டப்படி அவர்களுக்கு இந்த உரிமை இல்லை. கவர்னர் ஜெனரலுக்கு நிராகரிப்பு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. வரவு செலவு திட்டத்தில் சட்ட சபையினர் எந்தத் திட்டத்தையேனும் நிராகரித்து விட்டால், இந்தியாவில் இராஜப் பிரதிநிதிக்கு இருப்பது போல் பிலிப்பைன் கவர்னர் ஜெனரலுக்குத் தமது விசேஷ அதிகாரத்தை உபயோகித்து மேற்படி திட்டத்தை அப்படியே நிறுத்திவிட அதிகாரம் கிடையாது. பொக்கிஷ இலாகாவைப் பிலிப்பைனர்கள் வெகு திறமையுடன் நிருவகித்து வருகிறார்கள் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா ஐக்கிய மாகாண காங்கிரஸில் பிலிப்பைன் தீவுகளின் பிரதி நிதிகளாக பிலிப்பைன் சட்டசபையினர் தங்களில் இருவரைத் தெரிந் தெடுத்தார்கள். அமெரிக்கா காங்கிரஸ்காரருக்கு என்ன சம்பளம் கொடுக்கப்படுகிறதோ அதே சம்பளமே இந்த இரண்டு பிரதி நிதிகளுக்கும் கொடுக்கப்படுகிறது. மேற்படி காங்கிரசில் இவர்களுக்கு ஓட்கொடுக்கும் சுதந்திரம் தவிர மற்றெல்லாச் சுதந்திரங்களும் அளிக்கப் பட்டிருக்கின்றன.

நீதி இலாக்காவின் நிருவாகம் ஒரு சுப்ரீம் கோர்ட். முதல் தர கோர்ட்டுகள், மணிலாவிலுள்ள முனிசிபல் கோர்ட், ஒவ்வொரு நகர சபை இடங்களிலுமுள்ள நீதி ஸ்தலங்கள் ஆகிய இவைகள் வசம் இருக்கின்ற சுப்ரீம் கோர்ட்டே பிலிப்பைன் தீவுகளில் உயர்ந்த நீதி

ஸ்தலமாகும். சுப்ரீம் கோர்ட்டில் ஒன்பது நீதிபதிகள் இருக்கிறார்கள். இந்த நீதி பதிகள் அமெரிக்கா பிரசிடென்டினால் நியமிக்கப் படுகிறார்கள். பிரதம நீதிபதி எப்பொழுதும் ஒரு பிலிப்பைனராகவே நியமிக்கப்படுகிறார். இருபத்தையாயிரம் டாலருக்கு அதிகப்பட்ட வழக்கா யிருந்தால் சுப்ரீம் கோர்ட்டி லிருந்து அமெரிக்கா சுப்ரீம் கோர்டுக்கு அப்பீல் செய்து கொள்ளலாம்.

பிலிப்பைன் தீவுகள் நிருவாக சௌகரியத்திற்காக நாற்பத்தாறு மாகாணங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றன. இவைகளில் முப்பத்து நான்கு மாகாணங்கள் சாதாரண மாகாணங்களாகவும் பன்னிரண்டு மாகாணங்கள் விசேஷ மாகாணங்களாகவும் கருதப்படுகின்றன. ஒவ்வொரு மாகாணமும் கவர்னர் காரியதரிசி பொக்கிஷதார் மூன்றுவது அங்கத்தினர் ஆகிய மூவரும் அடங்கிய ஒரு போர்டினால் நிருவகிக்கப் படுகிறது. இந்தக் கவர்னரும் மேற்படி போர்டின் பிற அங்கத்தினர்களும் பொது ஜனங்களால் தெரிந்தெடுக்கப் பட்டவர்களே யாவார்கள். விசேஷ மாகாணங்களின் கவர்னர்கள் கவர்னர் ஜெனரலால் நியமிக்கப் படுகிறார்கள்.

சுமார் ஆயிரம் இடங்களில் நகர பரிபான சபைகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. தலைவர் உபதலைவர் அங்கத்தினர்கள் ஆகிய இவர்கள் அனைவரும் பொது ஜனங்களால் தெரிந்தெடுக்கப் பட்டவர்களே யாவார்கள். மாகாண அரசாங்கங்களின் மேற் பார்வையிலேயே நகர சபைகள் இருக்கின்றன.

பிலிப்பைனர்கள் வியாபார விஷயங்களில் அதிக ஊக்க முடையவர்களா யிருக்கிறார்கள். பிலிப்பைன் நேஷனல் பாங்கி என்று ஒரு பாங்கி ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இது தவிர வருஷத்திற்குப் பதினைந்து லட்சம் ரூபா இலாபம் வரக்கூடிய ரெயில்வேக்களையும் பிலிப்பைனர்கள் நிருவகித்து வருகிறார்கள். இரும்புத் தொழில் நிலக்கரித் தொழில் சிமண்டுத் தொழில் முதலியவைகளையும் அவர்கள் நிருவகித்து வருகிறார்கள். பிலிப்பைனர்கள் சிறி தளவு சுய ஆட்சி பெற்ற பிறகு கல்வி அபிவிருத்திக்காக அதிகப்பாடுபட்டிருக்கிறார்கள். இப்பொழுது நூற்றுக்கு எழுபது பேர் கல்வி ஞான முடையவர்களாக இருக்கிறார்கள். ஸ்பெயின் இத்தாலி கிரீஸ் முதலிய நாடுகளை விட இங்கு கல்வி அபிவிருத்தி அதிகம் என்று கூறலாம். கைத்தொழில் கல்வியிலும் விவசாய கல்வியிலும் அதிக கவனம் செலுத்தப் படுகிறது.

பிலிப்பைன் தீவுகளின் இராணுவ உத்தியோகஸ்தர்களின் உபகாரச் சம்பளம் தபால் செலவு இராணுவ உத்தியோகஸ்தர்களின் சம்பளம் முதலிய செலவுக்காக அமெரிக்கா வருஷந் தோறும் ஆறு கோடி ரூபாய் செலவழிக்கிறது. பிலிப்பைன் தீவுகளில் இரண்டு அரசியல் கட்சிகள் இருக்கின்றன. இரண்டு கட்சியினரும் பூரண சுதந்தரம் வேண்டு மென்று கேட்கிறார்கள்.

"மாடரன் ரெவ்யூ"

இயற்கையின் உயர்வு

மலர் தலை உலகில் ஆண்டவன் படைத்தவை எல்லாம் இயற்கையாம். மக்கள் அவைகளைப் பல் வேறு முறையிற் கலந்து தமது கைத்திறனைக் கொண்டு இயற்றியவை செயற்கை ஆம். ஈண்டு யாம் இவ்விரண்டினுள் இயற்கை உயர் வெனப் படுவதை ஆராய்வாம்.

இயற்கையின் எழிலைப் பற்றி எழுத எழுதுகோலுக்கு ஆற்றலில்லை. இயற்கை எல்லாம் எழிலுரு வென்றே இசைத்தல் ஆம். இயற்கையின் உரனும், உயரிய அழகும், செயற்கையை விடப் பன்னூறு மடங்கு மேலாய தென்பது மறுக்க முடியாததோர் உண்மையாம்.

மலரினில் எத்தனை வித அழகு! மணத்தின் உயர்வு தான் என்னே! பன்னூறு விதப்படு வன்னங்க ளெல்லாம் மலரினைக் கொண்டன்றோ மனிதன் ஆக்கக் கற்றனன். எத்துணை வல்லமை பொருந்திய ஓவியனும், உண்மை மலரினைப் போன்று வரைதல் இயலுமா? கடு களவு வேற்றுமையும் இன்றி அவ்வா றியற்றல் இயலா தென்பது திண்ணம். மெல்லிய இதழ்களின் தண்மையை மனிதன் ஆக்க வல்லனா!? நெட்டியானும், காகிதத்தானும் மலர் பல மாண்புறப் புனைந் திடினும் மணம் உறுத்தல் சாலுமா? மலரின் தூயலாம் மென்மை பொருத்த முடியுமா?

அழகிய மாதர்கள்! இள நகை தோன்றும் குழந்தைகள்! இவர் தம் முகத்தில் ஒளிரும் வனப்பை மனிதன் வனைவானா? பாவை பல செய்திடினும் உண்மை ஒளி யினையும், இனிய மழலைச் சொல்லையும் புகுத்துதல் சாலுங் கொல்? தளர் நடைச் சிறுவர் தம் கிளர் நகை ஒளி யினைச் செம்மை யுறப் பொம்மையில் அமைக்கும் திறன் மனிதனுக்கு ஏது? இயற்கையை விஞ்சும் செயற்கை இல்லை என்பது முக்காலும் உண்மை. இயற்கை யின்றிச் செயற்கை இல்லை என்பதும் உண்மையன்றோ?

இனி, இயற்கை தான் பெரி தெனின் செயற்கையின் சீரிய செயல்கள் கீழானவையா? நிகழும் நாகரீக சகாப்தத்தில், எத்துணை விமானங்கள்! மின்சாரத் திரு விளையாடல்கள்! யந்திரங்கள்! இவைகளெல்லாம் பேர் பெறும் சீர் சான்ற தன்றோ? ஆகாய விமானத்தின் அமைப்பு எத்துணை உயர்வு பொருந்தியது? நீராவி யந்திரங்களின் இறும்பூது எய்தத்தக்க விளைவு தான் என்னே! இவைகளெல்லாம் இயற்கையில் அமையுமா? எனின்; இனிய ஓசையும் அழகிய தோற்றமும் அமைந்த பறவை! இனங்களாம் வான் பொறிகளும், எல்லா யந்திரங்களையும் இயக்கும் வலிமையும் அறிவும் செறிந்த நுண்ணிய அங்கங்கள் நிறைந்த மானிட இயந்திரமும், சூரிய சந்திர விளக்கங்களும், மீனினங்களாகிய கப்பல்களும், மனிதன் ஆக்கிய செயற்கை யந்திரங்களுக்குச் சிறிதேனும் கீழ்ப்பட்டன அன்றாம். அழகிய படங்கள்

இயற்கையின் உயர்வு

எல்லாம் இயற்கை 'எழிலை அமைத்த போலி நிழலே ஆம். இனிய கீதங்களெல்லாம் இயற்கையில் அமைந்த மிடற்றின் ஓசைத்திரளே. உயரிய மணங்களெல்லாம் கடவுள் அளித்த மலரின் மணமே. ஆதலின் எவ்வாற்ருனும் இயற்கை செயற்கையில் இம்மியும் கீழான தன்றென்பது போதரும்.

இனி; செயற்கை தானே கண்ணைக் கவர்கின்றது? இயற்கை அன்றே. ஆகாய விமானங்களை எல்லாரும் அங்காந்த வாயுடன் நோக்கு கின்றனர். பறவைகளைப் பார்ப்பவர் யாவர்? என்று வினவலாம்.

மனிதன், எப்பொழுதும் புதுமையையே அவாவு கின்ருன். புதுப் பொருள்கள் எல்லாம் அவனது நோக்கத்தைக் கவருகின்றன. பழைய கிழவர்களைப் பார்ப்பதில்லை, ஆனல் இளங் குழந்தைகளை அன்புடன் முத்த மிடுகிருன். இயற்கை என்றும் உண்டு. அதற்கு அழிவில்லை. மனிதன் இயற்கையைப் பழைய தென்கிருன். இன்று பார்த்தவைகளையே நாளையும் நோக்குகிருன். செயற்கையோ புதிது புதிதாக உண்டானவை. ஆதலின், மனிதன் இயற்கையிலும் செயற்கை யினிடத்தே தனது கவனத்தை மிக்குச் செலுத்து கின்ருன். அன்றியும், ஒவ்வொருவனும் தனது படைப்பி னிடத்தே மிகுந்த பற்றுக் கொள்கிருன். எல்லாக் குழந்தைகளையும் அன்புடன் நோக்கினும் தனது குழந்தை யிடத்தில் மிகுந்த பிரேமை செலுத்துகிருன். தானே வெளுத்த துணியில் வண்ணுன் துணியை விட இன்பம் புலப்படுகிறது. தான் சமைத்த சிறு பாட்டு கம்பர் கவியினும் இனிக்கின்றது. ஏன்? தன் சொந்த உழைப்பின் பயன் அன்ருே அது? இதனுற்ருன் 'தான் தேடாப் பொன்னுக்கு மாற்று மில்லை. உரையு மில்லை' என்ற பழமொழியும் எழுந்த தாம் என்க. அவ்வாறே, மக்கள் தமது சொந்த முயற்சியிற் சமைத்தது செயற்கை ஆதலின், கவர்ச்சி செயற்கை யிடத்து மிக்க தாம். எங்ஙனம் ஒரு புலவன் தனது கவி யினிடத்து மற்றவைகளை விட உயரிய இன்பத்தைக் கண்டாலும் மற்றை யோர்கட்கு உயரிய காவியங்களே இன்பம் பயப்பன ஆகுமோ அங்ஙனமே, மக்களும் தமது உரிமையாம் செயற்கை மாட்டுப் பெரிதே கவன்றிடினும், உண்மையில் இயற்கையே உயர்வாகும். அதன் உயர்வு மக்கட் பற்றற்ற ஆன்ருேர் கட்கும், மனித உலகத்தைக் கடந்து கற்பனு உலகத்தில் உலவும் கவிகளின் மனத்திற்கும் புலன் ஆம். அத்தகைய இயற்கைக்கு ஏதுவாயிருக்கும் இறைவனைப் பணிந்து, இயற்கையைப் போற்று வோமாக.

கி. வா. ஜெகநாதன்.

அறிவின் பயன்

IV உளநூல் (Psychology).

(B. S. குமாரஸ்வாமிப் பிள்ளை எழுதியது.)

மலர் (Vol) 2-ல் 637-ஆம் பக்கத் தொடர்ச்சி.

I. நூலின் இலக்கணம்:—எந்த நூலிற்கும் இலக்கணங் கூறி அதன் கருத்தைக் குறிப்பிடுவது எளிதல்ல. விசேடமாக சாஸ்திரத் தொகுதிகளாய் வகுக்கப் பட்டிருக்கும் நூல்களின் கருத்தைப் பிற நூல்களின் கருத்தோடு தழுவாமற் கூறத்துணிவது அதனினும் கடினமே.

உளநூல் (உளம்+நூல்) என்பதற்கு ஆங்கிலத்தில் ஒரேபதமே ஏற்பட்டுளதாயினும், அப்பதம் (Psychology) கிரீக்குப் பாஷையிலுள்ள இரண்டு பதங்கள் சேர்ந்ததாகும். அந்நூலிற்குப் பலவாறு அருத்தமும் பொருளுங் கூறியிருக்கின்றனர். பூர்வீக கிரேக்கர் அதனை, ஆத்ம சாஸ்திர மென்றும் மத்திய காலத்தவர் மனநூலென்றும், மனோ சாட்சியின் பாகத்தைக் கூறும் ஞான கன்மேந்திரியங்களடங்கிய மனோதத்துவ நூலென்று தற்காலத்தவரும் கூறியுள்ளார்கள். இவைக ளெல்லாவற்றிலும் உளம்+நூல் என்ற இரண்டு பதங்களாலான உளநூல் எனக் கொள்வதே மிகவும் பொருத்தமானதென்றெண்ணி அங்கிலேய வார்த்தை (Ps, chology) **ஸைக்காலஜி** என்பதற்கு உளநூல் எனப் பெயர் புனைந்தோம்.

பண்டைக்கால கிரேக்க தத்துவ ஞானிகள், ஆத்மாவானது, ஆவியினும் மெல்லியதாய் சரீரம் முழுவதும் வியாபித்திருக்கிற தென்றும், உடல் நீத்து உயிர் நீங்கிய பின்னரும், அந்த ஆவி வேறிடம் தங்கி நின்று சில காலத்திற்குப் பின் வேறு மோர் சரீரத்திற் புகுந்து தங்கி நிற்கு மென்றும், அவ்வாவி என்றும் அழிவிலாத பொருளென்றும் கூறினார்கள். பின்—டெக்கார்ட்டு (Descartes) என்னும் தத்துவாசிரியர், மனிதருக்கு மட்டுமே ஆத்மா உள தென்றும், உயர்தரமான பகுத்தறிவும், நீதி நிலைகாட்டும் பேரறிவும் மனிதர் ஒருவருக்கே உரித்தானதென்றும் கூறுகின்றார். இனிப் பதினெட்டாம் நூற்றாண்டில் எழுந்த தத்துவ சாஸ்திரிகளின் கருத்தினை ஆராய்ந்தறிவோம்:— ஆத்மா வென்பது சமயச் சார்புபற்றி மனநிலைக்கு அமைத்த தோர் வார்த்தை யென்று ஜாண் லாக்கு (John Locke) அபிப்பிராயப் படுகிறார்; பெர்க்கிலி (Berkeley) அவ்வபிப்பிராயத்திற் பொருந்ாது, ஆத்மாவிற்கு ஓர் உன்னத பதவி யளித்துள்ளார். ஆத்மா வென்ற ஓர் பொருள் கிடையா தென்றும், பரம்பரையாய் வழங்கி வரும் இப்பதத்திற்கு, விசேஷ உற்பத்தியோ இலட்சணங்களோ கிடையா தென்றும், ஆத்மா வென்ற ஒரு பொருள் உண்டென்று தகுந்த காரணத்துடனும் உதாரணங்களுடனும் ஸ்தாபித்துக் கூற முடியா தென்றும், ஸ்காட்டு தத்துவ ஞானியார் டேவிட் ஹியூம் (David Hume) வற்புறுத்திக் கூறுகின்றார். ஆனால் இம்மானுவேல் கான்று (Immanuel Kant) என்

பவர், மனிதரின் நல்லொழுக்கம் ஒன்றையே கவனிப்போ மாயினும் ஆத்மாவானது நம தறிவிற்குப் புலப்படாத ஓர் அழிவிலாப் பொருள் என நன்கு புலப்படு மென்று எதிர்த்துக் கூறியுள்ளார். ஆனதினுல் நிலை பெற்றிருக்கும் பொருள்களைப் பற்றிக் கூறுது, அப்பொருள்களின் முயற்சியினைப் பற்றிக் கூறுவதாலும், அம்முயற்சியின் பலன் இன்ன தென ஆராய்ந்தறிவதுமே உளநூலின் கருத்தா மென்றும், அது பற்றி முயற்சிக்குரிய கல்வியைப் புகட்டுவதே—உளநூல் கொள்கை யென்றும் தற்கால சாஸ்திர நிபுணர்கள் இலக்கணங் கூறி யிருக்கின்ருர்கள்.

II. மனேதத்துவ நிலை :—இயற்கையாய் அமைந்துள்ள அங்க உறுப்புகள் அவயவங்கள் பிறந்த காலந் தொட்டு முதிர்ச்சி யடைகின்ற பற்பல மாற்ற தேற்றங்களின் தன்மையாகவே, மனே தத்துவ நிலையும் பிறப்பின் முதல் பல பக்குவ பருவங்கள் கடந்து, அக உணர்ச்சி புற நிகழ்ச்சிகளால் முதிர்ச்சி யடைந்து, சரீரம் தளர் வடைகின்ற காலத்து உள நிலையாகின்ற அறிவும் குன்றித் தளர்வடை கிறதை நன்கறிகின்ருேம். மனிதனின் உளமானது காட்சி யளவை யினுலும் கருத லளவையினுலும் மிகுதியும் அறிவைப் பெறுகின்றது.

(i) ஜீவ வர்க்கத்தின் விசேஷத் தொகுதியாகின்ற மக்கள் முதிர்ச்சி பெற்றுத் தம் இனத்தைப் பெருக்குவதற்கும், அவ்வினம் தழைத் தோங்கி நிற்குமாறு, இதர இனங்களைத் தாங்கி நிற்பதற்கும் அவசியமான முயற்சிகளைப் பரிபாலனஞ் செய்வதான மனே நிலை யைக் குறிப்பதே காட்சியளவை (Cognation) என்று கருதப் படுகின் றது. மஹா கவி சிரேஷ்டரான ஷேக்ஸ்பியர் தொகுத்த ஏழு பரு வங்களையுங் கடந்து செல்கின்ற மனிதன் ஒரு பருவந்தாண்டி அடுத்த பருவம் எய்தும் காலத்தும் தனது மனே நிலை மாற்ற மிலாது ஒரே தன்மையாய் இருக்க முடியாது. புறப் பொருள்களின் காட்சியினுலும் முயற்சியினுலும் அடையும் மாற்றங்கள் மிக உண்டு.

(ii) காட்சி யளவையின் ஏவல்பற்றி, ஐம்புலத் தோற்றங்கள் மனே நிலையில் சிற்சில சலனங்கள் ஏற்படுத்த அப்பொழுது அகமா கிய மனத்தினுள்ளே, செய்வது இன்னது, செய்யத் தகாததின்னது என்று ஓர் நிதானிக்குந் தன்மை யேற்படுகின்றது. அதையே உள நூல் வல்லார் கருத லளவை (Conation) யென்று வேறு படுத்திக் கூறி யிருக்கின்ருர்கள்.

(iii) ஒவ்வொரு காட்சி யளவையினுலும் கருத லளவை யொன் றேற்படுவதே இயல்பாகும். அக்காட்சியின் பயனுய் யாதாமொரு சலனமோ முயற்சியோ ஏற்படும். இவ்விரண்டும் ஒன்ருே டொன்று தொந்தப் பட்டு சரீரக் கட்டும் மனே நிலையும் பலமாற்ற தேற்றங்கள் அடைகின்றன ; அவயவங்களும் அறிவும் அபிவிருத்தியா கின்றன. அக உணர்ச்சியை ஏற்படுத்தும் கருத லளவையானது புறப் பொருள்களான அன்னிய மனிதர்களினுலும், இதர வர்க்கப் பிராணி

களினாலும், இடம் மாற்றத்தினாலும் ஏற்படுவதுடன், உயர்தர நற்குணங்களினாலும், அதிகாரத் தன்மையினாலும், நற்கலை யறிவினாலும், பொருள் மிகுந்த மகத்துவ நிலையினாலும் ஏற்படும் உள நிலையும் மிகவும் கவனிக்க வேண்டும் பாகமாகும். இப்பாகத்தை சில தத்துவ சாஸ்திரிகள் கருத லளவையின் சிறந்த பாகமாகக் கூறுகின்றார்கள்.

III. உள நூற் றொகுதிகள். இனி உள நூலின் முக்கியமான தொகுதிகள் என்ன வென் றாராய்வதும் அவசியமாகும்.

(i) மனிதர்கள் முழு ஆரோக்கியத்தோடு இருக்கும் பொழுது அவர்களின் மனோ நிலை, முயற்சி இவைகள் பற்றிக் கூறும் பாகத்தை மக்கள் உளம் பற்றிக் கூறும் தொகுதி யென்கிறார்கள்.

(ii) இதர பிராணிகளின் உளம் பற்றிக் கூறுவதை அடுத்த தொகுதி யெனக் கூறுகிறார்கள்.

(iii) குழந்தைகள் சிசுப்பருவந் தொடங்கி யௌவனப் பிராயம் அடையும் வரை அநேக பக்குவங்கள் சீர்திருத்தங்க ளடைகின்றன. அப்பாகத்தை யௌன மக்களின் உளநிலை யெனக் கூற வேண்டும்.

(iv) உலகத்தில் ஒரே உள நிலையை யுடைய இரண்டு மனிதர்களைக் காண்பதே முடியாது. ஒவ்வொரு மனிதனுக்கும் தனது முயற்சிக்கும் மனோ சக்திக்கும் ஏற்பச் சில விசேஷ குணங்கள் ஏற்பட்டிருப்பதால் அவைகளை ஆராய்ந்தறியலாம். சமுத்திரத்தையே தம் நாடாகக் கொண்டு வாழ்கின்ற மாலுமி களுக்கும் சமுத்திரமே கண்டறியாத வேறு மனிதர்களுக்கும் மனோ நிலை எவ்வளவு வித்தியாச மாய்க் காணப்படுகிறது ? இப்பாகத்தை மக்களின் தனித்தனி உளம் பற்றிக் கூறும் தொகுதி யெனக் கூறலாம்.

(v) மனிதர்கள் நோயுற்றிருக்கும் பொழுதும் அறிவு குன்றி உன்மத்த மாகுஞ் சமயத்திலும் மிகுந்த வித்தியாசத்துடன் காணப்படுகின்றார்கள். இவைகளை நிதானித்துக் கூறுகின்ற பாகத்தை மக்களின் அசாதரண உளநிலை யென்று கூறுவோம்.

(vi) ஒவ்வொரு சமுதாயத்தாரும் அனேக விதிகளை அனுசரித்தும், புது விதிகளை ஏற்படுத்தியும், தமக்கும் பிறருக்கும் உள நிலையில் சில மாற்றங்களை ஏற்படுத்து கின்றார்கள். சமீபகாலம் வரையும், அமெரிக்காவில் ஐரோப்பியருக்கு அடிமையாய் வாழ்ந்து வந்த காட்டாளார்கள், இப்பொழுது சம உரிமைக்கு வாதாடு கின்றதை நன்றாய் அறிவோம். அவர்கள் சம உரிமைக்கு வழக்கிடுவது குற்றம் அல்லவே யெனினும், அவர்களது மனோ நிலை மாற்ற மடைந்து வருவதொன்றே இவ்விடம் கவனிக்கற் பாலது. இப்பாகத்தைப் பொது ஜன உளம் பற்றிக் கூறும் சமுதாய அறிவென்று கூறுவோம்.

மேற் கூறிய ஐந்து பாகங்களில் ஒவ்வொன்றையும் நன்றாய்க் கற்றறிவதற்கு மூன்று முறைகள் அனுசரிக்க வேண்டிய தாகும்.

(A) பிரமாண பிரமேயத்தினால் அறியலாகும்.

(B) பரிசோதனையினாலும் உதாரணங்களினாலும் அறியப்படும்.

(C) சுதத்துவ பரதத்துவ நிலையினாலும் அறியலாகும். இவைகள் ஒவ்வொன்றையும் தனித் தனியாகவும் சேர்த்தும் பிரயோகஞ் செய்யவும் அவசியம் ஏற்படும். அக்கோட்பாடுகளைத் தக்க சான்றோடு விரிவாய்க் கூறின் மிகையாகு மென்றஞ்சி விடுத்தனம்.

IV. பிராணிகளின் உளம் பற்றிக் கூறும் பாகம். யாவரும் மதிப்பிடக் கூடிய மஹாதத்துவ சிரேஷ்டர்கள் ஹெர்பர்ட்டு ஸ்பென்ஸரும் (Herbert Spencer) எர்னெஸ்ற்று ஹெக்கேலும் (Ernest Haeckel) கூறுவ தென்ன வெனில் மனிதரின் சரீரக் கட்டும், நரம்பு, தசை, எலும்பு உள் அவயவங்கள் யாவும், பல யுகங்களாய்ச் சீர்திருத்த மடைந்து வந்த தன்மையாகவே மனிதரின் மனோதத்துவ நிலையும் அது காலத்திற் கேற்பத் தற்பிரகாசம் பொருந்தி அபி விருத்தி யடைந்திருக்கிற தென்றும், மனிதரின் உள நிலையும் இதர பிராணிகளின் உள நிலையும் இப்பொழுது பெரும் வித்தியாசத்துடன் காணப் படினும், ஒரு காலத்தில் ஆதி மனிதனின் உளம் தற்காலப் பிராணிகளிலும் தாழ்ந்தவைகளாகவே இருந்திருக்க வேண்டு மெனக் கூறுகின்றார்கள். இக்கொள்கையினின் றேற்பட்ட விவாதங்களும் தர்க்கங்களும் அற்ப சொற்பமல்ல. ஆனால் பேதமையான ஓர் சிசுவானது சில வருடங்களில் ஒரு அருமையான அபூர்வமான கவிசிரேஷ்டராய் வளர்ந்து வர முடியுமானால், மிகுந்த அறிவுடன் காணப்படும் மக்கள் தொகுதியைச் சார்ந்தோர் வெகு காலத்திற்கு முன் மிகுந்த தாழ்ந்த அறிவுடையோராகவே இருந்திருப்பார் என்பதற் கையமில்லை.

ஆனால் டார்வின் (Darwin) என்பவரும் அவரைப் பின் பற்றிய தத்துவ சாஸ்திரிகளும், மனிதரின் உள நிலையை மிகவும் உயர்ந்ததாக மதித்தாராயினும் அவர்கள் பொது ஜனங்களின் அபிப்பிராயங்களை, உயர்ந்ததோர் மகுடஞ் சூட்டிய எண்ணத்தினை, வேரறக் களைந்து அவரைப் புண்படுத்த வேண்டாமென்ற நோக்கத்துடன் அன்றி மனிதரின் உளம் வெகு சிரேஷ்டமான நுண்ணறிவுடன் படைத்திருப்பதாய் எண்ணினார்க ளில்லை.

முன் உயிர் நூலில் வீஸ்மான் (Weisman) என்பவரின் ஜெர்ம் பிளாஸம் அல்லது ஜீவத்தொடர் என்ற கொள்கையை விஸ்தாரமாய்க் கூறியுள்ளோம். அக்கொள்கையை அனுசரித்துச் சில குணங்கள் தாய் தந்தையர்களிட மிருந்து, மக்கட்கு ஏகுந் தன்மையாகவே, மானிடர்கள் தங்கள் வாழ் நாட்களில் பெறுகின்ற தனிக் குணங்களையும் (கல்வியினாலும், தன் பதவியினாலும், சூழ்ந்திருக்கிற ஜீவ வர்க்கங்கள் தாவர வர்க்கங்களினாலும் தட்ப வெப்ப நிலையினாலும் ஏற்படுவதான விசேட குணங்கள்) மக்கள் சுதந்திரமாய்ப் பெறக் கூடு மென்ற கொள்கை மிகவுந் தர்க்கத்தை உண்டு பண்ணி,அக்கொள்கையின் சார்பாகவும் நேர் விபரீதமாகவும் எழுந்த தத்துவ நூல்கள் மிகுதியாயுள. ஆனால் அக்

கொள்கை இன்னும் பூரணமாக நிர்ணயிக்கப் படவில்லை. இருபாகத்தும் உயர்ந்த தத்துவ சாஸ்திரிகளே பிடிவாதமாய்க் கூறுகின்ற காரணம் பற்றி நாம் நமது சொந்த அபிப்பிராயங் கூறி நிற்பதும் தப்பிதமென்று விடுத்தோம்.

V. யௌவனர்களின் உளநிலை.—குழந்தைகளின் இளமைப் பருவத்தில்—ஒவ்வொருவரின் தனிக் குணங்களை மிகுந்த ஜாக்கிரதையுடன் கவனிப்போ மாயின், நமக்கு அச்சிறு முயற்சி மிகுந்த வியப்பையும் சிறந்த அறிவையுந் தரும். ஒரு குழந்தை வாய் வயிற்றிற்கின்றி இழிவான ஸ்திதியிலும் ஒன்று மில்லா விடினும், தனது விடா முயற்சியினாலும் ஊக்கத்தினாலும் கற்பன கற்று அறிவில் தேர்ச்சி அடைகின்றது. இன்னொரு குழந்தைக்குப் பொருள் மிகுதியும், கல்விகற்பதற்குரிய சௌகரியங்கள் சகலமும் உடைத் தாயிருப்பினும், கல்வி கற்காது உலகில் அறிவிலும் நல்லொழுக்கத்திலும் குறைவுபட்டு தீயொழுக்கத் தாருடன் பழகி அவர்தம் செயல்களுக் குடன்பட்டும், தனது உற்றார் பெற்றோருக்கும் தனக்கும் தனது சமுதாயத்திற்கும் அக்குழந்தை என்றும் இன்னல் விளைவிக்கின்றதையும் நாமே காண்கின்றோம்.

(ii) ஒரு அலங்காரம் பொருந்திய அறையினுள் விலை யுயர்ந்த அணி ஆடைகளும், தின்பதற்குரிய தின்பண்டங்களும், விளையாட்டிற் குரிய பந்து, மட்டை தினுசுகளும், ஆயுதங்களும் கத்திகளும் கைத் துப்பாக்கிகளும் அணி அணியாய் தினுசுவாரி வகுத்து வைப்போம். பின், பத்துப் பன்னிரண்டு பிராயமே நிறைந்த பல சிறுவர்களை அவ்வறையின் ஒரு வாசல்வழி உட்சென்று தாம் விரும்பும் யாதாவ தொரு பொருளை மட்டும் குறிப்பிட்டு இன்னொரு வாசல் வழி வெளிக் கடந்து போகும்படி செய்வோம். அப்பொழுது தின்பண்டங்களை மட்டுமே விரும்பும் குழந்தைகளையும், ஆடை அணிகளில் ஆசை கொள்பவர்களையும், விளையாட்டையே விரும்பும் யௌவனர்களையும், ஆயுதங்கள் துப்பாக்கிகளை விரும்பும் குழந்தைகளையும் நேரிற் கண்டறியலாம். இவர்களிடத்து இயற்கையாய்க் காணப்படும் விருப்பங்கள் நாளடைவில் முதிர்ச்சி யடைந்து அதது விருப்பத்திற் கேற்ப முயற்சியிற் பிரவேசிப்பார் என நன்கு விளங்கும். ஆனது பற்றி இரட்சை கர்த்தா நிலைமையி லுள்ளோர் அதிபாலியத்திற் காணப்படும் சிரேஷ்ட குணங்களைப் பாழ்படுத்தாது பரிபாலித்து விருத்தியடையச் செய்வதுடன், சில குழந்தைகளிடம் காணப்படும் தகாத குணங்களையும் முற்றும் விலக்கவும் வேண்டும்.

VI. உன்மத்தர் உளநிலை.—மக்களின் சாதாரண உளநிலையைப் பற்றிக் கூறியவை அனைத்தும் மிகவும் கவனிக்க வேண்டும் பாகமாகும். அஃதோடு, சிறிது உன்மத்தங் கொண்டவர், முழுப்பயித்தியங் கொண்டவர் இவர்களது மனோசுபாவமும் ஆராய்ந்தறியவும் வேண்டும். இயற்கையான நற்குணமோ, துர்க்குணமோ உன்மத்தமாகுஞ் சமயம், பகிரங்கமாகி அதிகரித்துக் காணப்படும்—அளவுகடந்த சந்தோஷத்தினாலோ ஆறாத் துயரத்தினாலோ மதி யிழந்தோ ரெத்தனை பேர்?

இயற்கையி னழகைக் கண்டு தான் மிகவும் இன்புற்று ஏனைய உலகம் அனைத்தும் பாடி ஆனந்த மடையும்படி மிகுந்த வர்ணனை யுடைய பாடல்களை இயற்றும் கவிவாணர்களும், ஒரே தத்துவப் பொருள் பற்றி தன் ஆயுள் நாள் முழுமையும் செலவு செய்து புதிது புதிதான கொள்கைகளைக் கண்டு பிடிக்கும் தத்துவ ஞானிகளும், பேரறிவு பற்றி உலகெங்கும் சமயப் போர் விளைக்கின்ற சமயவாதி களும் அபூர்வமான சிரேஷ்ட அறிவுடையவர்களும், ஒவ்வொருவித உன்மத்தம் பிடித்தவர்களென்றே கருதப்படுகிறார்கள். உன்மத்தம் பிடித்தவர்கள் என்று இயல்பாகக் கருதப்படாவிடினும், இயற்கை யினும் மிஞ்சி அளவு கடந்து அவரது மனோ நிலை சலனமடைந்து முயற்சி செய்யுந் தருணத்தில் அவர் உன்மத்தத் தன்மை பொருந்தியே யிருக்கிறார்கள். அவரது மனோநிலை கருமம் புரியுங் காலத்தில் தம் போக்கின்படி அவ்வறிவு மிதந்து 'செல்வதன்றி, தம் சமீபத்தில் நடக்கும் சம்பவங்களும் காட்சிப் பொருள்களும் அவர்கள் மார்க் கத்தைத் தடை செய்ய முடியாது. அப்பொழுது—

“ ஆவியோ நிலையிற் கலங்கியது
யாக்கை அகத்ததோ புறத்ததோ அறியேன் ”

என்றபடி அவர்கள் தற்சமயம் மனந் தடுமாறிச் சரீர முண்டோ, உள தாயின் எங்கே, எனத் தடுமாற்றம் அடைகின்றார்கள்.

VII. சமுதாய மனநிலை. (பொதுமக்கள் உளம்) “ அறிவும் நற்குணமும் ஒன்றே ” என்று தத்துவ சாஸ்திரிகள் ஸ்பென்ஸரும் ரூஷ்ஷே (Rousseau)யும் கூறுவார்களாயினும், வேறு சில தத்துவ ஞானிகள், நாம் கற்கின்ற அறிவனைத்தும் நற்குணத்தையேதருமோ ? அன்று ! நல்லன தீயன கற்றுச் சமுதாயத்தார் தீயவை அகற்றி நல் லன போற்றுவார், எனக் கூறுகின்றார்கள். ஏக காலத்தில் ஒரு நாட் டாரின் உளநிலை முழுமையும் மாற்றமடையவுங் கூடும். பிரெஞ்சு தேசத்தார் அனைவரும், சக்கரவர்த்தி நெப்போலியன் ஆஞ்ஞைக்கு உடன்பட்டு, ஐரோப்பாக் கண்டம் முழுமையும் அடக்கி அரசாண்டு, பின் ஆசியாக்கண்டம் முழுமையும் கீழ்ப்படுத்தி, அதன் பின் உலகம் முழுமையும் அடக்கி அரசாண்டு விடலாம் என்ற பேரவாக் கொண்டி ருந்தார்கள். தற்போது நடந்த ருஷிய ஜப்பானிய யுத்தத்தில் ஜப் பானியரின் தீவிர ஊக்கமும் நற்பயிற்சியும் சமுதாய ஒற்றுமையும் அன் றோ அவர்கட்கு வெற்றியைத் தந்தன ! ஓர் நாட்டின் சமுதாய உளநிலை யைப் பற்றி அவர்களது முயற்சியும் முன்னேற்றமும் நல்வாழ்வும் பிரபல்லியமாகின்றன—மனங்குன்ற வாழ்வும் குன்றும். ஆகவே சமு தாயத்தாரின் மனோநிலை யாவரும் அங்கீகரித்து ஆதரிக்க வேண்டும் நீதியில் ஒழுக்கமடைய வேண்டிய தவசியமாகும். சமுதாய வர்த் தனைக்கு மூன்று குணங்கள் அவசியமென நிர்ணயித்திருக்கிறார்கள்.

(i) ஏவற்பொருள் :—தன்னாலும் பிறராலும் புறப்பொருள்களி னாலும், இன்னதை நீ இப்பொழுது செய்வாய், இப்பொழுது எவ்விடத் திற்கு ஏகுவாய், எனக்குறிப்பினால் உணர்கின்றோம். ஏவல்க ளனேக

மிருப்பினும் அவைகளை நிதானித்துக் கருமத்தில் பிரவேசித்தற்குரிய வேறு உளநிலையும் காண்கின்றோம்

(ii) ஒத்துணர்வு :—கூடிவாழும் சுபாவத்தினாலும், தன்னைப் போற் பிறரையும் கருதும் ஒத்துணர்ச்சியினாலும், கோபமும், பயமும், பிராணிகளிடத்திலும் உயர்தர மக்களிடத்தும் காணப்படுகின்றன— தன் காரியம் தனக்கு என்று வாழ்கின்ற சமுதாயத்தில், கோபமும் பயமும் குறையுமாயினும் நாகரீகம் வளர்ந்து வருகிற பொழுது ஒத்துணர்வும் வளர்ந்து வருவதாகவே காணப்படும். அதுவு மன்றித் தன்னையே வெறுத்துத் தன்னுயிரையே பிறர் பொருட்டு அர்ப்பணஞ் செய்யும் மேதாவிகளையும் காண்கின்றோம்

(iii) பின்பற்றும் குணங்கள் :—சிரேஷ்டமான அறிவாளரிடத்தில் காணப்படும் விசேட குணங்களைப் பின் பற்றி சாதாரண மக்கள் நடப்பதும் பொதுவாகக் காண்கின்றோம். ஆனால் எத்தன்மை அறிவுடையோரிடத்தும் எல்லாக் குணங்களும் பின்பற்றுவதற் குரியவைகளோ எனச் சமுதாயத்தார் நிதானிக்கவும் வேண்டும். ஒரு சமுதாயத்தில் தோன்றும் சிறந்த மேதாவிகளில் யார் யாரிடம் சமுதாய முன்னேற்றத்திற்குரிய, இழுக்கற்ற அபூர்வ குணங்கள் காண்கின்றோமோ, அவைகளே போற்றுதற்குரியன, பின்பற்று வதற் குரியன. இத்துடன் பிற நாடுகளில் காணப்படும் வித்தியாசமும் விபரீதமுமான அகப்பொருள் புறப்பொருள்களைத் தெளிவுபடுத்தும் மனோதத்துவ நிலையும் ஆராய்ச்சி செய்வதற் குரியதே.

VIII. முடிவுரை.—உலகத்தார் அனைவரும் தெளிவுறக் கற்றுணர்ந்து தமது மனம், முயற்சி, ஊக்கம், தாளாண்மை, சமுதாய முன்னேற்றம் யாவும் சீர்திருத்த மடையும்படி ஆங்கில நாட்டுச் சிறந்த வித்துவான்களில் ஒருவரான ஜேம்ஸ் ஆலன் (James Allen) என்பவரின், நூற்களைக் கற்றுணர வேண்டியது அவசியமாகும். அவர் கருத்துரை கூறி இவ்வியாசமும் முடிப்போம்.

(i) மனிதனானவன் மனந்தளர்ந்து எப்பொழுதும் துன்புற்றிருக்குமாறு இவ்வுலகில் தோன்றவில்லை ; சந்தோஷத்துடன் வாழ்ந்து கடைசியாய் வெற்றி பெறுவதற்கே உலகில் தோன்றியிருக்கிறான். தீயவைகளை அறவே களைந்து, தீமை பயிற்றுவிப்பவைகளை அடக்கி மாய்க்க வேண்டும் ; அத்தீங்குகள் பொல்லா மனிதர்களினாலும் பொல்லாப் பிசாசுகளினாலும் இதர காரணங்களினாலும் ஏற்படுபவைகளல்ல. நமது அகத்தினுள் பளிங்கில் பிரகாசிப்பது போல் காணப்படும் தீய எண்ணங்களும், தீச்செயல்களும், பேராசை, பொறாமை இவைகளே முழுப் பொல்லாங்கை விளைவிக்கின்றன.

"தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும்"

என்ற பொய்யாமொழிப்புலவர் திருமொழியை வற்புறுத்தி நிற்போல் உலகெங்கும் தீமை யொழியக் கோபமும் பாவமும் கொடுமையும்

விலக, எந்நேரமும் நன்னெறியும் சந்தோஷமும் முன்னின்று பிரகாசந் தரும்.

(ii) தன்னுடைய எண்ணங்கள், மகத்துவமாக அன்றி இழிவாக இருப்பதற் குகந்தபடியே மகத்துவமாக அன்றி இழிவாக மனிதன் வாழ்கின்றான். தனது வாழ்விற்கும் தாழ்விற்கும் தானே சிருஷ்டி கருத்தாவா யிருப்பதினால் நன்மை பயப்பதும் தம்மாலே, நாசமுறுவதும் தம்மாலே என நன்கறியற் பாலது. உலகெங்கும் சதா காணப்படும் சிறு குற்றங்களினாலும் சிறு நோய்களினாலும் மனந்தளராது நல்லொழுக்கங்களை நாடி நிற்பின் ஆரோக்கியமும் அழியா வின்பமும் தாமே வந்தெய்தும். குன்றாத வாழ்வும் குறைபடாத செல்வமும் நம்மிடம் தங்கி நின்று தழைத் தோங்கச் சிருஷ்டிகருத்தா நாமே என்பதை நன்குணர்வோ மாக.

(தொடரும்.)

நூல் நூற்கும் ஆங்கிலப் பெண்மணி.

லாகூரைச்சேர்ந்த காலஞ்சென்ற ஆசிரியர் ரிச்சர்ட்ஸ் என்பவரின் மனைவியார் ஸ்ரீமதி ரிச்சர்ட்ஸ் தாம் இமயமலைச்சாரலில் காங்க்ரா பள்ளத்தாக்கில் சுற்றுப்பிரயாணம் செய்து வந்ததைப்பற்றி "மாணாக்கன்" என்ற மாதப் பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். சுற்றுப்பிரயாணத்தில் அவர் ஹோல்டா தேயிலைத் தோட்டத்தின் மானேஜர் மிஸ்டர் பிட்ஸ்பாட்ரிக் என்பவர் வீட்டுக்குச் சென்றிருந்தார். இதைப்பற்றி அவர் எழுதியிருப்பதாவது :—

தக்காளிச் செடிகளும், புஷ்பக் கொடிகளும் சூழ்ந்திருந்த தாழ்வாரத்தில் அமர்ந்து எனது புதிய நண்பர் இருவருடனும் பேசிக் கொண்டிருந்தேன். மிஸ்டர் பிட்ஸ்பாட்ரிக்கின் புதல்வி வீட்டு வாழ்க்கையில் பெரிதும் இன்பமுறும் சுபாவமுடைய பசுக்கள், ஆடுகள், பறவைகள் இவைகளைப்பற்றி அவள் பேசினாள். அவ்ள் வளர்க்கும் ஆடுகளிலிருந்து மயிர் கத்தரித்துத் தானே இராட்டையில் நூற்கிறாள். தான் நூற்ற நூலைப் பின்னர் தன் கையினாலேயே பின்னி உடைகளாக்கி விடுகிறாள். "பொருளாதார தத்துவங்களின்படி மகாத்மா காந்தியின் இராட்டைத் திட்டத்தை எதிர்ப்பதற்கு எவ்வளவு ஆதாரமுண்டோ எனக்குத் தெரியாது. ஆனால் குடும்ப வாழ்க்கையின் நன்மையை உத்தேசித்தால் இராட்டை மிகச்சிறந்தது என்று சொல்வேன்" என்று மிஸ்டர் பிட்ஸ்பாட்ரிக் சொன்னார். தமது மகள் நூல் நூற்க ஆரம்பித்ததற்கு காந்திதான் காரணம் என்றும் அவர் தெரிவித்தார். அவர் புதல்வி மிகப்பெருமையுடன் தன்னுடைய சர்க்காவை எடுத்துக் காட்டினாள். இராட்டையையும், அதில் நூற்பதையும் அவள் பெரிதும் நேசிக்கிறாள். தான் வளர்க்கும் ஆடுகளிலிருந்து மயிர் வெட்டித் தன் கையினால் நூற்றுப் பின்னிய உடைகளைத் தன் தந்தை அணிந்திருக்கிறார் என்பதைப் பற்றி நினைக்கும்போது அவளுக்குப் பெருமகிழ்ச்சி யுண்டாகிறது.

புல்.

(புல் தனது சரிதத்தைத் தானே கூறுகின்றது)

பசும்புல் என் பெயர். பட்டபா டெல்லாம்
ஒரு பெருங் கதையாம் ; உரைப்பது மெளிதோ ?
விரிவிடம் படுமொரு வீட்டின் முன்றிலில்
வளர்ந்தேன் ; அங்குள மனிதரோ கொடியர்.

தத்தம் மக்களும் தாமுமே யென்றும்
பெற்றுப் பெருகிப் பெருங் குடியாகி
வாழக் கருதுவர், வருத்திட லென் ? அவர்
வாயிற் படியில் வாடி வணங்கி
வயிற்றிற்கின்றி நா வறண்டு தண்ணீர்

தண்ணீரென்று தவித்துத் தவித்து
வாணாளெல்லாம் வீணாய்ப் போக்கினேன்.
குடிக்க நீரும் கொடுத்திலர் பாவிகள்.
விண்ணி லிருப்பினும் மண்ணில் யான் படும்
வருத்தமும் வாட்டமும் கண்டவ் வானம்

அளித்த தமுதம் ; ஆர உண்டனன்.
விசும்பிற் றுளிகள் வீழி னல்லால்
பசும்புற் றலை யிப் பாரிற் காணுமோ ?
மனிதரும் போற்றி வாழ்வமோ யாமும் ?
கேளிர் கதையினும், கிடைத்த நீரை

அருந்திப் பல நாள் அயர்வும் நீங்கித்
தெளிந்து நிமிர்ந்தேன், சிறிதென்னுடலில்
பச்சையும் பிடித்தது ; பார்த்தனர் பாவிகள் ;
தரிக்கிலர் உள்ளம், தழைக்கும் தலையை
காலால் மிதித்தனர், கழுத்தையு மறுத்தனர்.

ஆட்டையும் மாட்டையும் அடித்து மேய்த்தனர்,
படர்ந்த இடமெலாம் பாழே யாக்கினர்,
இருந்த இடமும் இல்லா தியற்றினர்,
உயிரும் உடலும் குறுகி ஒரு சிறு
வேராய்த் தரையுள் வெகுநா ளாக

ஒளிந்திருந்தேன், அவ்வுறை விடந்தேடி
வான் மழைத் தோழன் வந்தெனைக் கண்டு
“ மனிதன் செயலால் வலி யிழந்தனையோ ?
என் துணையிருக்க இடருனக் குண்டோ ?
அறிவிலி போலும் நீ, அஞ்சேல் அஞ்சேல்,

யாவையும் காப்பவன் ஈசன்." என்றெலாம்
தேற்றிய மொழி யெனக் கூற்றமும் உறுதியும்
பெரிது மளித்தது பெயர்த்தும் மெலமெலத்
தலை யெடுத்தேன் அதைத் தறுகணர் கண்டு
பிடித்தனர், வெட்டினர், பிடுங்கி எறிந்தனர்,

சாணியைக் கரைத்துத் தலையில் கொட்டினர்,
துடைப்பங் கொண்டு துரத்தி யடித்தனர்,
யாவும் சகித்தங் கிருந்தனன் ; என் செய்வேன் ?
தளர்ச்சி யுற்றிலேன் தகும் நற்காலம்
வருமெனச் சற்று மறைந்து தங்கினேன்.

ஐவரை விட யான் அதி பல சாலியோ ?
மறைந்து சின்னாள் வாழுங் காலை
ஒரு தினம் வீட்டில் உள்ளா ரனைவரும்
உறவினர் இருக்கும் ஓரூர் சென்றனர்,
வெகு நாளாகியும் மீண்டிலர், யானும்

இதுவே தருணம் என்று நினைத்து
விரைவின் வளர்ந்து விரும்பிய படியெலாம்
தழைத்துச் செழித்துச் சார்விடமெங்கும்
படர்ந்து பற்றிப் பல் கிளையாகி
வாய்த்த இவ் வித்தாம் மக்களும் பெற்று

வாழ்ந்திருக்கின்றேன் ; மற்றவர் வாழும்
வீட்டையும் இடித்து விடும் வலி யிந்நாள்
எனக்குண்டாயினும் இழிவென விடுத்தேன்
இணங்கியிருப்பவர் பிணங்கிப் பிரியவும்
பிணங்கிப் பிரிந்தவர் இணங்கிக் கூடவும்

செய்வினை என் போல் செய்ய வல்ல
மந்திர வாதியிவ் வையகத் துண்டோ ?
செய்பிழை யாவும் தெரிந்து பொறுத்தேன்
பொறுத்தவர் என்றும் பூமி யாள்வார்.
எனக்குச் சொந்தமில்லா இடமெதாம் ?

புல்லேயாயினும் புல்லிய குண மிலை ;
அற்பர் இகழினும் அறிவால் பொறுப்பேன்,
தலையில் மிதிப்பினும் தயவால் சகிப்பேன்,
முயற்சி கைவிடேன் முயற்சி கைவிடாத்
திற முடை யோரைத் திருமகள்
பெரிது முவந்து பேண முன் னிற்குமே.

தேசிக விநாயகன்.

புகையிலை

ஸ்ரீமான் (ஏ. சோக்கலிங்கம் பிள்ளை எழுதியது.)

புகையிலை (Nicotiana Tobaccum) யை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். அதன் வாசனையையும் உணர்ந்திருக்கின்றீர்கள். புகையிலைச் செடி, விஷத்தன்மை யுள்ள அநேகஞ் செடிகளுள் ஒன்றாகும். அதன் இலை, மக்களின் உபயோகத்திற்குரிய அநேக விஷத்தன்மையுள்ள மருந்துச் சரக்குகளில் ஒன்றாகும்

இத்தேசத்தில் மதுசாரத் (alcohol) தின் உபயோகத்தைப் பார்க்கிலும் புகையிலையின் உபயோகம் அதிகமாயிருக்கின்றது. புகையிலை மதுசாரத்தைப் போலும் விஷமுள்ளதே யானாலும், அவை ஒன்றுக்கொன்று குணத்தில் வேறுபடுகின்றன. மதுசாரத்தின் பயன் உடனே தெரியக்கூடியதும், கொடியதும், பயங்கரமானதுமாம்; ஆனால், புகையிலையோ தன்னால் விளையுந் தீங்கைப் பிறர் அறிந்து கொள்ளக் கூடாதபடி ஒருவனை மெதுவாகவே துன்பத்திற்காளாக்கிப் பாழ்படுத்தி விடுகின்றது. புகையிலைப் பழக்க மில்லாதவர்கள் அதனைச் சிறிதளவாக உபயோகப்படுத்தும் போது குமட்டலும், வாந்தியும், தலைவலியும், தலைச்சுற்றும், சக்திகுறைவும் உண்டாகின்றன. புகையிலையை அதிக அளவாக உபயோகப்படுத்தும் போது மேற் சொன்ன குறிகளின் உக்கிரம் அதிகப்பட்டு உடம்பு சோர்வடைந்து, நாடி நடுக்கமுற்று, உடம்பு குளிர்ந்து, பிசுபிசுப்பான வேர்வையுண்டாகிப் பார்வை மங்கலாய், மூர்ச்சையு முண்டாகும். இன்னும் அதிகமாக உபயோகிக்கும் போது வலியும், துர்ப்பலமும், ஏற்படுவதுடன் மரணத்திற்கு முன் பிரக்ஞையுந்தப்பிப் போகும். புகையிலை உபயோகத்தினால் ஒருவனுக்கு இவ்விதமாக அநேக துர்க்குறிகள் உண்டாகிறபடியால் கடவுள் இதனைச் சாதாரண உணவாக உபயோகப்படுத்தக் கருதவில்லையென்று நாம் எண்ணல் வேண்டும். கடவுள் புகையிலையைச் சில முக்கிய நிலைமைகளில் மாத்திரம் உபயோகிக்கும்படி கொடுத்திருக்கின்றார்; அதாவது, வைத்திய முறையில் மருந்துச் சரக்காக உபயோகப் படுத்தக் கருதியதல்லாமல், தினந்தோறும் பசிக்கு ஆகாரமுண்பது போல வேண்டட்படுவதல்ல. நாம் பார்க்கிறபடி கடையில் விற்கும் புகையிலை, அச்செடியில் உலர்ந்து போகும் அதே யிலையல்ல; ஆனால், அச்செடியிலிருக்கும் போதே அவ்விலையின் பச்சை நிறம் மாறி மஞ்சள் நிறமாகும் போது, இலையின் ஓரங்கள் உலர்ந்து காம்பு காய்ந்து போகும். சில வேளை இலையின் மேல் சிறு சிறு புள்ளிகள் தோன்றும்; அப்போது, அவ்விலையை யறுத்துப் பதப்படுத்திப் பிறகு கடைகளில் விற்பனைக்கு வருகிறது. அந்தப் புகையிலையைத்தான் நீங்கள் பார்க்கிறீர்கள். இப்புகையிலையில், காற்றில் ஆவியாய்ப்பறந்து போகக்கூடிய காரமான விஷவஸ்து இருக்கின்றது. இக்காரமான விஷ வஸ்து விற்குப் படுநஞ்சு (Nicotine) என்று சொல்லப்படும். இது மிகவுங் கொடிய விஷமாகும். செடி

யிலேயே உலர்ந்து போகும் இலையில் இக்காரமான விஷ வஸ்து அவ்வளவாக இராது. நூறு பவுன் *புகையிலையில் நானூறு கிரெயின் † நிகொடீனும், ஒரு புகையிலைச் சுருட்டில் பத்து கிரெயின் நிகொடீனும், ஒரு சிகரெட்டில் (cigarette) இரண்டு கிரெயின் நிகொடீனுமிருக்கின்றதாம் ‡

பூர்வீக இந்துக்கள் புகையிலையை உபயோகித்ததாகத் தெரியவில்லை. இஃது இந்தியா தேசத்து விளை பொருளல்ல. பண்டைக் காலத்தில் இத்தேசத்தார்க்குப் புகையிலை எப்படி யிருக்குமென்பதே தெரியாது. பழைய நூல்களிலும் அதன் பெயர் காணப்படவில்லை. நெல், புல், எள், கொள் முதலிய பெயர்களைப் போல இதற்கோர் பெயரிருக்கிறதாக இதுவரை தெரியவில்லை. இதனை நாம் புகையிலை யென்று சொல்லுகிறோம். அஃதாவது, புகையும்படியான இலை, புகைதரும் இலை முதலிய பொருளைத் தருகின்றது. இது மேல் நாட்டு நாகரீகத்தால் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்ட இக்காலத்துக் கொடுமையென்றே நினைக்கவேண்டும். நம்முடைய பூர்வீகர்கள் இப்புகையிலையை அறியாதவர்களா யிருந்தார்க ளானாலும், நாம் இக்காலத்தில் புகையிலையின் உபயோகத்தால் உடம்பையும், அறிவையும், ஒழுக்கத்தையும், மனத்தையும், பணத்தையும் பாழ்படுத்திக் கொண்டு தாழ்ந்த நிலைமைக்கே போகிறவர் களாயிருக்கின்றோம். இப்புகையிலை ஆங்கிலேயருக்குங்கூட 1586-ம் வருஷம் வரை தெரியாது. முந்நூற்று முப்பது வருஷங்களுக்கு முன்னே இப்புகையிலை இங்கிலாந்து தேசத்திற்குத் தெரியவே தெரியாது. 1586-ம் வருஷத்தில் ஸர். பிரான்ஸிஸ் டிரேக் (Sir. Francis Drake) என்பவரால் வெஸ்ட் இண்டீஸ் (West Indies) விருந்தும், அமெரிக்காவிலிருந்தும் இங்கிலாந்துக்குக் கொண்டு வரப்பட்டதாம்.

நம்முடைய சுகத்தைக் காத்துக் கொள்வதற்குப் புகையிலை அவசியமே யில்லை. ஆனால், எவர்கள் தங்கள் சுகத்தைக் கெடுத்துக் கொள் ளவும், அகாலத்தில் மரண மடையவும் விரும்புகிறார்களோ அவர்களுக்கு அது அவசியமாகும்.

புகையிலை விஷவஸ்து வென்றும், அதனில் **நிகோடீன்** என்னுங் காரவஸ்து இருப்பதினால் புகையிலை விஷத்தன்மை யடைகிறதென்றும் நீங்கள் முன்னமே வாசித்திருக்கின்றீர்கள். இந்த **நிகோடீனை** இரசாயன பண்டிதர்கள் புகையிலை யிலிருந்து திரவரூபமாக இறக்குதல் கூடும். டாக்டர் சால்மன் என்பவர், தம்முடைய பதார்த்த குணவிளக்கத்தில் (materia medica) "**நிகோடீன்** என்பது அதிவேகமும் மரணத்திற் கேதுவான விஷங்களில் ஒன்றாகும். இதன் ஆவி (vapour)யில் சிறிதெடுத்து ஒரு சிறு பறவையின் மூக்கினருகே

---

* ஒரு பவுன் (one pound) நாற்பது ரூபா எடையாம்.

† ஒரு கிரெயின் (one grain) எடை குன்றி மணி எடையாம்.

‡ From "Some effects of Tobacco Using by R. S. Cummings M. D.

கொண்டு வந்தால், அது உடனே இறந்துவிடும். நிகோடீனில் இரண்டு துளிகளெடுத்து ஒரு நாயின் பல் ஈறில் வைத்தால், அந்நாயும் அச்சிறுபறவையின் கதியேயாகும்" என்று சொல்லுகின்றார். இரசாயன சாஸ்திரத்திற் சொல்லிய ப்ரஸ்ஸிக் அமிலம் (Prussic acid) தவிர நிகோடீனைப் போல மிகு விரைவில் பிராணிகளைக் கொல்லக் கூடியது வேறொரு விஷமுமில்லை. இன்னுஞ் சில டாக்டர்கள் என்ன சொல்லுகிறார்கள்? "ஒரு துளி நிகோடீன் ஒரு முயலை மூன்றரை நிமிஷங்களுள் கொன்றுவிடும்" என்றும், "ஒரு நாய்க்குப் புகையிலையைத் தின்னச் செய்வதால், அதற்கு இசுவு உண்டாகி யிறந்துவிடும்" என்றும் "புகையிலைக் கஷாயத்தில் (Infusion) அரை திரும் (half a drahm) எடுத்து ஒரு மனிதனுக்குக் கொடுத்ததால் அவ னிறந்து விட்டான்" என்றும் கூறியிருக்கின்றனர். இவ்வித துர்க்குண முடைய புகையிலையை ஒரு சிறுவனாவது, ஒரு மனிதனாவது உபயோகப் படுத்தினால் நாள் போகப் போக அவர்கள் உடம்பு என்னவாகு மென்று ஒவ்வொருவருந் தெரிந்து கொள்ளலாம்.

புகையிலையை உபயோகிக்கும் வகைகள்.

மனிதர்கள் புகையிலையை ஆறு வகையாக உபயோகிக்கின்றனர்: (1) சிகரெட் அல்லது வெட்டுப் புகையிலைச் சுருட்டு, (2) பீடி, (3) மூக்குப் பொடி, (4) சுங்கான் புகையிலை, (5) சுருட்டு, (6) வாயிலடக்கல்.

சிகரெட் வர்த்தகம் வர வர ஏராளமாகப் பெருகி விட்டது. இவை கோடிக் கணக்காகச் செய்யப் பட்டு விற்பனையாகின்றன. இவற்றை லட்சக்கணக்கான சிறியவர்களும் பெரியவர்களும் வாங்கி உபயோகிக்கின்றனர்.

சிகரெட்டுகள் எதனால் செய்யப் படுகின்றன? இவற்றைச் செய்வதற்கு மிகவும் மட்டமான புகையிலையே பெரும்பான்மையும் உபயோகிக்கப் படுகின்றது. இவ்விதமாக உபயோகப் படுத்தும் மட்டப் புகையிலை நல்ல மணங்கொடுக்கவும், சிகரெட் பருமனைக் காட்டவும் சில சமயம் கேட்டுக் கிடமான சரக்குகளை அதில் சேர்க்கின்றார்கள். சிகரெட்டின் தீங்குகள்:—சிகரெட் தளர்ச்சியாகச் சுருட்டி யிருக்கின்றது. அன்றியும், அது குட்டையா யிருப்பதால் அதன் புகை வாய்க்குட் செல்லும்போது குளிர்ந்து போவதில்லை, அதனால் புகை குடிப்போர் அச்சிகரெட்டிலுள்ள நிகோடீனை யெல்லாம் உட்கொண்டு விடுகிறார்கள். சுருட்டு குடித்தலில் இவ்வாறில்லை. சுருட்டின் புகை வாய்க்குள் வருவதற்கு முன் குளிர்ந்துபோய் அதிலுள்ள நிகோடீனில் ஐந்தில் மூன்று பங்கு சுருட்டின் மிச்சமான பாகத்தில் அடங்கிவிடுகின்றது; ஆகையால், சிகரெட்டிலிருக்கும் நிகோடீனைப் பார்க்கிலும் சுருட்டில் அதிகமாயிருந்தும், சிகரெட்டு குடிப்பவர்களே அதிக நிகோடீனைத் தங்கள் வாய்க்குள் உட்கொண்டு விடுகிறார்கள்.

† From "The Child's Book of Health" by AlbertF. Blais-dell M.D.

புகையிலை

சிகரெட் குடிப்பவர்கள், அதன் புகையை ஓயாமல் உள்ளுக் கிழுத்து தாகத்துக்கு நீர் அருந்துவது போல விழுங்கி வாயாலும் மூக்காலும் மிக அழகாய் வெளி விடுகிறார்கள். இவ்வாறு புகையை விழுங்குவதால் அப்புகை சுவாசப்பையின் மெல்லிய சவ்வின் (delicate lung membrance) மூலமாய் இரத்தத்திற்குச் செல்லும் பிராணவாயு (Oxygen) வோடு மிகுதியாக உறிஞ்சப் படுகின்றது (absorb)*சுருட்டு குடிப்பவர்கள் சாதாரணமாகப் புகையை உள்ளுக்கிழுத்து விழுங்குவதில்லை. அதனால், புகையிலையின் விஷம் சிறிதளவே உறிஞ்சப் படுகின்றது.

சுருட்டு குடித்தலினால் வாய், நெஞ்சு, நா இவற்றில் வறட்சியும், சிவப்பும், எரிவு முண்டாகின்றன. சுருட்டுக் குடியருள் அநேகர் தொண்டைப்புண் முதலியவற்றால் துன்பப்படுகிறார்கள். புகைக் குடியால் ஞாபகக்குறைவும் கை நடுக்கமும், வளர்ச்சிக் குறைவு உண்டாகின்றது. கடவுள் நமக்கு வாயினின்றும் ஊறும் விலையுயர்ந்த உமிழ்நீரைக் கொடுத்திருக்கின்றார். இவ்வுமிழ்நீர் நாம் உண்ணும் உணவோடு கலந்து அதனைக் கூழ்போலாக்கிச் சீரணத்திற்குத் தகுதியாக்குகின்றது. இவ்வித வேலைக்குப் பிரயோசன மாகும் உமிழ்நீரைப் புகை குடிப்போர் வீணாகச் செலவழிக்கின்றார்கள். அதனால் ஜீரண வேலை தடைப்பட்டுச் சீரண உறுப்புக்களுக்குக் கெடுத லுண்டாகின்றது. உமிழ்நீரின் பிரயோஜனத்தைப் பற்றி நீங்கள் முன்னமே தெரிந்திருப்பீர்கள். புகை குடிப்போர் இவ்வருமையான உமிழ்நீரின் உபயோகத்தை யுணராதவர்களாகி அனுவசிய மான துர்ப்பழக்கத்தால் தங்கள் உடம்பைக் கெடுத்துக் கொள்ளுகிறார்கள். இளமையிலிருந்தே இப்பழக்க முடையவர்களுக்கு முகம் வெளுத்து, கன்னம் சுருங்கி யௌவன பருவத்தின் முக விலாசந் தேய்ந்து, சுறுசுறுப்பில்லாமலும் போகின்றார்கள். புகை குடிப்போர் உமிழ்நீரை வீணாக்குவதால் உண்டாகும் கேட்டைப் பார்க்கிலும் புகையிலையின் விஷத்தோடு கலந்த உமிழ் நீரை விழுங்குவது இன்னும் அதிகக் கேடாகும். புகையிலையை உபயோகிப்பதால் பலவீனமும், இரைப்பையின் குணங்கெட்டுப் போதலும் நோயும், பசிதீபன மில்லாமையும், அஜீரணமும், மலச்சிக்கலு முண்டாகின்றன. புகையிலையை எந்த ரூபத்தில் உபயோகித்தாலும் அது நரம்பு மண்டலத்துக்கு இடைஞ்சலும் உடம்புக்குக் கேட்டையுந் தருவதாயு மிருக்கின்றது. அதனை நாள் தோறும் வழக்கமாய்க் கையாடுவது இயற்கைக்கு விரோதமான செயகையேயாம். புகையிலைப் பழக்கம் சிறுவர்களுடைய வளர்ச்சியைத் தடுப்பதினாலே முக்கியமாய் அவர்களுக்கு அதன் பழக்கம் சிறிதுங் கூடாது. அவர்கள் பழக்கஞ் செய்வார்களாயின், நாள் போகப்போக அவர்களுக்குத் துன்பமே விளையும். நம் முன்னோர்கள் புகையிலை உபயோகத்தால் வருங் கேட்டைக் கூறி யிருக்கின்றதைக் கவனிப்போம் :—

* உறிஞ்சுதல்—சோஷணம் (absorbtion)—உடம்பிலுள்ள பல பகுதிக்குரிய பதார்த்தங்களையும் ஜீரணமான உணவின் சாரத்தையும் அணு அணுவாய் வாங்கி இரத்தக்குழலிலே செலுத்துந் தொழிலாகும்.

" கண்புகையும் நெஞ்சுலரும் கைகால் அலுத்துவிடும்
வெண் புகையால் மேனி வெளுத்துவிடும்......
ஈரல் கருகிவிடும் இந்திரியம் நஷ்டமாம்
பாரும் புகையிலையின் பண்பு "

இதை யறிந்த பிறகேனும் புகையிலையின் உபயோகத்தைக் கைவிட முயலவேண்டும்.

லஜபதி வாக்கு.

லாலா லஜபதிராய் அவர்கள் " பீப்பிள் " என்ற தம்முடைய பத்திரிகையில் எழுதுகிருர்.

" 1921-ம் வருஷம் நாம் கையாண்ட முறையில் நாம் பல தவறுகளைச் செய்தோம். ஆனுல் ஒத்துழையா இயக்கம் உக்கிரமாக இருந்த காலத்தில் போற்றத்தக்க ஒரு விசேஷ நிலைமை ஏற்பட்டிருந்தது. அஃ தென்னவெனில் அவ்வியக்கத்தை முக்கியமாக இருந்து நடத்தியவர்கள் மிக்க சுய நலமற்ற முறையில் நடந்தனர். பெருந்தியாக புத்தி படைத்தவர்களாக இருந்தனர் ; உயர்ந்த நோக்கங்களைப் பெற்றிருந்தனர். பரஸ்பர அன்பும் சகிப்புத் தன்மையும் பெருந்தகைமையும் கொண்டிருந்தனர் ; ஆடம்பர மற்றவர்களாக இருந்தனர். இவற்ருல் நம்முடைய பொது வாழ்க்கையானது சாதாரணமாக இருப்பதைவிட உயரியதொரு நிலைமையை அடைந்தது. அதனைக்கண்டு நமது விரோதிகள் திகைக்கவும் வெட்க மடையவும் நேரிட்டது.

நாம் நம்முடைய தவறுகள் சிலவற்றைத் திருத்திக்கொண்டு விட்டோம். நாம் தற்சமயம் அப்பொழு திருந்ததைவிட புத்திசாலித்தனமான முறையைத் தற்சமயம் மேற்கொண்டிருக்கின்ருேம். ஆனுல் நம்முடைய பொது வாழ்க்கையானது முன்னிருந்ததைப் போன்று சீரியதாக இருக்க வில்லை. நம்முடைய வாழ்க்கையானது ஏறக்குறைய ஆடம்பரமானதாகி விட்டது. அதிகச் செலவுள்ளதாகவுமாகி விட்டது. நாம் உல்லாசப் பிரியர்களாகவும், போகப் பிரியர்களாகவும் ஆகிவிட்டோம். நம்முடைய ஆசா பாசங்களோ நம்முடைய கொள்கைகளை விட உயர்ந்தன வாகி விட்டன. நாம் சொல்லுவது ஒன்ருகவும், செய்வது மற்ருென்ருகவு மிருக்கிறது. நாம் ஒரு கொள்கையை மேற் கொள்கின்ருேம். ஆனுல் அதனை அனுஷ்டானத்தில் கொண்டு வந்து அதனுல் வரும் ஆபத்துகளை ஏற்கச் சித்தமாக இருக்கவில்லை. நம்முடைய வாழ்க்கையே மாறிவிட்டது. தெய்வம் போன்று கொண்டாடப் பட்டவர்களே உயரிய நெறியினின்று விழுந்த பிறகு சாமான்யரைப்பற்றிப் பேசுவானேன். நாம் மீண்டும் சுயராஜ்ய சித்தி பெறலாமென்ற நம்பிக்கை கொள்ளுவதற்கு முன் நாமிழைத்த பாவங்களுக்குப் பிராயச்சித்தஞ் செய்துகொண்டு நம்மை நாமே உயரிய நிலைமைக்குக் கொண்டு வந்து கொள்ளுவோமாக."

21053

தூக்கம் அவசியமா?

உறக்கத்தைத் தொலைத்து உள்ளளவும் சதா விழித்திருப்பதே பெறற்கரிய பேறெனக் கருதினூர் நம் நாட்டு ஞானிகள். இவ்விஷயம் இப்பொழுது மேனூட்டு சாஸ்திரிகளுக்கு மெல்லெனப் புலப்பட்டு வருகின்றது.

தூக்கம் ஒரு கெட்ட வழக்கம். சுறுசுறுப்புள்ள ஒவ்வொரு மனிதனும் இந்த வழக்கத்தைத் தொலைத்து விடவேண்டும். தேகதத்துவ சாஸ்திரப்படி தூக்கம் மனிதரின் பண்டைய தாழ்ந்த தாமச நிலைமையைக் குறிப்பிடுகிற ஒரு அடையாள மாகும். இனிமேல் இத்துர் வழக்கம் அனுவசியமாகி விடும் என்று டாக்டர் த. ஜெல் என்னும் பேர்போன ஜெர்மன் சாஸ்திரி கூறுகிறூர்.

புராதன மனிதர் மிருகங்களுக்குத் தப்பி வாழ்வதற்குத் தூக்கம் ஒரு சாதனமாய் இருந்ததாம். சென்ற இரண்டு லட்சம் வருடங்களாகத் தூக்கம் மனித உடம்பின் நிலைமைகளில் ஒன்ருகப்போய் விட்டிருக்கிறது. இப்போது, நாலு அல்லது ஐந்து ஆயிரம் வருடங்களாக நாகரீகம் வளர்ச்சியடைந்தும், மிருகபயம் குறைந்தும், அந்தத் தூக்க வழக்கம் மாத்திரம் இன்னும் மாறவில்லை என்று அந்த சாஸ்திரி தாம் எழுதிய "மனிதர் தூக்கமும் மிருக வாழ்க்கையும்" என்னும் புத்தகத்தில் கூறுகிறூர்.

மிருகங்களில் பெரும் பான்மையானவை இரவில் தான் நடமாடுகின்றன. அவை அசைவற்றுப் படுத்து இளைப்பாறுவதே தவிர தூங்குவதே கிடையாது. அப்படி இளைப்பாறும் போது கூட அவைகளுக்கு எல்லா சத்தங்களும் கேட்கும். திமிங்கலங்கள் தூங்குவதே கிடையாது. ஏனெனில் தூங்குவதற்கு ஏற்ற இடம் அவைகளுக்கு இல்லை.

இதனுல் நாளைக்கே தூக்கத்தை நிறுத்திவிட வேண்டுமென்பது கருத்தல்ல. நித்திரை இன்னும் மனிதருக்கு அவசியந்தான். அதிலும் நடுராத்திரிக்கு முன் தூங்குகிற தூக்கமே சிறந்தது. ஆனுல் மனித சீவியத்திலே தூக்கம் முன்னேயைப்போல ஒரு அவசியமான நிலைமையல்ல என்றும் காலக்கிரமத்தில் இவ்வழக்கம் ஒழிந்து விடும் என்றும் டாக்டர் ஜெல் கூறுகின்றூர். உடம்பின் தேய்வு குறைவுகளைச் செம்மை செய்து அதற்கு சாந்தி கொடுப்பதற்கு உறக்கம் அவசிய மென்கிற கொள்கை தவறு என்பது அவர் அபிப்பிராயம்.

மாமிச போஜனம்

மனிதருக் காகாது

அமெரிக்காவில் பிரபல வைத்தியசாஸ்திர பண்டிதராகிய டாக்டர் ஆர். எஸ். பெர்க்ஸ் என்பவர் மாமிச போஜனம் மனிதருடைய தேகத் திற்கு இசையாத தென்னும் அபிப்பிராய முடையவர். அந்த அபிப் பிராயத்தின் படியே தாமும் மாமிச போஜனத்தை ஒழித்துச் சைவ போஜனமே செய்து வாழ்கின்றார். அவர் தேகாரோக்கியமும் தேக புஷ்டியு முடையவராக இருக்கின்றார். இப் பிரபல பண்டிதர் அமெரிக் காவில் போஜன கிரம சங்கத்தார் ஒருவர் சைவ போஜன இயல்பைப் பற்றிச் சில விஷயங்கள் கேட்டபோது பின் வருமாறு கூறினார்.

1. ஒருவன் தன் ஆயுள்' முழுவதும் தேகா ரோக்கிய முடையவ னும் தேகபுஷ்டி யுடையனும் விவேகியாயும் இருக்க வேண்டினால், அவன் மாமிச போஜனத்தை அறவே யொழித்துச் சைவ போஜனங் களையே உட்கொள்ளல் வேண்டும். உயர்ந்த சன்மார்க்க முறையை அனுசரித்துப் பரிசுத்தமாகவும் மனித இயல்புக்கு இயைந்ததாகவும் உள்ள சைவபோஜனம் செய்வது ஒன்றே எங்கும் பரவி நிலைபெற் றிருப்பதற்குக் காரணமாகிய நன் மார்க்கமாம்.

2. உலகமெங்கும் பரவி யிருக்கும் வியாதிகளும் தேக துர்ப்பலங் களும் வாயுரோக பாஷாண சம்பந்தமான வேறு பல வியாதிகளும் மாமிச போஜனத்தினாலேயே உண்டாகின்றன. அல்லது, மாமிச போஜனஞ் செய்தவர்களாகிய பூர்வீகர்களுடைய வம்சத்திற் பிறப் பதனாலும் உண்டாகின்றன. ஆயினும், முறையாகச் சைவபோஜனம் செய்துவரக் கூடுமானால் அவ்வியாதிக ளெல்லாம் அறவே ஒழிந்து போம். நன்றாய்ச் சமைக்கப் படாததும் நோயுள்ளது மாகிய மாமி சத்தைப் புசிப்பதனால் சொரி சிரங்கு முதலிய தொற்று வியாதிகள் உண்டாகின்றன.

3. இன்னும் ஆஸ்திரேலியா கண்டத்தில் உழைப்பாளிகளான பக்குவமடைந்த இளம் பெண்கள் மாமிசங்களை விசேஷமாகத் தின் பதனால் அவர்க ளெல்லாருக்கும் பெரும்பாடு என்னும் உதிரப்பெருக்கு நோய் உண்டாயிருக்கின்றது.

4. சைவ போஜனத்தால் விளையும் நன்மைகளை நன்கு அறிந்த ஆங்கிலேய வைத்திய பண்டிதர்கள் எல்லோரும் தம் அபிப்பிராயங்களை வெளியிடுவதற்கு அஞ்சுகிறார்கள்; மாமிச போஜனத்தை நீக்கி விடுவ தனால் கெடுதி யுண்டாகு மென்று நினைக்கும் ஜனங்களெல்லாரும் தம்மை அவமதிப்பார் என்றும், தமது பிழைப்புக்குக் குறைவு வரு மென்றும் நினைப்பதனாலே யாம். இனி, இந்தத் தடைகள் எல்லாம் நீங்குமானால் அப்பண்டிதர்கள் தாராளமாய்த் தம் அபிப்பிராயங்களை வெளி யிடுவார்கள்.

மாமிச போஜனம் மனிதருக் காகாது

5. மாமிசத்தைப் புசிப்பதனுல் அஜீரணம் உண்டாகி வாயு ரோகம் முதலிய பல வியாதிகள் உண்டாகின்றன. ஜீரண சக்தியை மிகவும் உண்டுபண்ணும் சைவ போஜனத்தினுல் அவ் வியாதிகள் எல்லால் ஒழிந்து போகின்றன.

6. பிரபல வைத்தியசாலைகளில் யாம் உத்தியோகம் செய்த போது ஆங்காங்கு யாம் தேக பரிசோதனையின் பொருட்டு வியாதியஸ்தர்களின் தேகங்களைப் பதின்மூன்று வருஷ காலமாக ஏறக்குறையப் பதினுயிரம் பேர்வழிகள் வரையில் அறுத்துப் பார்த்தபோது அவர்களில்ஒருவராவது சைவபோஜனஞ் செய்பவர்கள் அல்லர்; எல்லாரும் மாமிச பக்ஷணிகள் தாம்.

7. சைவபோஜனஞ் செய்பவர்களாகிய இந்துக்கள் இத்தகைய கொடிய வியாதிகளால் பீடிக்கப்படாது பெரும்பாலும் தேக ஆரோக்யமுடையவராக இருக்கின்றனர்.

8. மாமிச போஜனிகளுக்கு ஜீரண சக்தி குறைந்து போவதனுல் அதனை நிவர்த்திக்கும் பொருட்டு மதுபானங்களை உபயோகப் படுத்துகிருர்கள். சைவ போஜனம் செய்பவர்களுக்கு ஜீரண சக்தி குறைவு படாமையால் அவர்கள் மதுபான வஸ்துக்களை உபயோகிப்பதில்லை. நாம் அறிந்த மட்டிலும் சைவ போஜனஞ் செய்பவர்களுக்கு மதுபான திரவியங்கள் கொஞ்சமும் வேண்டப் படுவதே யில்லை. இதனுல், சைவ போஜனம் எங்கும் விருத்தி யாகுமானுல் மதுபான வழக்கம் அறவே ஒழிந்து போம். ஞான சாகரம்.

சந்தேக நிவிர்த்தி.

சிலோன், ஹாட்டன் போஸ்ட்டு, ஹாட்டன் பிரிண்ட்டிங் ஒர்க்ஸ் அன்பர் மகா-ா-ா-ஸ்ரீ அ. வ. நடராஜன் அவர்கள் 'கனக சுந்தரியும், திருச்செந்தூர்த் தீர்த்தமும்' என்னும் விஷயத்தைப் பற்றி எழுதிய கடிதத்தைக் கண்ணுற்றேன். அக்கடிதத்தில் அரசன் புதல்வியின் குதிரை முகம் மாறின ஐதிஹ்யம் திருச்செந்தூரில் நடந்தது என்பதற்கு எந்நூல் ஆதாரம் என வினவியுள்ளார். யான் எழுதிய விஷயங்களெல்லாம் **திருச்செந்தூர்ப் புராணத்தினின்றும்** எடுத்து எழுதப்பட்டன. புராண விஷயங்கள் இங்ஙனம் பல தலங்களில் நடந்ததாகக் காண்பது சகஜந் தானே! உதாரணமாக, யமனை உதைத்த தலம் காசி யெனவும் புராண முண்டு, திருக்கடவூர் எனவும் புராண முண்டு. இவைகளின் உண்மையை நாம் ஒரு வழிப்படுத்துவது சரித்திர ஆராய்ச்சிக்குப் போதிய கருவிகள் இல்லாத இக்காலத்துச் சற்றுக் கஷ்டமான காரியம்.

வ. சு. செங்கல்வராய பிள்ளை,
292, லிங்கச்செட்டித் தெரு, சென்னை.

"ப்ராமணன்"

இப்பெயர் கொண்ட தமிழ் வாரப் பத்திரிகை காந்தி யடிகளைப் பற்றி 13-9-25-ல் ஒரு தலையங்கம் எழுதியிருக்கிறது. சமூகப் போராட்டத்தைப் பெருக்கி, நாட்டிற்கு அனர்த்தத்தை உண்டு பண்ணும் பத்திரிகைகளின் ஜாபிதாவில் நமது "ப்ராமணன்" முன்னணியில் நிற்கிறான். இது நாட்டின் துரதிஷ்டமே.

"தீண்டாத வகுப்பினிடம் அநுதாப மில்லாத பிராமணர்களையும், வைதிக ஹிந்துக்களையும் ஒரு பொருட்டாக எண்ணவேண்டாமென்று" காந்தியடிகள் சொன்னது "ப்ராமணனுக்கு" அடங்காத கோபமும் ஆத்திரமும் உண்டாக்கி விட்டமை, நமக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. திரும்பவும்

"அதிகமாகக் கொண்டாடக் கொண்டாட வரம்பில்லாமல் கூடப் பேச இவர் (மகாத்மா) துணிந்து விட்டார். பொதுவாக ஜனங்களுக்காகப் பாடு படுகிறாரென்று பொறுத்திருக்க இவர் எல்லை கடந்து நம்மை அலக்ஷியம் செய்ய ஆரம்பித்திருப்பது நமக்கும் அவருக்கும் போராத காலத்தைக் காண்பிக்கிறது." என்று சொல்லுகிறான். என்ன ஆச்சரியம்! இவர்களைக் கொண்டாடச்சொன்னது யார்? பொறுத்திருக்கச் சொன்னது யார்? தன் காரியம் சித்திக்க வேண்டு மானால் காந்தி படமும், "காந்திக்கு ஜே" என்ற கோஷமும் வேண்டும். காரியமானதும் தூற்றுவதும், நிந்திப்பதுமா பெருந்தன்மை? காந்தியடிகள், தன்னைக் கொண்டாட வேண்டா மென்றும், தன் பெயரை ஒன்றுக்கும் இழுக்க வேண்டாமென்றும், கதறினதைப் "ப்ராமணன்" அறியான் போலும். காந்தியடிகளைச் சித்திர வதை செய்ய வேண்டு மென்று பம்பாய் பிராமணர்கள் ஒரு கூட்டம் கூடவில்லையா? அதை விடத் தற்சமயம் தமிழ் நாட்டு "ப்ராமணன்" ஒன்றும் குறைவாகச் சொல்ல வில்லை. ஒரு பொருட்டாக எண்ணவேண்டாமென்று காந்தியடிகள் சொன்னது "பிராமணனு"க்குப் பொறுக்க வில்லையே? சில மாதங்களுக்கு முன் தேசபந்து தாஸ், பி. ஸி. ரே, முதலியவர்கள் சொன்னது இவனுக்கு எவ்வளவு ஆத்திரத்தை யுண்டு பண்ணி யிருக்குமோ? இவ்விஷயமாய் சுவாமி விவேகானந்தர் என்ன சொல்லியிருக்கிறா ரென்பதைக் கவனிப்போம்.

ப்ராமணன்

"வாருங்கள். ஆண்மையுள்ள மக்களா யிருங்கள். என்றும் வளர்ச்சிக்கு எதிரிடை யாயுள்ள குருக்களை உதைத்துத் தள்ளுங்கள். அவர்கள் திருந்த மாட்டார்கள். அவர்கள் உள்ளம் பெரிதாகாது. நூற்றுண்டு களாயுள்ள மூடப் பழக்க வழக்கங்களும், கொடுமைகளும் அவர்களிடம் குடி கொண்டிருக்கின்றன. முதலில் வைதீக புரோகிதர்களை வேரோடு ஒழியுங்கள். வாருங்கள், மனிதர்க ளாகுங்கள். உங்கள் இருட்டறைகளி லிருந்து வெளியே வந்து உலகத்தை நோக்குங்கள். மற்ற நாட்டார் எவ்வாறு முன்னேற்ற மடை கிறார்களென்பதைப் பாருங்கள்."

எளிய காந்தி, ஏழைகளின் காந்தி, அன்புடைய காந்தி, விவசாயி காந்தி, நெசவுக்கார காந்தி, கதர் காந்தி எல்லோரையும் சமமாய் நேசிக்கிறார். அவருக்குப் பேதமில்லை. உயர்வு தாழ்வில்லை. வைதீகக் கொடுமையில்லை. எப்பொழுதும் மக்கள் உடன் பிறந்தவர்களைப் போலக் கூடிவாழ வேண்டு மென்று நினைக்கிற காந்தி யினிடம் "ப்ராமணன் காந்தியின் அதிக்ரமம் என்னென்று சொல்வ தென்று" கேட்கிறான். இவ் வார்த்தை ப்ராமணன் என்ற பெயருக்குப் பொருந்துமா? காந்தியின் ஒவ்வொரு வார்த்தையும் அன்பு ததும்பியுள்ள தென்பதை அறியானோ? அவர் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் நன்கு யோசித்து நிறுத்தே சொல்வா ரென்பதை "ப்ராமணன்" இனியாவது தெரிந்து கொள்ளட்டும்.

"அனாதி காலமாக உலக க்ஷேமத்திற்காகப் பாடு பட்டு நமது மதத்தையும் மத கிரந்தத்தையும் பாது காத்து வந்தார்களாம் ப்ராமணர்களும் வைதீகர்களும்".

அதற்காக நாட்டினர்களின் நன்றி அவர்களுக்கு உரித்தாகுக. அதற்காக, எளிய தீண்டாதவர்களை எக்கேடு கெட்டு ஒழியினும் ஒழிக வென்று சும்மாயிருப்பதா உலக க்ஷேமத்திற்காகப் பாடு பட்ட கூட்டத்தவர்களிடமிருந்து எதிர் பார்ப்பது? காந்தியடிகளையும் இவ்விஷயத்தை விட்டு விடும்படி இனி "ப்ராமணன்" புத்தி கூறலாம்.

தீண்டாதவன் ஒருவன் நம்மிடம் வந்தால் நோயைப் போல் வெறுக்கிறோம். ஆனால் அவனே ஜான், தாமஸ் என்று பெயரை மாற்றிச் சட்டையைப் போட்டுக் கொண்டு வைதீகர் வீட்டுக்குப்போ

A

னாலும், அவனுக்கு நாற்காலி கொடுப்பார்கள், மனமுவந்து கைகுலுக்கு வார்கள், இதை விட அநியாயம் வேறுண்டோ? ஒரு பாதிரியின் முணு முணுப்பும், சிறிது தண்ணீரும் அவனைப் புனிதமாக்கிவிடுகிறது. அவன் சமமாகப் பாவிக்கப்படுகிறான். ஆனால், நம் மதத்தைக் கொண்டாடுகிற ஹிந்துவாயிருப்பானாகில், நாய் கழுதை முதலிய மிருகங்களைவிடக் கேவலமாய் நடத்தப் படுவான். மிருகங்கள் தெருக்களில் உலாவலாம். ஆறறிவுள்ள, பிறப்பு, இறப்பு ஒரே மாதிரியுள்ள, சகோதரர்கள்—எளிய பறையர்கள் அவ்வழி செல்லக் கூடாதாம். இதைத் தடுக்க பத்திரிகைகளும் சங்கங்களும் ஏற்பட்டிருப்பது மற்ற நாட்டார்கள் நம்மைப் பார்த்துச் சிரிப்ப தற்கே? முடிவில் " ப்ராமணன் "

" இனி இம் மாதிரியான விஷம வார்த்தைகளைப் பொருட் படுத் தாம லிருந்தால் இவரைப் போன்றவர்கள் நம்மை அடியோடு ஒழித்து விடுவார்கள் என்பதை பிராமணர்களும் மற்ற வைதீக ஹிந்துகளும் மனத்தில் வைத்துக் கொள்ளட்டும். பத்திரிகையில் கண்டனம் கூறி விட்டுச் சும்மாயிருந்தால் போதாது. எல்லோரும் ஒன்று சேர்ந்து அவ ரோடு அவர் காரியத்தில் ஒத்துழைக்காம லிருந்து அவர் நினைக்கு மாறு அவ்வளவு சுலபமாக நாம் உதாஸீனம் செய்யப் படக் கூடியவர் கள் அல்ல வென்பதைக் காரிய மூலமாக அவருக்கு நிரூபித்துக் காண் பிப்பது அவசியம் "

என்று போர் முழக்கம் செய்கிறான். " ப்ராமணன் " காந்தியடி களின் ஜீவிய சரித்திரத்தை மற்றொரு முறை திருப்பிப்பார்ப்பானாகில் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்வதுடன், இந்த வியாசத்திற்காக மன்னிப்பும் கேட்பா னென்பது நிச்சயம்.

இனியாவது, " ப்ராமணனை"ப் போன்ற சமூகப் பத்திரிகைகள் வீணகப் போராட்டத்தைப் பெருக்காது, காந்தியடிகளைத் தூஷியாது, அன்பே மதம், அன்பே சிவம் என்ற கொள்கையைக் கடைப்பிடித்து அன்பைப் பெருக்கப் பாடுபட வேண்டும். தமிழ் நாட்டில் சமூகச் சச்சரவுகளைப் பெருக்காம லிருப்பது நலம். தமிழ் நாடு வாழ்க! அன்பு பெருகுக !

பத்திராசிரியர்.

நம்பிக்கையான உயர்ந்த

பாக்கெட் லீவர் கெடியாரம்

ரூ. 3-12-0 ரூ. 3-12-0

ஒரு வருஷம் உத்தரவாதம்.

ஐந்து வருஷங்களுக்குமேல் உழைக்கக் கூடிய உறுதியான இக்கெடியாரத்தை யிந்த சமயம் வாங்கத்தவறுதீர்கள். லீவர் கெடியாரம்; பின்புறம் கண்ணுடியுள்ளது, முன்புறம் தடித்த கண்ணுடி யுள்ளது, 17"ஸைஸ் எநாமல் டைல், ஒரு சிறிய அழகிய பெட்டியில்வைத்து அனுப்பப் படுகிறது. கடியாரத்துடன் எங்கள் உத்தரவாதம் எழுதியனுப்பப் படுகிறது. விலை ரூ. 3-12-0 தான் என்பதைக்கவனிக்கவும். இன்றே எழுதுங்கள்.

ஜலால் அன் சன்ஸ்,
பெயர் பெற்ற கடியார வியாபாரிகள்,
61, ராட்டன் பஜார், சென்னை.

பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

மஹா சந்தனுதித் தைலம்

தைலங்களுக் கெல்லாம் தலைமை யானது!
மூளைக்கு மிகப் பயனுள்ளது!!

இம் மகா சந்தனுதித் தைலத்தை அரசர்களும், ஆங்கில மருத்துவர்களும், ஐக்கோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து நற்குணங்களைப் புகழ்ந்து கூறி யிருக்கின்றார்கள். அவைகளை நமது மருந்து விலைப்பட்டியின் நன் மதிப் பிதழில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி	1-க்கு	ரூ.	4–0–0.
12	,,	,,	2–4–0.
6	,,	,,	1–3–0.

பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்
தமிழ் மருத்துவ சாலை,
220, தங்கசாலைத் தெரு, சென்னை.

கவனியுங்கள் ! புதிய நாவல் !

தக்க லாபம்

"லக்ஷ்மி" சந்தாதார்களுக்கு மட்டும் கீழ்க்கண்ட புஸ்தகம் வாங்கினால் கமிஷன் உண்டு.

"லக்ஷ்மி" பத்திராசிரியரின் அபிப்பிராயத்தைக் கவனியுங்கள்.

லக்ஷ்மீ காந்தன் விலை ரூ. 2.

ஓர் இனிய செந்தமிழ்த் துப்பறியும் நாவல். இந்த நாவல் படித்ததும் திடுக் கிட்டுப் பிரமிக்கும் படிச் செய்ய வல்லது. வீரமும் சோகமும் ததும்பிக் கிடக்கின்றன. தமிழ் நாட்டில் இத்தகைய துப்பறியும் நவீனம் வந்ததே கிடையா தென்பது இதைப் படித்தவரின் அபிப்பிராயம். கதைப் போக்கு வெகு சொகுசு. அமைப்பு வெகு நேர்த்தி. காதலால் நேரிடும் விபரீதங்களைக் கண்ணீர் விடாமல் படிக்கவே முடியாது. புஸ்தகத்தைக் கையிலெடுத்தால் படித்து முடித்தா லொழிய கீழே வைக்க மனம் வராது. 400 பக்கங்கள். கிளேஸ் கடிதம். நேர்த்தியான அச்சு.

"லக்ஷ்மி" சந்தாதார்களுக்கு விலை ரூ. **1-12-0.**

லக்ஷ்மி பத்திராசிரியரின் அபிப்பிராயம்:—லக்ஷ்மீ காந்தன் வெகு ருசிகரமான நாவல் என்பதற்குச் சந்தேகமில்லை. இதை வரைந்தவர் நம் நண்பராக வேண்டும்.

தனம் அண்டு கம்பெனி,
5, ஏகாம்பர் தெருவு,
பார்க் டவுன் மதராஸ்.

மாதம் ஒன்றுக்கு ரூ. **100** சம்பாதிக்கும் வழி எப்படி?

சென்னைமா நகரிலிருந்து **வியாபார கேசரி** என்று ஓர் மாத சஞ்சிகை வெளியாகி இருக்கிறபடியால் அதில் ஒரு சந்தாதாரராக சேர்ந்து தருவித்துப் பார்த்தால் மேல் கண்ட ரூபாய் தடையில்லாமல் சம்பாதிக்கலாம். நாம் செய்யும் சேவகா விர்த்தியைத் தொலைக்க இதுவே நல்ல தருணம்.

வருஷ சந்தா உள் நாட்டிற்கு ரூ. 1 வெளி நாட்டிற்கு ரூ. 1-4. முன்பணம் அனுப்பினால் V. P. சார்ஜ் அணா 5 சகாயமாகும்.

விலாசம்:—**வியாபாரகேசரி ஆபீஸ்,**
1/33, தாதா முத்தியப்பன் தெருவு, மதராஸ்.

தீபாவளி! தீபாவளி!!

பாலாமணி பட்டுப் புடவை.

இந்தப் புடவை பார்ப்பவர் கண்களை விரைவில் கவரும் அழகு வாய்ந்தது. புடவை எந்தக் கலரோ, அதே கலரில் உடலில் பட்டுப் பூக்கள் போட்டிருக்கும். ஜரிகைக் கரையும் முகதலையு முள்ளது.

12 மு × 44" விலை ரூ. 24, 30, 35 முதல் 60 வரை.
16 மு × 44" விலை ரூ. 30 முதல் 100 வரை.

பெரியக் கோட்டடிப் புடவை.

நேர்த்தியான உடலில் தளதளப்பான ஜரிகைக் கொட்டடியும் ஜரிகை முகதலையு முள்ளது.

12 மு × 44" விலை ரூ. 28 முதல் 40 வரை.
16 மு × 44" விலை ரூ. 35 முதல் 60 வரை.

ஷை கொட்டடிக்குள் ஜரிகைப் புட்டாப் போட்டது. விலை ரூ. 95.

சிறியக் கோட்டடிப் புடவை.

இப்புடவை முழுவதும், பெரியக் கொட்டடியைப் போல் உடலில் மட்டும் விலைக்குத் தகுந்தாற் போல் ஜரிகைக் கொட்டடி நெருக்கிப் போட்டிருக்கும்.

12 மு × 44" ரூ. 35 முதல் 100 வரை.
16 மு × 44" ரூ. 44 முதல் 125 வரை.

கே. எஸ். முத்தையா கம்பெனி,
சில்க் அவுஸ், காசி.

அ ன் வ ர ஞ் ச ன்

எல்லா விதமான நோய்களுக்கும் வலிகளுக்கும்
அவசியமான மருந்து

ஒரு தடவை பரீட்சித்துப் பாருங்கள்.

புட்டி 1-க்கு விலை அணா 6. டஜன் 1க்கு ரூ. 4.

அன்வரஞ்சன் டிப்போ.
112, அம்மன் கோவில் தெரு, ஜி. டி. மதராஸ்.

B

இனாம்!
உயர்ந்த பெரிய
டேபில் கெடியாரம்
இனாம்!!

இனாம்!
உயர்ந்த பெரிய
டேபில் கெடியாரம்
இனாம்!!

தி 'வேம்லி" ரிஜிஸ்டர் செய்த உயர்ந்த
பொன் நிப்புள்ள பவுண்டன்
பேனா 1-க்கு ரூ. 3-8-0

நமது கிங் ஜார்ஜ் இளவரசரால் பரிசோதிக்கப்பட்டது!

500 நர்சாக்ஷி பத்திரங்கள் கொண்டது! இந்தப் பவுண்டன் பேனா ஆல்கனைட் சறையுள்ளதும், 14 காரட் (கோல்ட்) நிப்புள்ளதும், எழுத்து வேலைகள் சுரு சுருப்பாய் எழுதுவதர்க்கும், நெடு நாள் வரை உழைக்கக் கூடியதும் உயர்ந்த நிக்கல் கிளிப்புடன் பார்வைக்கு அதிக கெம்பீர மாயும் ரூபாய் 10 மதிப்பிடக் கூடியது. இப்பேனாவைப் போல் இது வரையில் கண்டிருக்க மாட்டீர்கள் எனக் கருதவும். மேற்படி பேனா 1-க்கு ரூபா 3-8-0க்கு வாங்கு வோருக்கு பெரிய டேபில் டயம் பீஸ் இலவசமாய் தரப்படும். இரண்டு பேனா ரூ. 7-க்கு வாங்குவோருக்கு 18 காரட் ரோல்டு கோல்டு பூவேலை செதிக்கிய உன்னத பாக்கட் கெடியாரம் இலவசமாய் தரப்படும். ஷை டேபில் டயம்பீஸ் தனிவிலை ரூ. 4-8-0. ஷை பாக்கட் கெடியாரம் தனியாய் விலை ரூ. 8-8-0. கெடியாரங்களுக்கு 5-வருஷம் காரண்டியுடன் அனுப்பிக்கப்படும். தருவித்து திருப்தியில்லாதவர்கள் திருப்பி யனுப்பி தங்கள் பணத்தை வாபீஸ் பெரலாம்.

விலாசம் :—

ஓ. எம். ஷி. கம்பெனி,

(23-வது பீட்) மதராஸ்.

ஸ்ரீமத் வால்மீகி

இராமாயண வசனம்

பண்டித நடேச சாஸ்திரியாரால் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டுப் பிழையறப் பரிசோதித்துப் பிரசுரம் செய்யப்பட்டது. ஸ்திரீ களும் சிறுவர்களுங்கூட எளிதில் தெரிந்து கொள்ளும்படியாகத் தெளிவான எளிய நடையில் வசனரூபமாய் இவ்வால்மீகி ராமா யணம் எழுதப்பட்டிருக்கிறது. மிகவிலையுயர்ந்த கனமான ஆண்டிக் காகிதத்தில் அச்சிட்டு நேர்த்தியான காலிகோவில் 6-காண்டங்களும் தனித் தனியாய் அழகாய் பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது.

பாலகாண்டம் :	ஆரணியகாண்டம் :	சுந்தரகாண்டம்
அயோத்தியாகாண்டம் :	கிஷ்கிந்தாகாண்டம் :	யுத்தகாண்டம்

இந்த ஆறு காண்டங்களடங்கிய செட்டின் விலை ரூ. 15 0 0
பாராயணத்துக்கு சுந்தரகாண்டம் மாத்திரம் தனியே
கொடுக்கப்படும் ரூ. 2 0 0

இன்னும் இதர தமிழ் நாவல்களும் கிடைக்கும்.

கே. மகாதேவன்,
1, ராமசாமி பிள்ளை தெரு, வேப்பேரி போஸ்ட், சென்னை

ஆந்திரா ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட்.,
(டாக்டர். ஏ. லக்ஷ்மீபதி பி. ஏ. எம். பி. ஸி. எம்.
பிஷக் ரத்ந அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது.)

ஸ்தம்பனவடி : (Specific for Spermatarrhoea)

ஒரு புட்டி சாப்பிட்டால் ஜீரண சக்தியையும் தேக பலத்தை யும் தாது புஷ்டியையும் கொடுக்கும். மூன்று நாட்களில் சுக்கிலஸ் கலிதத்தைப் போக்கி விடும் 25 மாத்திரை ரூ. 2-0-0.

ஸ்வாசகுடாரி : (Asthma specific and Tuberculosis.)

ஸ்வாஸகுடாரி (ஆஸ்த்மா) லேகியமும் சித்தபஸ்பமும் 25 நாள் மருந்து ரூ. 8. ஷை பத்து நாள் மருந்து ரூ. 4.

இரைப்பு, காசம், க்ஷயம், பலஹீனம் முதலியவைகளை வேரு டன் தொலைத்து மறுபடியும் வராமற் செய்யும். குணமில்லையென்று ருஜுப்படுத்துவோருக்குப் பணம் வாபீஸ் செய்யப்படும். வியாதியஸ் தர்கள் தங்கள் வியாதிகளுடைய குணவிசேஷங்களைத் தெரியப்படுத் தினால் தகுதியான மருந்தைத் தபால் மூலமாக அனுப்பி சௌக் கியப்படுத்தப்படும்.

கேட்லாக் இனாம்.

வைத்தியபதி கோட்டா ஜெயராம் நாயுடு,
ஆந்திர ஆயுர்வேத பார்மஸி லிமிடெட்,
159, பிராட்வே, மதராஸ்.

இங்கிலீஷ்-தமிழ்

வித்தியா மாலிகை

1, 2, 3, வாசகங்கள்.

இங்கிலீஷ் படிக்க வில்லையே என்ற கவலை வேண்டாம். தங்கள் சொந்த ஜோலிகளுக் கிடையூறின்றி தாங்களே பிறர் உதவியில்லாமல் சுயமாய் கற்றுக் கொள்ளக் கூடிய முறையில் இங்கிலீஷ் வார்த்தைகள், வாக்கியங்கள் அவைகளின் உச்சரிப்புக்களையும் தெளிவாய் தமிழ் எழுத்தில் காட்டி யிருப்பதோடு ஆங்காங்கு இலக்கண விதிகளையும் சவிஸ்தாரமாய் கூறியிருக்கிறோம். இம்மாதிரியான புஸ்தகங்கள் இதுவரை வெளிவந்தது கிடையாது. முதல் வாசகம் விலை அணா 6 2-வது 8, அணா 3-வது அணா 10. வி. பி. சார்ஜ் அணா 6. ஏககாலத்தில் ஷை மூன்று புஸ்தகங்களையும் வாங்கினால் சங்கிலிப் பின்னல் போல் கையெழுத்து விர்த்தியாகக் கூடியதும் ஸ்கூல்பைனல்மாணாக்கனுக்கு ஒப்பந்தம் தானாக எழுதிக் கொள்ள திறமை ஏற்படும் படியான 32 பக்கங்கள் கொண்ட நூதன முறை இங்கிலீஷ் காப்பி புஸ்தகம் ஒன்றைச் சேர்த்து ரூ. 1-14-0க்கு வி. பி. யில் அனுப்பப்படும்.

V. S. K. சுவாமி அன் சன்ஸ்,
புக்செல்லர்ஸ், விளாத்திகுளம் P. O.
(*via.*) கோயில்பட்டி S. I. Ry

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்

ஸ்திரீகளுக்கு சாதாரணமாயுண்டாகும் கர்ப்பகோசத்திற்கு சம்பந்தப் பட்ட வியாதிகளைத் தீர்த்து, மாதவிடாய் கிரமமாய் ஏற் பட்டு ஆரோக்கிய மான குழந்தைகளைப் பெற விரும்பும் மாதர்களெல்லாம்,

கர்ப்பாமிருத சூரணம்

சாப்பிட வேண்டும். 10 தோலா மருந்தடங்கிய டப்பி விலை ரூ. **2.**

பிறந்த குழந்தைகளை எவ்வித நோய்களும் வராமல் காப்பாற்றி பலமும் அழகும் வாய்த்திருக்கும்படி செய்ய விரும்பும் ஒவ்வொரு தாயாரும் தங்களுடைய குழந்தைகளுக்கு நமது,

பாலபுஷ்டிகரண வடிகா

என்னும் மருந்தைக் கொடுக்க வேண்டியது. இது குழந்தைகளுக்கு அமிர்தம் போன்ற ஆகாரம்.

120 மாத்திரைக ளடங்கிய டப்பி விலை ரூ. **1.**

முழு விபரங்களடங்கிய கிரய ஜாபிதா இனாமாய் அனுப்பப்படும்.

ராஜ வைத்திய நாராயணஜீ கேசவஜீ,
57, சைனாபஜார், மதராஸ்.

அச்சுவேலைகள்

வெகு அழகாகவும் சுத்தமாகவும் செய்யப்படும்.

கார்டு, லெட்டர் பேப்பர், நோட்டீஸ், புத்தகங்கள், பத்திரிகைகள், கணக்குப் புஸ்தகம், பேரேடு குறிப்பு இன்னும் எவ்விதமான அச்சு வேலைகளும் கெடுப் பிரகாரம் சப்ளை செய்யப்படும்.

அச்சிடவேண்டிய விவரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்:—வெஸ்ட் அண்டு கோ.,

மவுண்ட் ரோடு : : சென்னை.

கேஸரியின்

லோத்ரா.

கர்ப்பாசய ரோக நிவாரிணி

இதனுபயோகத்தால் குணம் கைக்கொண்ட பெண்மணிகள், இதை ஸ்திரீகளுக்கோர் வரப்பிரசாதினி யென்றும் அதிசிரேஷ்டமான அவுஷத மென்றும், விலையில்லா ஆபரண மென்றும் சொல்லுகிறார்கள். ருதுசூலை, அகாலபஹிஷ்டி, ருது சிராவம் ஜாஸ்தி அல்லது குறைச்சலாய்ப் போவது, பஹிஷ்டை தடைபட்டுப் போவது, வெண் ரக்தப் போக்கு, கர்ப்பஸ்ராவம், அகாலப் பிரசவம், கருப்பை நழுகிவிடுதல், கர்ப விரணம், ருது சூலையினால் வயிற்றில் உண்டாகும் கட்டி, மூர்ச்சை, சரீரம் பருத்தோ அல்லது மெலிந்தோ போவது, கணச்சூடு, சந்தான மில்லாமை, மலபத்தகம், இருமல், உப்பஸம், மேஹஜ்வரம் முதலிய சமஸ்த ரோகங்களும் இந்த **லோத்ராவி** னுபயோகத்தால் வெகு நம்பகமாய் நிவர்த்திக்கப்படும். இதன் விலை பெரிய புட்டி (12 அவுன்ஸ்) ரூ. 3—0—0

சிறிய புட்டி (6 அவுன்ஸ்) ரூ. 1–10—0

கேஸரி குடீரம், ஆயுர்வேத ஔஷதசாலை,

எழும்பூர், மதராஸ்.

A.

S.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள்.

ஒரு சிட்டிகை யெடுத்து காலணா மூக்குத்தூளுடன் கலந்தால் அதிக யின்பமான சுகந்த வாசனையைத்தரும். கண்டத்துக்கு மேற்பட்ட 96-வியாதிகளை கண்டிக்கும். இந்தத் தூள் எக்காலமும் கெடாது. எந்தக் கம்பெனிகளிலாவது வாங்குபவர்கள் எ. எஸ். மார்க்கைக் கவனித்து வாங்கவும்.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணா 4 ஷை டஜன் 1-க்கு ரூ. 2-4 ஷை சேர் 1-க்கு ரூ. 3.

எம். ஜே. பரிமள மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணா 3 ஷை டஜன் 1-க்கு ரூ. 2 ஷை சேர் 1-க்கு ரூ. 1-8.

பொன் வெள்ளி மெடல்கள் பெற்ற

எ. எஸ். முகம்மத் சம்சுத்தீன் சாயபு

106, சவுக்கார் பேட்டை, தபால் பெட்டி நெ. 1201, மதராஸ்.

உத்திரவாதமுள்ள

கையில் கட்டும் கடியாரம். தங்கமுலாம் பூசியது. உறுதியான வேலை. பல வருஷங்கள் உழைக்கும். இன்றே ஒரு கடியாரத்திற்கு ஆர்டர் செய்யுங்கள். விலை ரூபா **8-8.**

SANDERSON & CO.,

Post Box No. 156 MADRAS.

நூதன தமிழ் நாவல்கள்.

	ரூ.	அ.
ஞானசெல்வாம்பாள் 3 பாகம்	6	6
மதனாம்பாள் 2 பாகம்	3	0
லோகநாயகி	1	0
விளையாட்டுச் சாமான்	1	0
பவளத்தீவு 2 பாகம்	3	0
தபால் கொள்ளை	0	14
இந்திராபாய்	2	8
அமராவதி 2 பாகம்	4	0
மஞ்சள் அறைமர்மம்	1	8
கற்கோட்டை	2	0
பூங்கோதை	0	10
வீரநாதன்	0	12
கனகபூஷணம் 2 பாகம்	3	8
கமலசேகரன்	1	12
தினகரசுந்தரி	1	0
ரத்னபுரி ரகசியம் 2 பாகம்	4	0
மதனபூஷணம்	1	0
சுவர்ணாம்பாள்	0	12
தேவசுந்தரி	1	4
குணசுந்தரன்	0	12
பத்மாஸனி	0	14
ஆனந்தஸிங்	2	0
மின்சாரமாயவன்	1	8
கைவல்லிய நவநீத வசனம்	1	8
ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருடைய சரிதையும் உபதேசமும்	1	12
சகோதரவாஞ்சை	0	6

	ரூ.	அ.
விநோத கதைத்திரட்டு	0	5
கலியாண சந்தடியில் தாலி கட்ட மறந்த கதை	0	5
நரிவிருத்தம் மூலம் உரை	0	4
ஸ்ரீபாலன்	0	10
ராமாயணஒடம்ஏலப்பாட்டு	0	3
உதயணன்	0	8
போஜசரித்திரம்	0	5
தசக்கிரீவன்	0	14

	ரூ.	அ.
குசேலோபாக்கியான வசனம்	1	0
மெடீரியா மெடிகா	3	0
அற்புத நவநீதம்	1	0
மலையாளபகவதி	1	0
கம்பராமாயண சங்கிரக வசனம்	2	0
கனகரத்தினம்	0	8
கண்டிராஜா நாடகம்	0	12
நளினசுந்தரி	0	10
மதுசூதனன்	0	10
அகட விகட விலாச விநோதம்	0	10
துயராளன் கதை	0	12
பூலோக லக்ஷ்மி	0	10
சதானந்தர்	1	4
ஜீவகன் வசனம்	1	0
கர்ணன் சரிதை	0	12
பீஷ்மவிஜயம்	0	10
வீரத் தன்மையுள்ள ஹிந்து மாது சிரோமணிகள்	0	10
கீர்த்தி சிங்கன்	0	8
அரிச்சந்திரன் சரித்திரம்	0	8
நீலக்கொடி	0	5
மணவாளன்	0	3
பரசுராமன்	0	3
சிசுபாலன்	0	8
அங்கதன்	0	4
தசாவதாரம்	0	6
கிருஷ்ணன் தூது வசனம்	0	8
சீமந்தனி	0	8
சத்தியவசனி	0	4
கருணாகரரும் சத்திய சீலரும்	0	8
கண்ணன் பக்தி ரஸக் கீர்த்தனை	0	2
விமலன்	0	4
கண்ணபிரான்	0	4
செயுட்பாடத்திரட்டு	0	4

ஆரியன் புத்தக சாலை,

திருவல்லிக்கேணி, மதராஸ்.

150 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை

மாதம் சம்பாதிக்கலாம்!

ஏன் கவலைப்படுகிறீர்கள்?

நம் தேச முன்னேற்றத்தைக்கருதி நமது அனுபவ "கைத்தொழில்" முறைகளும், புதிய யோஜனைகளும், யாவருக்கும் இனாமாக அனுப்பி வருகிறோம். 1-அணா தபால் முத்திரையுடன் உடனே தங்கள் விலாசத்தை தெரிவியுங்கள். எந்தத் தேசத்து தபால் முத்திரையா யிருந்தாலும் அனுப்பலாம்

புரோபசர் கே. எஸ். வி. நாத், F. I. A. M. Se.

"கைத்தொழில் கல்விச்சாலை"

(டிபாட் 10), சிவகெங்கை. S. I.

"அமிர்த நஸ்யம்"

என்னும் மகுடம் புனைந்த சுகாதார சுகந்த பரிமள மூக்குத்தூள், ஜலதோஷம் பீனிசம் ஒற்றைதலை நோய்,மண்டைக்குத்தல், கண்எரிச்சல், முதலிய உபத்திரவங்களை கண்டிப்பதுடன் சதா உபயோகித்து வருவதால் மேற்கண்ட நோய்களைச் சேரவிடாது. ஒரு சிட்டிகை தூளை எடுத்துக் காலணா சாதாப்பொடியில் கலந்து கொண்டால் எல்லாம் பரிமளிக்கும். எல்லாப் பொடிக் கடைகளிலும் மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

புட்டி 1-க்கு அணா 0 4 0

N. V. ஷண்முகம் கம்பெனி,

தபால் பெட்டி 555, மதராஸ்.

டிக்—டாக்.

பெயர் பெற்றதும் ஜெர்மனி தேசத்திலிருந்து வரவழைக்கப் பட்டது. சுவற்றில் மாட்டக் கூடிய கடியாரம். மிக்க உயர்ந்தது. காலத்திற்குச் சரியான மணியைக் காட்டக் கூடியது இது ஒன்றே. விலை ரூ. 2-12.

5 வருட உத்திரவாதமுள்ள ரோல்டு கோல்டு கைக் கடியாரம் 11 கல்லிழைத்தது ரூ. 12-8.

பிரிட்ஜ் ழவர் மெண்ட்

3 வருட உத்திரவாத முள்ள, தங்க கிலிட் கையிலணியும் கடியாரம் விலை ரூ. 7.

உயர்ந்த "டீ" டைம் பீஸ் விலை ரூ. 2-4.

டுக்கரையின் அழகிய போட்டோக்கள் ன் விலை ரூ. 2-4.

Emarald Watch Co, P, T. Madras.

கம்பளிப் போர்வைகள்.

அசல் கம்பளி, மிருதுவானது. நீடித்து உழைக்கக் கூடியது. குளிருக்கு அடக்கமானது. சிவப்பு, பச்சை, மஞ்சள், ஊதா முதலிய பல கலர்களில் கிடைக்கும். 6 முழம் நீளம் 3 முழம் அகலமுள்ளது.

1	ஜெ.	விலை ரூ.	11	முதல்	15	வரை.
2	,,	,,	10	,,	11	,,
3	,,	,,	8½	,,	10	,,

கம்பளிச் சட்டை.

முறுக்கு கம்பளி நூலாய் செய்யப்பட்டது. குளிருக்கு அடக்கமானது. இதை அணிந்து கொண்டால் சீதளம் அண்டாது. தோட்டங்களில் இருப்பவர்களுக்கு அவசியமானது. கிரே கலர்

விலை ரூபா 4-8.

உசத்தி வெள்ளை ரூ. 12 முதல் 18 வரை.

TRAVELLING RUGS.

நயமான கம்பளி, நல்ல குளிரில் போற்றிக் கொள்ள உதவும். கலர் கிரே, கறுப்பு, சிவப்பு.

5 மு. நீளம் 3 மு. அகலம் ரூ. 5.

கம்பளி ஆசனம்.

ஜெபம் செய்யும்போது ஆசாரமாய்ப் போட்டு உட்காரக் கூடியது.

விலை அணா 12, ரூ. 1, 1½.
உசத்தி ரூ. 3½ முதல் 5 வரை.

LADY'S SHAWL.

பெண் பிள்ளைகளுக்காக ஸ்பெஷலாய் தயாரித்தது. 5 முழம் நீளம் 2½ முழம் அகலமுள்ளது. அழகான கலர்களிலும் கிடைக்கும்.

போர்வை 1-க்கு விலை ரூபா 8.

மடி தாவளி.

இது அசல் கம்பளியால் நெய்யப்பட்டது. வைதீக பிராமணர்கள் ஸ்நானம் செய்ததும் மடியாகத் தரித்துக்கொள்ள உபயோகமுள்ளது.

5 முழம்	24	இஞ்சு	அக. ரூ.	2		10 முழம்	40	இஞ்சு	அக. ரூ.	7
6 ,,	24	,,	,,	2½		16 ,,	40	,,	,,	12
7 ,,	29	,,	,,	3						
8 ,,	40	,,	,,	5½		18 ,,	40	,,	,,	14

கே. எஸ். முத்தையா & கோ.,

சில்க் ஹவுஸ் - - காசி.

புருஷன் : என்னடி அது ! நம் ஊரில் மருந்தில்லாமலா, சென்னைக்கு எழுதிவிட்டாய்.

மனைவி : ஆம். எத்தனையோ மருந்துகளை புட்டி புட்டியாய் வாங்கிப் பார்த்தாச்சுது. ஒன்றும் குணமில்லை. அடுத்தாத்து சேஷி ஒற்றத் தலைவலியால் பட்ட பாடு, ஈசனுக்கே தெரியும். ஒரு மருந்துக்கும் குணப்படவில்லை. கடைசியில், குடும்பாஞ்சனம்தான் கேட்டது.

புருஷன்: நல்லது; மருந்துப் புட்டி என்ன விலையாகப் பெற்ருய்?

மனைவி : ஜாஸ்தி ஒன்றுமில்லை. விலை அணா 8 தான். இனி, நம் மாத்தில், ஜல தோஷம், சளி, மண்டையிடி முதலியன ஒன்றும் வராது. உங்கள் சிநேகிதர்களுக்கு விலாசத்தை தெரிவியுங்கள்.

குடும்பாஞ்சன் டிபோ,

பார்க் டவுண், சென்னை.

Printed at Vest & Co., Madras and Published by K. S. Sundaram.